www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16-31 மார்ச் '90
5 _ 9
விலை ரூ.2

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

## குடிகெடுக்கும் கருணாநிதி!




படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




● 5-ஆம் ஆண்டு விழாவிற்குப் பிறகு அட்டைப்படம் முதல் இதுதான் இன்றைய இந்தியா வரை அனைத்தும் மிகச் சிறப்பான அம்சங்களுடன் ஏன், புதிய மாற்றங்களுடன் கூட தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளாக வருகின்றன. அதே சமயத்தில், பழைய தவறாகிய அச்சுப்பிழை தொடர்கிறது. குறிப்பாக, இதழ் 5/3-ல் ஜெ.வி.பி. கட்டுரை முன்னுரையில் 'கொள்கை' என்பதற்குப் பதிலாக 'கொள்ளை' என அச்சிடப்பட்டிருக்கிறது.

**த.இன்பசுரபன்** — **கடலூர்**

*(இனிமேல் இது போன்ற பிழைகள் நேராவண்ணம் எச்சரிக்கையாக இருக்க உறுதி அளிக்கிறோம். — ஆசிரியர் குழு.)*

● நடுப்பக்கப் படமும் கட்டுரையும் சிறந்த வரவேற்பை பெறுகின்றன. தொடர்ந்து வெளியிட வேண்டும். அட்டையில் 'மார்க்சிய லெனினிய அரசியல் ஏடு' தொடர்ந்து தெளிவாக தெரியாத வண்ணம் அச்சிடப்பட்டு வருகிறது. இதை மாற்ற வேண்டும். மேலும், கேள்வி-பதில் படிப்பதற்கு ஏதுவாக வித்தியாசப்படுத்தி சிறிய, பெரிய எழுத்துக்களில் அச்சிட்டால் சிறப்பாக இருக்கும். மற்றபடி காஷ்மீர் பற்றிய கட்டுரை, இனவாதம் பற்றிய கட்டுரை, போலி கம்யூனிஸ்டுகளைப் பற்றிய கட்டுரைகள், 'கோர்பசேவ் முடிவு நெருங்குகிறது' கட்டுரை ஆகியன சிறப்பாக இருந்ததோடு பிறரிடம் அரசியல் விவாதம் செய்வதற்குரிய தகுந்த நேரத்தில் வெளியிட்டது பாராட்டத்தக்கது. மேலும் இதழ் எண் 5-5ல் வெளியான தலையங்கம், ஈழப் பிரச்சினையை சிறந்த முறையில் ஆய்வு செய்யப்பட்டிருந்தது.

**வாசகர் வட்டம்** — **திருச்சி.**

● குமுதம், ஆனந்தவிகடன் மற்றும் மஞ்சள் மசாலா ஏடுகளாலும், போலி அரசியல் ஏடுகளாலும், செல்லரித்து உளுத்துப் போய் நிற்கும் முதலாளித்துவ பாராளுமன்றத்தைத் தூக்கிப் பிடித்து, மக்களின் துயரங்களுக்கு தீர்வு இதுதான் என தமிழ்மக்களை ஏமாற்றி வருகிற நிலையில் சரியான பாதையில் மக்களை சிந்திக்கத் தூண்டும் பணியை செய்யும் புதிய ஜனநாயகத்தையும், தங்களின் முயற்சியையும் என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும், கேள்வி-பதில் பகுதியை நிறுத்திவிடாதீர்கள். ஏனெனில், மார்க்சிய சிந்தனையை எளிய முறையில் கொடுக்கும் சிறந்த வடிவமாக இருக்கிறது. வாழ்த்துக்கள்!

**பி.வி.ஸ்ரீரங்கன்** — **மேற்குஜெர்மனி**

● புதிய ஜனநாயகம் இதழில், இந்தியப் புரட்சிக்கு தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்து, ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறைக்கு ஆளாகி இன்னுயிர் ஈந்த புரட்சிகர தோழர்களை - தியாகிகளை இதழ்தோறும் அறிமுகப்படுத்துங்கள். இதனால் அணிகளுக்கு உற்சாகமும், உத்வேகமும் கிடைப்பதோடு மக்களிடத்தில் புரட்சியாளர்களை அறிமுகப்படுத்த வாய்ப்பாய் அமையும்.

**மேகலைநாதன்** — **திருவில்லிபுத்தூர்**

● மதுரை, தேவாரம், போடி கலவரத்தை யொட்டி சாதியுணர்வை தூண்டியதாக நமது அமைப்புத் தோழர்கள், இருவர் மீது போலீசு வழக்குப் போட்டு செய்த சதி செயலை, அவர்களுக்கு எதிராகவே திருப்பி மக்களிடம் அம்பலப்படுத்தியதை பத்திரிக்கையிலே வெளியிட்டதன் மூலம் எதிரியின் ஆயுதத்தை எதிரிக்கு எதிராக பயன்படுத்தும் முறையை தெரிந்துகொள்ள உதவியது.

**கே.கிருஷ்ணமூர்த்தி** — **வேதாரண்யம்**

● இதழ் எண் 5-6, 7ல் வெளியாகியிருந்த 'சந்தர்ப்பவாத கண்ணோட்டம்' என்கிற பெட்டிச் செய்தி எம்.சி.பி.ஐ. - கட்சியினரிடம் பேசுவதற்கு உதவியது. மேலும், 'பிரபாகரனும் - தமிழ் இனவாதக் குழுக்களும்' என்ற தலைப்பில் வெளியாகி இருந்த செய்தி பிரபாகரனை படம் பிடித்து காட்டியது.

**கே.பிச்சையா** — **பழமார்நேரி**

● தங்களது பத்திரிக்கையில் கட்டுரைகள், கருத்து கண்ணோட்டங்கள் மற்றும் செய்திகள் அனைத்தும் நியாயமான - நேர்மையான - சந்தர்ப்பவாதமற்ற முறையில் அமைந்துள்ளது. மேலும், தாமதப்படுத்தாமல் குறிப்பிட்ட காலத்தில் வெளியிட முயற்சி செய்யுங்கள்.

**நிவேஜ்** — **அடியக்கமங்கலம்**

## ராணிப்பேட்டை: 'பெல்' தொழிலாளர்களின் போராட்டம் வெற்றி

வேலூர் - ராணிப்பேட்டை 'பெல்' நிறுவனம் பிரமிப்பூட்டும் விளம்பரங்களுடன் '82 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. நேரடியாக 5000 பேருக்கு நிரந்தர வேலை, 10,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பு என்றார்கள். பகுதி விவசாயிகளின் குடும்பங்களுக்கு வேலையில் முன்னுரிமை தருவதாக சுமார் 1500 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தினார்கள். 8 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றளவும் நிர்வாகத்தின் வாய்ப்பந்தல் நடைமுறைக்கு வரவேயில்லை.

'89 ஆம் ஆண்டு வரையில், எந்த ஒரு தொழிற்சங்கத்தையும் நிர்வாகம் அங்கீகரிக்கவில்லை. நீடித்த போராட்டத்திற்கு பிறகு, 10.6.'89 அன்று நடந்த தேர்தலில், பி.ஏ.பி. ஸ்டாப் யூனியனும், இரண்டாவதாக பி.ஏ.பி. எம்ப்ளாயீஸ் ஜெனரல் டிரேட் யூனியனும் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. நிர்வாகம் தனக்கு எதிரான சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதால் அலறியது.

இத் தொழிலாளர்கள் பிரதிநிதிகளுடன், கலந்தாலோசிக்காமல், தன்னிச்சையாக தொழிலாளர்களின் மீது நிர்பந்தங்களை திணித்தது. நிர்வாகத்தின் திருட்டுத்தனங்களை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்திய இச்சங்கங்களை பழிவாங்க துடித்தது. முடியாமல், கோமாளித்தனமான நடவடிக்கைகளில் இறங்கியது. நிர்வாக முறைகேடுகள் வெளியாவதை தடுக்க, மிருகக்காட்சி சாலைபோல நிர்வாகம் கட்டிடத்தை சுற்றி வேலி அமைத்து உணவு நேரத்தை மாற்றி ஊழியர்களை பிரித்தது.

இவற்றை எதிர்த்த தொழிலாளர்கள், இந்த ஆண்டு ஜனவரியில் ஒருநாள் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்தனர். வெறிகொண்ட நிர்வாகம், போராடிய சங்க பிரதிநிதிகளுக்கு குற்றப் பத்திரிக்கை அனுப்பியது. சங்க உறுப்பினர்களுக்கு முறைகேடாக 8 நாள் சம்பளத்தை பிடித்துக் கொண்டது. ஒருவரை தற்காலிக வேலைநீக்கம் செய்தது.

பழிவாங்கும் நிர்வாகத்திற்கெதிராக 6.2.'90ல் உண்ணாவிரதம், மற்றும் 20.2.'90 முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்தனர். போராட்டத்தின் நியாயத்தை விளக்கி பகுதி மக்களிடையே பெருமளவில் பிரச்சாரம் செய்யப்பட்டது. மயக்கமடைந்தவர்களை போலீசு கைது செய்தது. தொழிலாளர்கள் மேலும் மேலும் போராட்டத்தை தொடர்ந்தனர். 18 நாட்கள் தொடர்ந்த போராட்டம், 9.3.'90 அன்று மாவட்ட கலெக்டர் முன்னிலையில் ஒருவார இழுத்தடிப்புக்குப் பிறகு ஒரு தீர்வு காணப்பட்டது.

போலிக் கம்யூனிஸ்டுக்களின் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் இப்போராட்டத்தில் தொழிலாளர்களிடம் தோலுரிந்து போனது. 'கறுப்பு சின்னம் அணிவது', 'தேநீர் புறக்கணிப்பு' என்று மூன்று நாட்கள் நடத்திவிட்டு சந்தடி இல்லாமல் அப்போராட்டத்தையும் கைவிட்டது. ''சங்கம் கேட்டுக் கொள்கிறது'' ''எச்சரிக்க விரும்புகிறது'' ''சுட்டிக்காட்ட விரும்புகிறது'' என்று நிர்வாகத்திற்கு தட்டி சவடால்விட்டு, தொழிலாளர்களின் நையாண்டிக்கு ஆளானது. அனைத்து தொழிலாளர்களும், துவக்கத்திலேயே வர்க்க உணர்வோடு ஒன்றுபட்டிருந்தால் நிர்வாகத்தின் அதிகார திமிர்த்தனத்தை ஆரம்பத்திலேயே நசுக்கி இருக்கமுடியும் என்பதையே இப்போராட்ட அனுபவம் காட்டுகிறது.

**தகவல்: ம.க.இ.க., வேலூர்**



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

9

16-31 மார்ச் '90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா:US$11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# குடிகெடுக்க.. அரசே நடத்தும் சாராய வியாபாரம்

மீண்டும் மதுவிலக்கை ரத்து செய்வது, சாராயக் கடைகளைத் திறப்பது என்று முடிவு செய்து அவசர சட்டம் ஒன்றைத் தி.மு.க. அரசு பிறப்பித்துள்ளது. ஏராளமான மாற்றங்கள், குளறுபடிகளுக்குள்ளாவது இந்த மதுவிலக்கு - சாராய விவகாரம். அதே போல அதிக அளவு லஞ்ச ஊழல் புகார்களும், சர்ச்சைகளும் நிறைந்த விவகாரம் இதுதான். குடியை ஒழிக்க வேண்டும் - பூரண மதுவிலக்கு என்கிற கொள்கையில் முக்கியமான அரசியல் கட்சிகளுக்கிடையே எவ்வித கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் எதிர்க்கட்சிகளாக இருக்கும் போது மதுவிலக்குக் கொள்கைக்காக வாதாடும் அதே கட்சிகள் ஆட்சிக்கு வந்தபிறகு மதுவிலக்கை ரத்து செய்து சாராயக் கடைகளைத் திறக்கின்றன. அதற்காக அவர்கள் கூறும் காரணங்களிலும் வேறுபாடு கிடையாது.

''மதுவிலக்குச் சட்டத்தின்படி உயர்ரக மதுவை ஓரளவு வசதியுள்ளவர்கள், 'பெர்மிட்' வைத்துக் கொண்டு குடிக்கிறார்கள். குடிப்பழக்கமுள்ள வசதியற்ற ஏழை மக்கள் கள்ளச் சாராயத்தைக் குடிக்கிறார்கள். விஷச் சாராயத்தைக் குடித்தும் பரிதாபகரமாகச் சாகிறார்கள். கள்ளச் சாராயமும் லஞ்ச ஊழலும் பெருகிவிட்டன. மதுவிலக்கை ரத்து செய்வதால் இவற்றைத் தடுக்க முடியும். அரசு வருவாயைப் பெருக்கி நல்வாழ்வுத் திட்டங்களுக்குச் செலவிட முடியும். மக்களுக்கு சுத்தமான, மலிவான மதுவாவது கிடைக்கும்''. மதுவிலக்குக்காக வலிந்து வலிந்து பிரச்சாரம் செய்த எம்.ஜி.ஆர். சாராயக் கடைகளைத் திறந்தபோது இதையேதான் சொன்னார். கருணாநிதியும் இப்போது இதையே சொல்லுகிறார்.

மதுவிலக்கை ரத்து செய்வதாக நேரடியாகச் சொல்லுவதற்குக் கூட இவர்கள் துணியவில்லை. மலிவு விலை அரசு மது, 'பெர்மிட்' முறை ரத்து ஆகிய சிறுமாற்றங்கள் என்பதாகத்தான் கருணாநிதியின் அவசரச் சட்டம் கூறுகிறது. இப்படித்தான் எம்.ஜி.ஆரும் வெவ்வேறு காரணங்களைக் கூறி ஏகப்பட்ட குளறுபடிகளைக் கொண்ட சட்டங்களை மாறி மாறிக் கொண்டு வந்தார். இவர்களுடைய ஆட்சிக் காலங்களில்தான் கள்ளச்சாராயம், விஷச்சாராய சாவுகள், லஞ்ச ஊழல்கள் பெருகிவிட்டதாக பிற கட்சிகள் சாடுகின்றன. ஆனால் அவை ஆளும் மாநிலங்களிலும் சரி, சட்டபூர்வ சாராயக் கடைகள் உள்ள போதும் சரி இதே நிலைதான்.

மதுவிலக்கை, சாராய ஒழிப்பை முக்கியமான அரசியல் கட்சிகள் அனைத்தும் ஆதரித்த போதும் எந்தக் கட்சியாலும், எந்த ஆட்சியாலும் அதை அமுலாக்க முடியவில்லை. இதற்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் இருப்பதாக எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். மதுவிலக்கையோ, சாராய சட்டத்தையோ அமுலாக்க வேண்டிய போலீசுத் துறையே அவற்றை மீறும் குற்றங்கள் செய்கிறது. சாராய வியாபாரிகளிடம் இருந்து முறையாக 'மாமூல்' வசூலிக்கப்பட்டு எல்லா மட்டங்களுக்கும் தவறாது, கிரமமாகப் பங்கு வைத்துப் பெறுகிறார்கள். சாராயத் தொழிலில் இருந்து விலகுபவர்களைக் கூட மிரட்டி ஈடுபடுத்தி 'மாமூல்' வசூலிக்கிறார்கள். 'சூரப்புலி' தேவாரம் தலைமையில் சாராய ஒழிப்பு சிறப்பு போலீசு படை அமைத்து காடுகளிலும் மலைகளிலும் 'ரெய்டு'கள் நடத்தி சாதனைகள் புரிந்ததாக கருணாநிதி பாராட்டினார். ஆனால் பண்ருட்டி, தட்டாஞ்சாவடி விஷச் சாராய சாவுகளுக்கே காரணம் அந்தப் படையினர்தான்! ஏற்கனவே கைப்பற்றி, விஷமாகிப் போன கள்ளச் சாராயத்தை சில்லரை வியாபாரி மூலம் போலீசார் விற்றதாலேயே பல உயிர்கள் பலியாயின!

உள்ளூர் அரசியல் தலைவர்கள் - பிரமுகர்கள் பினாமிகளை வைத்து, போலீசு துணையுடன் சாராயத் தொழிலைப் பெருமளவில் நடத்துகிறார்கள் என்பது ஊரறிந்த உண்மை. மதுவிலக்கு ரத்துச் செய்யப்படும் போதும் இவர்களே ஏலம் எடுத்து - 'லைசென்சு' வாங்கிக் கொள்ளையடிக்கிறார்கள்; அதோடு சாராய உற்பத்தி, விநியோகம், ஏலத்தின் மூலம் மேல்மட்டத் தலைமையும் கொள்ளையடிக்கிறது. ஆளும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் ஒருவரை ஒருவர் புகார் கூறும் போது இந்த உண்மைகள் வெளிவருகின்றன.

சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கள்ளச்சாராயம், லஞ்ச ஊழலை ஒழிக்க முடியவில்லை என்பதற்காக சமூகக் கேடான அத்தொழிலை சட்டபூர்வமாக்குவது எந்த வகையில் சரியானது? தனியார் கொள்ளையைத் தடுப்பதாக கூறிக் கொண்டு அரசே கொள்ளையிடுவது நியாயமா? கருப்புப்பணம், சூதாட்டம், விபச்சாரம் ஆகிய சமூகக் கேடுகளைக் கூட இப்படியே சட்டபூர்வமாக்கி வருகிறார்கள்! கள்ளச் சாராயம், விஷச் சாராயம் குடிகாரர்களின் உடல்நலத்திற்கு கேடு விளைவிப்பதால் நல்ல சாராயமாகப் பார்த்து அரசே உற்பத்தி செய்து விற்கும் என்பது எப்படி புத்திசாலித்தனமானது? சமூகக் கேடுகளை அரசே வளர்ப்பதா காதா? சாராயக் கடைகளைத் திறந்து அரசு வருமானத்தைப் பெருக்கி நல்வாழ்வுத் திட்டங்களை அமுலாக்குவார்களாம்! உழைப்பாளிக்கு போதையேற்றி அவனிடமிருந்து பறித்த வருமானத்தைக் கொண்டு சத்துணவு, இலவச அரிசி - வேட்டி - சேலை என்று தானதர்மங்கள் நடத்துவது எவ்வளவு அயோக்கியத்தனமானது? அரசுக்கு நியாயமாக வரவேண்டிய வருமானம் லஞ்ச ஊழலாக வேறுபக்கம் போய் விடுகிறதே என்று உரிமை பாராட்டுகிறார்கள்! என்ன வெட்கக் கேடு!

இவற்றை விட முக்கியமானவை: எந்தக் கட்சியானாலும், எந்த ஆட்சியானாலும் அவை நிறைவேற்றும் சட்ட திட்டங்களை அமுலாக்கவே முடியாது; அச்சட்டங்களை மறுப்பதோடு அவற்றுக்கு எதிராக இயங்கும் போலீசு - அதிகார வர்க்க நிர்வாக எந்திரத்தைக் கொண்டு சமூக நன்மைக்கான எதையும் செய்ய முடியாது: இந்த நிர்வாக எந்திரத்தோடு சேர்ந்து கூட்டுக் கொள்ளையில் ஈடுபடும் ஓட்டுக் கட்சிகள் எதையும் நம்பமுடியாது. மதுவிலக்கு - சாராய விவகாரம் மட்டுமே இந்த உண்மைகளை விளக்கி விடுகிறது. ◆

படிப்பகம்

www.padippakam.com

# இந்துமதபா.ஜ.க. வெற்றி புரட்சிகர சக்திகளுக்கு எச்சரிக்கை

நடந்து முடிந்த நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களைச் சற்று ஆழமாகப் பரிசீலிக்கும் அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர்: ''இந்தத் தேர்தல்களில் உண்மையில் வெற்றிபெற்ற கட்சி பாரதீய ஜனதாக் கட்சிதான்!'' வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தளத்தில் சாதனைகள் குறைபாடுடையவை, குழப்பமானவை, தற்காலிகமானவை என்று தெளிவாகத் தெரிகின்றன.

ராஜீவ் தலைமையிலான காங்கிரசுக்கு அடுத்து அதிக இடங்களைப் பிடித்துள்ளது ஜனதாத்தளம்; மத்தியிலும், உத்திரப்பிரதேசம், பீகார், ஒரிசா, குஜராத், ஆகிய நான்கு மாநிலங்களிலும் ஜனதாத்தளம் ஆட்சிகள் அமைத்துள்ளது; இருந்தாலும் தேர்தல்களில் அது அடைந்துள்ள வெற்றி ஊனமுடையது, பலவீனமானது, ஒரிசா தவிர மற்ற மாநில, மத்திய ஆட்சிகள் நித்திய கண்டம் - பூரண ஆயுசு என்ற நிலைமையிலேயே உள்ளன. பாரதீய ஜனதா, போலிக் கம்யூனிஸ்டுகள் ஆகிய இரு கடைகோடிக் கட்சிகளின் ஆதரவின்றி இந்த ஆட்சிகள் ஒரு நாளும் நீடிக்க முடியாது.

இந்தத் தேர்தல்களினால் ஏற்கனவே அது ஆட்சியில் இருந்த கர்நாடகாவை இழந்திருக்கிறது; அரியானா ஆட்சி ஆட்டங்கண்டு கொண்டிருக்கிறது. மத்தியிலும் மாநிலங்களிலும் உட்கட்சி குடுமிப்பிடி சண்டைகளால் திணறுகிறது. இவ்வளவு பலவீனமான நிலையில் மத்திய, மாநில அரசுகள் இதுவரை இருந்ததே கிடையாது.

காங்கிரசு, ஜனதாத்தளம் மட்டுமல்ல போலிக் கம்யூனிஸ்டுக்களையும் விடப் பல பன்மடங்கு சாதகமான நிலைமையில் பாரதீய ஜனதாக் கட்சி உள்ளது. அதன் பரம எதிரிகளும் கூட இதை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். நாட்டின் நடு நாயகமான மத்தியப் பிரதேசத்திலும், இமாசலப் பிரதேசத்திலும் அசைக்க முடியாது பெரும்பான்மை பெற்ற ஆட்சிகளைப் பிடித்துள்ளது. ராஜஸ்தானில் அதன் தலைமையிலான கூட்டணி ஆட்சியும்; குஜராத்தில் ஜனதாதத்தளத்துடன் ஏறக்குறைய சமமான பலத்துடன் கூட்டணி ஆட்சியும் அமைத்துள்ளது.

மராட்டியத்தில் சிவ சேனாவுடன் கூட்டுச் சேர்ந்து, ஆளும் காங்கிரசையே அச்சுறுத்தும் அளவு வளர்ந்துவிட்டது. உத்திரப் பிரதேசம், பீகார், அரியானாவில் மூன்றாவது பெரிய கட்சியாகவும் அங்கும், மத்தியிலும் உள்ள ஜனதாத்தள ஆட்சிகளின் தலைவிதியைத் தீர்மானிப்பதாகவும் பாரதீய ஜனதா உள்ளது. ஆந்திரா, கர்நாடகா, காஷ்மீர், பஞ்சாப் மாநிலங்களில் ஒரு சக்தியாக வளர்ந்துள்ளதோடு வழமையான 'இடதுசாரி' ஆதரவு மேற்கு வங்கம், கேரளாவிலும் ஊடுருவிக் காலூன்றியுள்ளது.

''அடுத்து வரும் தேர்தல்களில் பல மாநிலங்களிலும் மத்தியிலும் ஆட்சியைப் பிடிக்கும் எதிர்கால நம்பிக்கையுடைய ஒரே கட்சி பாரதீய ஜனதாதான்!'' என்று முதலாளித்துவ அரசியல் கணிப்பாளர்கள் கூறுகிறார்கள். இது மிகைப்படுத்தப்பட்ட கணிப்பு என்று கூறிவிட முடியாது.

பாரதீய ஜனதாக் கட்சியுடைய வெற்றிக்கான காரணங்கள், அதன் விளைவுகள் பற்றி அரசியல் விமர்சகர்கள் அலசுகின்றனர். நாட்டின் ஜனநாயக, புரட்சிகர சக்திகள் அக்கறையுடன் கவனிக்க வேண்டிய விவகாரம், பாரதீய ஜனதாக் கட்சியின் இந்தப் பூதாகரமான வளர்ச்சியாகும்.

''ராஜீவ் கும்பலின் லஞ்ச ஊழல், ஜனநாயக - மக்கள் விரோதப் போக்குகளுக்கு எதிராக வட இந்திய மக்கள் கொண்டிருந்த வெறுப்பு; அதற்கு எதிராக வி.பி.சிங்கும் பத்திரிக்கைகளும் நடத்திய தீவிரமான - சமரசமற்ற பிரச்சார இயக்கம் - இவை அங்கே ராஜீவ் அலையை எழுப்பிவிட்டன. இதைப் பயன்படுத்திக் கொண்டு ஜனதாத்தளத்துடன் தந்திரமான கூட்டுச் சேர்ந்து பாரதீய ஜனதா வெற்றிபெற்றுவிட்டது'' என்று ஜனதாத்தள அரசியல்வாதிகள் கூறுகின்றனர். இவற்றோடு பாரதீய ஜனதாவும் கவர்ச்சி - இலவசத் திட்டங்கள், சினிமா - வானொலி நடிகர்களை வைத்துப் பிரச்சாரம் செய்ததை இன்னும் சிலர் காரணமாகக் கூறுகிறார்கள்.

''பஞ்சாப் - காஷ்மீர் விவகாரங்களை ராஜீவ் அரசு தவறாகக் கையாண்டது; ராமஜென்மபூமி - பாபரி மசூதி விவகாரத்தைத் தூண்டி மதக் கலவரங்களை நடத்தியது; அயோத்தியா விவகாரத்தில் இந்து மதவெறியர்களுடன் ராஜீவ் அரசின் சமரச-சந்தர்ப்பவாத அனுகுமுறை காரணமாக முஸ்லீம்களைப் பகைத்துக் கொண்டது. இவை காரணமாக இந்து மத வகுப்புவாத வெறியைக் கிளப்பி பாரதீய ஜனதா ஆதாயம் தேடிக் கொண்டது'' என்று போலிக் கம்யூனிஸ்டுகள் கூறுகின்றனர். தமது தவறுகளை மறுக்கும் அதே சமயம் இதே வாதத்தை காங்கிரசும் சொல்லுகின்றது.

**மிதவாதி வாஜ்பாயுடன் தீவிரவாதி அத்வாணி**



பாரதீய ஜனதாக் கட்சியின் வெற்றியானது - ராஜீவ் எதிர்ப்பு அலை, வி.பி.சிங்கின் செல்வாக்கு ஆகியவற்றினால் தற்செயலாக அடைந்தது; அல்லது பஞ்சாப்-காஷ்மீர் மற்றும் ராமஜென்மபூமி - பாபரிமசூதி விவகாரங்களினால் எழுந்த இந்துமத வகுப்புவாத அலையினால் தற்காலிகமாக சாதித்தது என்று கூறும் இந்த இரண்டு கணிப்புகளுமே தவறானவை.

பாரதீய ஜனதாக் கட்சியின் பூதாகரமான வளர்ச்சி, அதன் விளைவுகள், அதனால் நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள அபாயம் ஆகியவற்றைக் குறைத்து மதிப்பீடு செய்வதாகும். குறிப்பாக பஞ்சாப், காஷ்மீர் மற்றும் ராமஜென்மபூமி - பாபரி மசூதி விவகாரங்கள் பாரதீய ஜனதாவைப் பொறுத்தவரை தேர்தல் வெற்றியை விட முக்கியமானவை என்பதைப் பார்க்கத் தவறுவதாகும்.

''1989, நவம்பர் நாடாளுமன்றத் தேர்தல்களில் நாங்கள் அடைந்தது எதிர்பாராத, குருட்டுத்தனமான வெற்றி அல்ல என்பதை 1990 பிப்ரவரி சட்டமன்றத் தேர்தல்கள் நிரூபித்து விட்டன. ஒரு தனித் தன்மை வாய்ந்த கட்சியாக நிலைநிறுத்திக் கொண்டு மக்களுடைய மதிப்பைப் பெற்ற திறமை; கட்சியின் அமைப்பு ரீதியிலான நடவடிக்கைகள்; பொது வாழ்க்கையில் கடைப்பிடித்த நன்னடத்தை - ஆகிய மூன்று காரணங்களால் பாரதீய ஜனதாக் கட்சி வெற்றி பெற்றது'' என்று அதன் தலைவர் லால் கிஷன் அத்வாணி கூறிக் கொள்கிறார்.

உண்மை தான்! காங்கிரசு அல்லது எதிர்க்கட்சிகள் கூட்டணிகள் அமைப்பது அல்லது ஒரே கட்சியாக இணைவது என்கிற சந்தர்ப்பவாத உயர்மட்ட ஆலோசனை மாநாடுகளில் கூடிக் கொண்டிருந்தன. அவற்றிலே சேர மறுத்து வந்த பாரதீய ஜனதாக் கட்சி, சில கட்சிகளுடன் தொகுதி உடன்பாடுகள் செய்து கொண்டபோதும் தனித் தன்மை வாய்ந்த, வித்தியாசமான கட்சியாக மக்கள் முன்னே நின்றது.

உதிரிக் கட்சிகள், குழுக்களையும் செல்வாக்குள்ள சாதி, மத, பிழைப்புவாதத் தலைவர்கள், கட்சி மாறிகளையும் இனைத்து காங்கிரசுக்கு மாற்று சக்தியாக உருவாவதற்கு மற்றபிற எதிர்க்கட்சிகள் முயன்றன. அடிமட்டத் தொண்டர்களைக் கொண்ட கிரமமான கட்சி அமைப்புகளைக் கட்டி மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காகப் போராடுவதற்குப் பதில் கவர்ச்சிமிகு தலைவர்களை நம்பி தேர்தல் வெற்றிகளைச் சாதித்துக் கொள்ள முயன்றன.

படிப்பகம்

www.padippakam.com

ஆனால் பாரதீய ஜனதாக் கட்சியோ, ஆர்.எஸ்.எஸ். பின்பலத்தோடு முழுவதும் கட்டுப்பாடான, கிரமமான கட்சி அமைப்புகளைக் கட்டி எழுப்புவதில் கவனத்தைக் குவித்தது.

பழைய பரிகத்தம் ராஜீவுக்கு எதிராகப் புதிய பரிசுத்தம் வி.பி.சிங்கை மற்றபிற எதிர்க்கட்சிகள் முன்னிறுத்தின. ஆனால் கட்சி மாறிகள், லஞ்ச ஊழல் பேர்வழிகள், கிரிமினல் குற்றவாளிகள் ஆகிய பழம் பெருச்சாளிகளின் புதிய கூடாரம் தான் ஜனதாத்தளமும் தேசிய முன்னணியும் என்பது விரைவிலேயே தெரிந்துவிட்டது. இதற்கு மாறாக தன்னலம் - பதவி மோகமற்ற, அப்பழுக்கற்ற, கொள்கை - லட்சியப்பிடிப்பு மிக்க தலைவர்களைக் கொண்டதாக பாரதீய ஜனதா கட்சி என்ற கருத்தை உருவாக்கியது.

நாடாளுமன்றத் தேர்தல்களுக்குப் பிறகு மத்திய அரசின் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பிருந்தும் மறுத்து வருகிறது. அரியானாவில் தேவிலால் மகன் முதல்வரானதும் கூட்டணி அரசில் இருந்து விலகிக் கொண்டது. ஜனதாத்தள, தேசிய முன்னணி அரசின் சாதனைகளில் பங்கு போட்டுக் கொள்ளும் அதே சமயம் அதன் தவறுகளுக்கான பொறுப்பில் இருந்தும் விலகி நிற்கிறது. இதனால் மக்களிடையே பாரதீய ஜனதாவின் மதிப்பு வளர்கிறது.

பாரதீய ஜனதாவின் இன்றைய வளர்ச்சி நிலைமைப் புரிந்து கொள்வதற்கு அதன் வரலாற்றைச் சுருக்கமாகவேனும் நினைவில் கொள்ள வேண்டும். இந்து மத வெறி ஆர்.எஸ்.எஸ்.ஸின் அரசியல் அமைப்பாகத் தோன்றிய பாரதீய ஜனசங்கம் 1952 தேர்தல்களில் இருந்து கிரமமான வளர்ச்சியைக் காண்பித்தது. 1974 இந்திரா அலையினால் சற்று பின்னடைவுக்குள்ளானபோதும் 1977 ஜனதா அலையில் 98 எம்.பி. இடங்களைப் பெற்றது. மிதவாதி வாஜபாயி தலைமையின் சமரசக் கொள்கைகள், ஜனதா சோதனைகள் தற்காலிக பின்னடைவையும் 1984 தேர்தலில் படுதோல்வியையும் கண்டது. இந்துமத வெறிக் கொள்கையை அப்பட்டமாகப் பின்பற்றிய காங்கிரசிடம் தனது ஆதரவை இழந்தது.

தேர்தல் தோல்விகள், ஆர்.எஸ்.எஸ். நிர்பந்தம் காரணமாக காந்தீய சோசலிசம், மிதவாதம் பேசிய வாஜ்பேயி தலைமையை நீக்கிவிட்டு, இந்து மத வகுப்புவாத அடிப்படையில் தீனதயாள் உபாத்தியாயா முன் வைத்த "ஒருங்கிணைந்த மனிதம்", தீவிரவாதம் பேசும் அத்வாணி, விஜயராஜ சிந்தியா, எஸ்.எஸ்.பண்டாரி எம்.எம்.ஜோஷி, பலதேவ் பிரகாஷ், கே.எல். சர்மா, கே.தாக்கரே ஆகியோர் அடங்கிய தலைமை வந்தது.

இந்துமத வகுப்புவாதம், இந்து ராஜ்ஜியம் போன்ற கொள்கை - இலட்சியங்களை மூடி மறைக்க, சமரசம் செய்யத் தேவை இல்லை; பகிரங்கமாக வைப்பதில் தவறில்லை என்று புதிய தலைமை முடிவு செய்தது. இந்துமத வெறியைத் தூண்டுவதற்கென்றே இந்து முன்னணி, விஸ்வ இந்து பரிக்ஷத், பஜ்ராங்தள் போன்ற அமைப்புகளை நிறுவி வளர்த்தது. சிவசேனா போன்ற பிற மதவெறிக் கட்சிகளுடன் சேர்ந்தது.

இந்து மதவெறி - கலவரங்களைத் தூண்டுவதற்கான தனிப்பெரும் பிரச்சினையாக ராமஜன்மபூமி - பாபரி மசூதியை 1984-லேயே தெரிந்தெடுத்தது. இந்தியாவிலுள்ள 5 லட்சம் கிராமங்களில் செங்கல் பூசைகள் நடத்தி ராமர் கோவில் கட்டுவதற்காக அவற்றை அயோத்திக்கு எடுத்து வரும் பேரியக்கத்தையும் அதற்கு முன்னோடியாக ரத ஊர்வலங்களையும் திட்டமிட்டு நடத்தியது. பிர்லா, டி.வி.எஸ். போன்ற பெரும் தரகு அதிகார முதலாளிகளையும், சங்கராச்சாரிகள் உட்பட பலமடாதிபதிகளையும், முன்னாள் அரசு உயரதிகாரிகளையும் இவற்றில் இணைத்துக் கொண்டார்கள்.

முஸ்லீம் விவாகரத்துச் சட்டம் முதல் அணுகுண்டுத் தயாரிப்புவரை பஞ்சாப், காஷ்மீர், அசாம் ஆகிய சகல விவகாரங்களிலும் இந்து மதவெறி, கடைகோடி வலதுசாரி, பிற்போக்கு தேசியவெறி நிலைப்பாடுகள் எடுத்து காங்கிரசிடமிருந்து 'இந்து மதப் பாதுகாவலர்' என்ற தகுதியைப் பறித்துக் கொண்டது, பாரதீய ஜனதாக் கட்சி. தமது சொந்த மதவாத அமைப்புகளையும், காங்கிரசின் சந்தர்ப்பவாத நாடகங்களையும் நம்புவதைவிட இந்து மதவாத பாரதீய ஜனதாக் கட்சியையே சகித்துக் கொண்டு, அதனிடம் தஞ்சமடைவதும், சமரசம் - சலுகைகள் பெறுவதும் உயிரையும் உடமையையும் காத்துக் கொள்ளவாவது உதவும் என்று பிறமதச் சிறுபான்மையினர் கருதத் துவங்கினர். இப்படி அடிபணியவைப்பது தான் தமது நோக்கமென்று பா.ஜ.க. பகிரங்கமாகவே கூறுகிறது.

வெறுமனே இந்து மதவெறிப் பிரச்சாரத்தை மட்டும் நம்பியிராது அதோடு, தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களிடையே பல ஆசிரமங்களையும், சமூக சேவை அமைப்புகளையும் கூட நிறுவி பா.ஜ.க. வேலை செய்கிறது. குஜராத், ம.பி., ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் பல உள்ளூர் - கிராமப் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டும், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்களைத் திரட்டியும் போராடவும் செய்கிறது. பிற்போக்கு இந்து மதவெறியையும், மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும் இணைத்து இயக்கங்கள் நடத்தி கிரமமான அணிகளையும் மக்கள் ஆதரவையும் கூட பெற்றுள்ளது.

எனவே பாரதீய ஜனதாவின் வளர்ச்சி, தேர்தல் வெற்றி தற்காலிகமானதோ, தற்செயலானதோ அல்ல; திட்டமிட்டு உருவாக்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. ஜனதாத்தளம், தேசிய முன்னணியின் பதவிச் சண்டை முற்றி ஆட்சி கவிழும் போது அதையும் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக உள்ளது. சில மாநிலங்களில் அது பிடித்திருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாடு முழுவதும் பரவிவிட, ஆட்சியைப் பிடிக்க பேராசையுடன் துரித கதியில் இயங்குகிறது.

பாசிச ராஜீவ் கும்பலைவிடவும் அபாயகரமான இந்துமதவெறி வகுப்புவாத - பாசிச சக்தி பாரதீய ஜனதாவாகும். ஏனெனில் அதைவிட தெளிவான, உறுதியான, சித்தாந்த ரீதியிலான கட்டுப்பாடான கிரமமான அணிகள், அமைப்புகளைக் கொண்டது. பெயரளவிலான ஜனநாயகம், மதச்சார்பின்மை, முற்போக்கு வேடம் கூட கிடையாது. அதன் பாசிச இந்து மதவெறியை இந்து ராஷ்டிரம், இந்து தேசியம் என்கிற வடிவிலே முன் வைக்கிறது. பாசிச ராஜீவ் கும்பல் முற்றாக ஒழிக்கப்படாத நிலையில், புதிய, வலிமை மிகு இந்து மத வெறி பாசிச கும்பல் அதிகாரத்தில் பங்கேற்க வந்துள்ளது! மேலும் கடுமையான, உறுதியான வேகத்துடன் பாசிச எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையே இவை கோருகின்றன.

● போஸ்.

பாரதீய ஜனதா மதவெறித் தொண்டர்கள்



படிப்பகம்

www.padippakam.com




இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேறுவதற்கு முன்னதாகவே, அதன் அடிவருடிகளும் ஈழத் துரோகிகளுமான பத்மநாபா - வரதராஜப் பெருமாள், ராஜன், செல்வம் தலைமையிலான கும்பல்கள் தலைதெறிக்க ஓடிவந்து இந்தியாவில் தஞ்சம் புகுந்துவிட்டன. தமிழ்நாட்டிலே கூட வாழமுடியாத கேவலமான நிலைமைக்கு அவர்கள் இழிந்து போய்விட்டார்கள். ஆனாலும், ''பெருமாள் குழுவினர் லெபனானில் ஆயுதப் பயிற்சியெடுப்பார்கள். பெருமாளை நாங்கள் தொடர்ந்து ஆதரிப்போம். இந்திய இராணுவம் வெளியேறிய பிறகு, வடகிழக்கு அரசியல் அரங்கில் இருந்து அவர்கள் மறைந்து போய்விட மாட்டார்கள். நாங்கள் அவர்களுக்கு உறுதுணையாக நிற்போம்'' என்று இந்திய உளவுப்படையான 'ரா' கூறுகிறது. ''ஈழவிடுதலைப் போரை தொடருவோம்'' என்று பதமநாபா - பெருமாள் கும்பல் மீண்டும் அறிவித்துள்ளது.

பாசிச ராஜீவின் பிராந்திய ஆதிக்கக் கொள்கைகளைத் தொடரும் தேசிய முன்னணி அரசு, தலாய்லாமா கும்பலை வைத்துக் கொண்டு திபேத்தில் தலையிடுவதைப் போல ஈழத் துரோகிகளைப் பயன்படுத்த நினைக்கிறது. தலாய் லாமா கும்பலைப் போலவே வசதியான 'அகதி' வாழ்வது கிடைக்கும் என்று ஈழத் துரோகிகள் கனவு காண்கிறார்கள். தலாய்லாமா கும்பலுக்கு உதவுவது போல, பிரேமதாசா அரசுக்கு எதிராக இந்திய, ஈழத் துரோகிகளுக்கு ஏகாதிபத்தியவாதிகள் துணை நிற்க மாட்டார்கள். எனவே இவர்களது கனவுகள் பலிக்கப் போவதில்லை. இந்திய, ஈழ மக்களும் அதற்கு இடம் தர மாட்டார்கள்.

# புதிய ஆட்சியின் தொடரும் பிராந்திய ஆதிக்கம்

எயிட்ஸ் நோய் பிடித்த நோயாளிகளைப் போல ஈழத் துரோக அமைப்புகளைச் சேர்ந்த அகதிகளை இந்திய மாநில அரசுகள் வெறுக்கின்றன; விரட்டுகின்றன. இரண்டு கப்பல்களில், இந்திய இராணுவம் ஏற்றி வந்த 1350 அகதிகளுக்குத் தஞ்சமளிக்க தமிழ்நாடு, ஆந்திர அரசுகள் மறுத்து விட்டன. எப்படியோ, ஒரிசாவில் உள்ள கோராபுட் அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளனர். அதுவும் இரண்டு மாதங்களுக்கான தற்காலிக ஏற்பாடுதான். அதற்கும் அம்மாநில நிர்வாகம் - அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மேலும் 3500 அகதிகள் வருகிறார்கள்.

''இவர்கள் உண்மையான அகதிகள் அல்ல. இந்திய ஆதரவு போராளிக் குழுக்கள். போராளிக் குழுக்களுக்கு தஞ்சமளித்து, அவர்கள் ஆயுதப் பயிற்சி முகாம்கள் அமைக்கவும், சட்டம் - ஒழுங்கு சீர்குலையவும் அனுமதிக்க முடியாது'' என்கிறார் கருணாநிதி. இரகசியமாகத் தப்பி வந்த 'அகதிகள்' மீது படகுகளிலேயே குண்டு வீசிக் கொன்றது; 'ரா' உதவியுடன் ஆயுதங்களைக் கடத்தி வந்தது; இந்தியச் சோதனைச் சாவடி மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது ஆகிய சம்பவங்களை கருணாநிதி ஆதாரமாகக் கூறுகிறார்.

ஆடம்பர வாழ்க்கைக்குப் பழகிவிட்ட 'போராளிகள்' அகதிகள் நிவாரண நிதியைக் கொண்டோ, நேர்மையான வழிகளில் தாமே உழைத்தோ வாழ மாட்டார்கள். பணயக் கைதிகளைப் பிடித்து பணம் பறிப்பது, கொள்ளை - கடத்தல் தொழில்களில் ஈடுபடுவது; குழுச்சண்டைகளை நடத்துவது நிச்சயம் நடக்கும். இந்தப் பிள்ளைப் பூச்சிகளை வயிற்றிலே கட்டிக் கொள்வதற்கு யார்தான் விரும்புவார்கள்! அமெரிக்காவில் உள்ள வியட்நாம் அகதிகளைப் போல ஆக்கிரமிப்பு - ஆதிக்கப் போர்களை நடத்தும் அக்கிரமக்காரர்கள் இந்த வேண்டாத சுமையின் பாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததுதான்!

அதேசமயம், இலங்கை - ஈழப் பிரச்சினையில் இருந்து கௌரவமான முறையில், நியாயமான அடிப்படையில் விலகிக் கொள்வதற்குக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பை தேசிய முன்னணி அரசு தெரிந்தே கைநழுவ விட்டுவிட்டது என்று சொல்லத்தான் வேண்டும். ராஜீவின் கொள்கைகளைக் கைவிட்டு அண்டைநாடுகளுடன் நம்பிக்கை - நட்புறவை ஏற்படுத்தப் போவதாக பதவியேற்ற போது அறிவித்தது. ஆனால் பாகிஸ்தானுடன் போர் மூளுவதற்கான அளவு, முரண்பாடுகள் முற்றியுள்ளன. இலங்கையில் இந்தியத் தலையீடு ஒரு பதிலிப் போர் - பனிப்போர் நிலைக்குத்தான் மாறி இருக்கிறது.

தேசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததும் முந்தைய ஆட்சியின் பழங்குப்பைகளான ஆதிக்க - ஆக்கிரமிப்பு கொள்கைகளை முற்றாக உதறியிருக்க வேண்டும். ராஜீவ் கும்பலே ஒப்புக்கொண்டு நிர்ணயித்திருந்த கெடுவின்படி இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை விலக்கிக் கொண்டிருக்க வேண்டும். இந்திய உளவுப் படைகள் இலங்கை - ஈழ விவகாரத்தில் தலையிடுவதை அடியோடு நிறுத்தியிருக்க வேண்டும். ஈழத் துரோக அமைப்புகளின் இராணுவப் பிரிவுகளை நிராயுதபாணிகளாக்கி, கலைத்திருக்க வேண்டும். அவர்களுடைய துரோகத்தனத்துக்கான தண்டனையை அவர்களே அனுபவிக்கும்படி விட்டிருக்க வேண்டும். ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின் இரகசியங்களை அம்பலமாக்கி, ரத்து செய்து இரு அரசுகளிடையே சமத்துவ உறவை நிலை நாட்டியிருக்க வேண்டும். அதே சமயம் ஈழத் தமிழின ஒடுக்குமுறைக்கு எதிராக ஐ.நா. சபை உட்பட பல அரங்கங்களில் அரசு தந்திர நிர்பந்தங்களை உருவாக்கியும் இருக்க வேண்டும்.

ஆனால் உள்நாட்டிலேயே போராடும் தேசிய இனங்களை ஒடுக்குவது, தேசிய வெறி - யுத்த வெறியைத் தூண்டுவது, பிராந்திய ஆதிக்கத்துக்கு முயலுவது என்ற கொள்கைகளையே தொடரும் தேசிய முன்னணி அரசு, மேற்கண்ட நியாயமான நடவடிக்கைகள் எதையுமே செய்யவில்லை. இலங்கையுடன் சமனற்ற புதிய 'நட்புறவு' ஒப்பந்தத்தை நோக்கமாகக் கொண்டு இந்தியப் படை விலக்கத்தை மேலும் மூன்று மாதங்கள் தாமதித்தது. ஈழத் துரோக இராணுவப் பிரிவுகள் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான வீணான போர் நடத்தும்படி தூண்டியது. அது முடியாத போது கருணாநிதியை வைத்து 'ஈழப் போராளி அமைப்புகளுக்குள் சமாதானம்' என்ற சாத்தியமற்ற பேச்சுவார்த்தைகளை நடத்தியது. வடகிழக்கு மாகாண கவுன்சிலைக் கலைத்தால், அனுதாபத்தையும், ஈழத் துரோகிகளுக்கான பாதுகாப்புப் பொறுப்பு இலங்கை அரசுக்கும் ஏற்படும் என்று எதிர்பார்த்து ஏமாந்தது. இறுதியில் 'தனி ஈழ நிர்ணய சபையை' கோமாளித்தனமாகப் பிரகடனம் செய்தது. அவர்களைப் பகிரங்கமாக ஒடுக்குவதற்கான வாய்ப்பை இலங்கை அரசுக்கு அளித்துள்ளது. இந்தத் தவறான நடவடிக்கைகளினால் ஈழத் துரோக அமைப்புகளைச் சேர்ந்த அகதிகளுக்குத் தஞ்சமளித்துப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், அதன் விளைவுகளும் இந்தியா மீது விழுந்துள்ளது.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களை வெற்றிகரமாக முறியடித்த ஈழ மக்கள், சுயநிர்ணய உரிமைக்கும் ஜனநாயகத்துக்குமான போரில் பின்னடைவையே எதிர்நோக்கியுள்ளனர் என்பது கசப்பான உண்மையே. பிரேமதாசா கும்பலுடன் புலிகள் நடத்திவரும் போராட்டங்களில் முறிவு ஏற்படுமானால் 'தனி ஈழம்' என்ற முழக்கத்தையும் - போரையும் அவர்கள் தொடர்வார்கள். ஆனால் இலங்கை இராணுவத்துடனும், போலீசுடனும் புலிப்படையை இணைத்து விட்டு மாகாண சுயாட்சியை ஏற்றுக் கொண்டு, சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை கைவிடுவதற்கான வாய்ப்புகளே அதிகமாக உள்ளன. பிறகு, சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் குழுக்களையே பாசிச முறையில் புலிகள் ஒடுக்குவதில் இறங்கிவிடுவார்கள். எவ்வாறாயினும், நாம் பல முறை வலியுறுத்தியவாறு சுயநிர்ணய உரிமைக்கும், ஜனநாயகத்துக்குமான போராட்டத்தை தொடர்வதற்கு ஈழமக்கள் தயாராய் இருக்க வேண்டும்.

■ மாணிக்கவாசகம்

படிப்பகம்

www.padippakam.com



# அதிகாரச் சாக்கடையில் சந்தனக் காடுகள் நாசம்

சந்தன மரக் கடத்தல் மன்னன் வீரப்பனின் கும்பலிடம் இருந்து தமிழ்நாடு - கர்நாடகா எல்லையில் உள்ள சத்தியமங்கலம், பர்கூர், மாதேஸ்வர மலைக்காடுகளை மீட்பதற்கான போர்ப் பிரகடனம் செய்துள்ளன, இரு மாநிலங்களின் காட்டிலாகா - போலீசுத் துறைகள். பலமுறை படையெடுத்துப் போய் தோற்றுத் திரும்பின.

கடைசியாக, தேவாரம் தலைமையில் 600 ஆயுதப் போலீசாரைக் கொண்டு சிறப்பு அதிரடிப் படை அமைத்து 'ஆபரேசன் ஸ்நாப்' என்கிற இராணுவ பாணி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். 2 கோடி ரூபாய் மதிப்புடைய சந்தனக் கட்டைகளையும், லாரிகளையும் கைப்பற்றினர்; 2 பேரைச் சுட்டுக் கொன்று சில வீரப்பன் ஆட்களைப் பிடித்துள்ளனர். இருந்தாலும் வீரப்பன் கும்பலை போலீசாரால் பிடிக்கவோ ஒழிக்கவோ முடியவில்லை. ஆத்திரமடைந்துள்ள வீரப்பன் கும்பல் தமிழ்நாடு - கர்நாடகா அரசுகளுக்குச் சொந்தமான இரு பஸ்களைக் கொளுத்தியது. மலைப்பகுதியில் அரசு வாகனங்கள் - பஸ்கள் ஓட்டுவதற்கு மிரட்டி தடை விதித்துள்ளது.

இந்த வீரப்பன் கும்பலைப் பற்றிய பல விவரங்கள் இப்போது தெரியவந்துள்ளன. கடந்த 14 ஆண்டுகளாக யானைகளைக் கொன்று தந்தங்கள் எடுத்தும் சந்தன மரங்களை வெட்டியும் பல கோடி ரூபாய் மதிப்புடைய கடத்தல்களை செய்து வருகிறார்கள். கார், ஜீப், லாரி, பங்களா சகிதம் வசதிகளை பெருக்கிக் கொண்டுள்ளனர். மரபுவழி ஆயுதங்கள், வெடிகுண்டுகள், நவீன துப்பாக்கிகள், குதிரைகள் ஆகியவையுடன் ஏறக்குறைய 300 பேர் கொண்ட தனியார் இராணுவமாகவே வீரப்பன் கும்பல் இயங்குகிறது. காட்டுப் பகுதி கிராமவாசிகளுக்கு பல தர்மங்கள் செய்தும் மிரட்டியும் ஆயுத - படை பலத்தால் தனது செல்வாக்கு, ஆதிக்கத்தை நிலை நாட்டியுள்ளது.

ஒரு கிரிமினல் கும்பல் இவ்வளவு தூரம் எப்படி வளர முடிந்தது? தமிழ்நாடு - கர்நாடகா மாநிலங்களின் அரசியல் பிரமுகர்கள், காட்டிலாகா - போலீசு அதிகாரிகள்தாம் இந்த வீரப்பன் கும்பலை ஊட்டி வளர்த்து ஆதாயம் அடைந்து வந்திருக்கின்றனர். குறிப்பாக எம்.ஜி.ஆர். கட்சியின் முன்னாள் மந்திரி முத்துசாமி, மேட்டூர் எம்.எல்.ஏ. நாச்சிமுத்து, கொள்ளேகால் காங்கிரசு எம்.எல்.ஏ ராஜகௌடா, பென்னாகரம் போலிக் கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ. நஞ்சப்பன் ஆகியோர் வீரப்பன் கும்பலோடு கூட்டு வைத்திருப்பதாக கூறப்படுகிறது.

தனது தொழிலில் குறுக்கீடு செய்யும் காட்டிலாகா அதிகாரிகள் - ஊழியர்கள்; போட்டிக்கு வரும் வேறு கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள்; போலீசுக்கு துப்புக் கொடுப்பவர்கள் என்று இதுவரை 20 பேரை வீரப்பன் கும்பல் கொன்றுவிட்டது. அரசியல் பிரமுகர்கள், காட்டிலாகா - போலீசு அதிகாரிகளுக்கும் வீரப்பன் கும்பலுக்கும் இடையே நடந்த பேரங்கள், பரிமாற்றங்கள், துரோகங்கள் காரணமாக கூட்டாளிகளுக்குள் இப்போது போட்டியும் பிளவும் ஏற்பட்டுள்ளது. எனவேதான் வீரப்பன் கும்பலை ஒழித்துக் கட்டுவதில் இப்போது தீவிரம் காட்டப்படுகிறது. இது அதிகார வட்டங்களும், பத்திரிக்கைகளும், பகுதி மக்களும் அறிந்த உண்மை.

தான் தோன்றித்தனமாக உருவாகிய ஒரு கொடிய சமூக விரோத - கிரிமினல் கும்பலுக்கு எதிராக கடுமையான போரில் இறங்கியிருப்பதாக போலீசு - காட்டிலாகாவினர் இதைச் சித்தரிக்கின்றனர்; பத்திரிக்கைகளும் இதற்கு ஒத்தூதுகின்றன. ஆனால் அரசியல் தலைவர்கள், போலீசு, காட்டிலாகாவினர், சமூக விரோத கிரிமினல்கள் அடங்கிய கும்பலின் வழக்கமாகிவிட்ட கிரிமினல் குற்றங்களை மூடிமறைப்பதற்காக அவர்கள் உத்தமவேடம் போடும் நாடகம்தான் இது!

எம்.ஜி.ஆர். காலத்தில் ஆர்.எம். வீரப்பனும், இப்போது தினகரன் முதலாளி கந்தசாமியும் காட்டிலாகா மந்திரிகள். இவர்களே தமது உள்ளூர் கட்சித் தலைவர்கள் - எம்.எல்.ஏ.க்கள் மூலம் சில பினாமிகளைப் பிடித்து காண்டிராக்டுகள் எடுக்கின்றனர். அதைப் பயன்படுத்தி சட்டவிரோதமாகக் காடுகளை அழித்து மரங்களைக் கடத்துகின்றனர். இரகசிய கிரிமினல் கும்பல்களையும் வைத்து விலையுயர்ந்த யானைத் தந்தங்கள், சந்தன மரங்களையும் கடத்துகின்றனர். போலீசு - காட்டிலாகாவின் எல்லா மட்டங்களுக்கும் இந்தக் கொள்ளையில் பங்கு போய்ச் சேருகிறது.

பினாமிகளும் கிரிமினல்களும் அவர்களுடைய எஜமானர்களின் கட்டுப்பாட்டை மீறி வளர்ந்துவிடும் போது; பங்கு வைப்பதில் தகராறு ஏற்பட்டு ஒப்பந்தங்கள், பேரங்கள் பரிமாற்றங்களில் நாய்ச் சண்டையாக மாறிவிடும் போது; கொள்ளையில் அளவற்ற சொத்து - செல்வங்களைக் குவித்துக் கொண்டு ஆடம்பர அட்டகாசங்களும், பகுதி மக்களுக்கு எதிராக அட்டூழியங்களும் பெருகிவிடும் போது - போலீசும் அதிகாரிகளும் உத்தம வேடம் கட்டிக் கொள்கிறார்கள். சட்டம், ஒழுங்கு, நீதியை நிலைநாட்டும் வீரதீர நாடகமாடுகிறார்கள்.

இப்படித்தான் சென்னை - திருவான்மியூரில் கள்ளச் சாராயம், விபச்சாரம் செய்துவந்த 'ஆட்டோ' சங்கர் கும்பல் விவகாரத்தில் நடந்தது. வீரப்பன் கும்பல் விவகாரத்திலும் இதுதான் நடக்கிறது. இதே போலத் தான் அரசு நிலங்களைக் கைப்பற்றி விற்பது; பாறைகளை உடைத்து கருங்கல் ஏற்றுமதி செய்வது; கோவில் சொத்துக்களை சூறையாடுவது - சிலைகளை கடத்துவது; கள்ளச்சாராயம் - விபச்சாரம் - சூதாட்டம் போன்ற சமூக விரோதத் தொழில்களை நடத்துவது போன்றவற்றில் ஈடுபடும் கிரிமினல் - மாஃபியா கும்பல்களும் பெருகி வருகின்றன.


ஒவ்வொரு கும்பலுக்கும் பின்பலமாக ஓட்டுக் கட்சித்தலைவர்கள் - பிரமுகர்களும் போலீசு அதிகாரிகளும் நிறைந்த கூட்டம் இருக்கிறது. எனவே இந்தக் கூட்டத்தினரின் நாடகத்தை நம்புவதோ, கிரிமினல் கும்பல்களின் அட்டூழியங்களை ஒழிக்கும்படி அவர்களிடம் முறையீடு செய்வதோ பலனளிக்காது. குறைந்தபட்சம் உள்ளூர் அளவில் உழைக்கும் மக்கள் குழுக்களை நிறுவி, கிரிமினல் கும்பல்களைத் திருப்பித் தாக்கும் அளவு தயாராக வேண்டும். இல்லையானால் அவர்கள் நமது வாழ்வின் சகல விவகாரங்களிலும் ஏறி மிதிக்கத் துவங்கிவிடுவார்கள்.

■ பழநி



படிப்பகம்

www.padippakam.com



## ராமஜென்ம பூமி:

# இந்துவெறியர்களின் வரலாற்றுப் புரட்டு

ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு நம்பிக்கை கொண்டிருப்பது அவரது உரிமை. அது சரியானதாகவோ அல்லது மூடத்தனமாகவோ இருக்கலாம். ஆனால் தமது நம்பிக்கைக்கு வரலாற்று ஆதாரங்களை ஒருவர் தவறாகக் காட்டி நிரூபிக்க முயலும் போது, அது உண்மையா, பொய்யா என்பதை ஆராய்ந்து பார்த்து முடிவுக்கு வருவது பகுத்தறிவுள்ள ஒவ்வொருவரின் முன்னிற்கும் சவாலாக மாறி விடுகிறது.

இன்று வட மாநிலங்களைக் கவ்வி நிற்கும் மையமான பிரச்சினை, அயோத்தியிலுள்ள ஒரு வழிபாட்டுத் தலம் ராமர் கோயிலா அல்லது பாபர் மசூதியா என்பது தான்.

இதையொட்டி மீரட், முசாபர்பூர், அலிகார் என்று தொடங்கி காஷ்மீர்வரை மதவெறிக் கலவரங்கள் காட்டுத் தீயாகப் பரவி நூற்றுக்கணக்கான அப்பாவி உழைக்கும் மக்களைக் காவு கொண்டது. இப்போது இந்து வெறியர்கள் பிரச்சினைக்குரிய அந்த வழிபாட்டுத் தலத்தின் அருகே ராமர் கோயிலைக் கட்ட நாடெங்கும் 1,53,000 இடங்களில் செங்கல் பூசை நடத்தி கோடிக் கணக்கில் நிதியும் திரட்டி விட்டனர். பிப்-14 அன்று கோயில் கட்டுவதற்கான கால்கோள் விழா நடத்தப்பட இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் பிரதமர் வி.பி.சிங், இன்னும் 4 மாதங்களில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அறிவித்த பிறகு தற்போதைக்கு கோயில் கட்டும் திட்டம் தற்காலிக மாக தள்ளி வைக்கப் பட்டுள்ளது.

### இந்து வெறியர்களின் குருட்டு வாதங்கள்

''இந்துக் கடவுளான ராமர் அயோத்தியில் அவதரித்தார். அதைத் தொடர்ந்து பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவர் அவதரித்த பூமியில் இந்துக்கள் ராமர் கோயிலைக் கட்டி வழிபட்டனர். பின்னர் இந்தியா மீது படையெடுத்த மொகலாயர்கள், நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்தபோது, அந்தக் கோயிலை இடித்துவிட்டு அதை மசூதியாக்கினர். 1528-ம் ஆண்டில் பாபர் ஆண்ட போது இது நடந்தது. ஆனால் இந்துக்கள் இதை எதிர்த்து போராடியதால் 69 முறை யுத்தம் நடந்தது. ஏறத்தாழ 50,000 பேர்வரை மாண்டனர்'' என்று இந்து மதவெறி அமைப்பான விசுவ ஹிந்து பரிஷத்தின் துணைச் செயலர் லட்சுமிநாராயணன் வரலாற்று ஆதாரங்களைக் காட்டி வாதிடுகிறார்.

மேலும், ''முஸ்லிம் மதக் கலாச்சாரப்படி ஒரு மசூதிக்கு 4 தூண்கள் அல்லது கோபுரங்கள் இருக்கும். மசூதியில் தொழுகை நடத்துமுன் பக்தர்கள் தமது கால்களைக் கழுவ நீர்தாரை அல்லது தடாகம் அமைந்திருக்கும். ஆனால் அயோத்தியிலுள்ள பிரச்சினைக்குரிய வழிபாட்டுத் தலத்தில் அவ்வாறு எதுவுமில்லை. எனவே இதிலிருந்து அந்த வழிபாட்டுத் தலம் இந்துக் கோயில் என்று நிரூபணமாகிறது'' என்று தமது வாதங்களுக்கு இந்து வெறியர்கள் ஆதாரம் காட்டுகின்றனர்.

பிரச்சினைக்குரிய அந்த வழிபாட்டுத் தலத்தின் மீது உரிமைகோரி இந்து வெறியர்கள் முன் வைக்கும் வாதங்களும் வரலாற்று ஆதாரங்களும் அப்பட்டமான புளுகு மூட்டைகளாகும். இவற்றில் எள்ளளவும் உண்மையில்லை. வரலாற்று ஆதாரங்களோ, அகழ்வாராய்ச்சி நிருபணங்களோ, வேறு எழுத்துபூர்வ சான்றுகளோ இல்லாமல் வெறும் குருட்டு நம்பிக்கையின் அடிப்படையில் புனையப்பட்ட கட்டுக்கதையே இது என்று அண்மையில் பிரபல வரலாற்றாசிரியர்கள் கூட்டாக மறுப்பு அறிக்கை விடுத்துள்ளனர். இந்து வெறியர்களின் பித்தலாட்ட மோசடிகளை ஆதாரபூர்வமாக நிருபித்துக் காட்டியுள்ளனர்.

இந்துக் கடவுளான ராமனது அவதாரத்தைப் பற்றி சித்தரிக்கும் ராமாயணம் நீண்ட காலமாக ராமகதா என்ற பெயரில் பாடல்களாக வாய்வழியாக இசைக்கப்பட்டு வந்தது. வால்மீகி முனிவர்தான் முதன் முதலாக அதற்கு எழுத்து வடிவம் கொடுத்தார். வால்மீகி ராமாயணத்தில் குறிப்பிடப்படும் பாத்திரங்களும், சம்பவங்களும், இடங்களும் கற்பனையானவையே. அவற்றுக்கு எவ்வித வரலாற்று ஆதாரமும் கிடையாது.

### அயோத்தியில் ராமர் அவதரித்தாரா?

அயோத்தியின் அரசனாக, கலியுகத்திற்கு முற்பட்ட திருத யுகத்தில் அதாவது கி.மு. 3102-ல் ராமர் அவதரித்ததாக வால்மீகி ராமாயணம் குறிப்பிடுகிறது. ஆனால் இன்றைய அயோத்திக்கும் ராமாயண அயோத்திக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

இன்றைய அயோத்தி கி.மு. 8-ம் நூற்றாண்டில் உருவாகி இருக்கலாம் என்பதற்கான அரிதான சில சான்றுகளே உள்ளன. வால்மீகி குறிப்பிடுவதை விட மிகப் புராதனமான சமூகம் வாழ்ந்ததற்கான அடையாளங்களாகவே அவை உள்ளன. வால்மீகி ராமாயணத்தில் அரண்மனைகள், அந்தப்புரங்கள், மாடமாளிகைகளும் – கோபுரங்களும் சித்தரிக்கப்படுகின்றன. இத்தகைய நகர்ப்புற வளர்ச்சியும் கட்டிடக் கலையும் கி.மு. 8-ம் நூற்றாண்டில் நிகழ்ந்திருக்க வாய்ப்பே கிடையாது.

ராமர் அவதரித்ததாக கூறப்படும் கோசல நாட்டின் தலைநகராக அயோத்தி இருந்ததில்லை. ஆதிகால புத்தமத நூல்கள் கோசல நாட்டின் முக்கிய நகரங்களாக ஷ்ராவஸ்தி, சாகேதம் முதலானவற்றைக் குறிப்பிடுகின்றனவே தவிர அயோத்தியை அல்ல. ஜைன நூல்கள் கூட கோசல நாட்டின் தலைநகராக சாகேதத்தையே குறிப்பிடுகின்றன. அயோத்தி என்ற நகர் கங்கை அருகே இருந்ததாக அந்நூல் குறிப்பிடுகிறதே தவிர இன்றைய சரயு ஆற்றின் கரையிலுள்ள அயோத்தியை அல்ல. குப்த மன்னராகிய ஸ்கந்த குப்தர் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் சாகேதத்துக்கு குடியேறி அதற்கு அயோத்தி என்று பெயர் சூட்டினார். எனவே இதுதான் பின்னாளில் அயோத்தி என ராமாயணத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். 7ம் நூற்றாண்டுக்குப் பிறகு தான் அயோத்தியைப் பற்றிய எழுத்துபூர்வமான ஆதாரங்கள் உள்ளன. ஆக, இன்றைய அயோத்தி சாகேதம் என்ற பெயரில் 5ம் நூற்றாண்டுக்கு முன் நிலவியதுதான் உண்மை. மற்றபடி, வால்மீகி குறிப்பிடும் காலம். கற்பனையானது; ஆதாரமற்றது.

படிப்பகம்

www.padippakam.com

ராமர் அவதரித்ததாக கூறப்படும் அயோத்தி முன்னாளில் பல்வேறு காலங்களில் பல்வேறு சமயங்களின் மையமாக இருந்துள்ளது. அயோத்தியில் ராமர் அவதரித்தார் என்பதைவிட, அயோத்தியில் புத்தர் பிறந்ததற்கான சான்றுகள் வலுவாக உள்ளன. புத்தர் தோன்றி மறைந்த இரு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, மௌரிய வம்ச அரசரான அசோகர் அயோத்தி அருகே புத்தர் அவதரித்த லும்பினி கிராமத்தில் நினைவுச் சின்னம் நிறுவியதாக எழுத்துபூர்வ பதிவுகள் நிரூபிக்கின்றன.

சீன யாத்ரீகரும் வரலாற்றாசிரியருமான சுவான் சாங் என்பவர் தமது நூலில் புத்த மதத்தின் மையமான நகரமாக அயோத்தி திகழ்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார். அயோத்தியில் புத்தர் சில காலம் தங்கியதால் அது புனிதஸ்தலமாக கருதப்பட்டு மடாலயங்களும் ஸ்தூபிகளும் அங்கு நிறைந்திருந்ததாக குறிப்பிடுகிறார். 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் கூட அயோத்தி நகரில் 'கோபதாரு தீர்த்தம்' என்ற புனித தடாகம் இருந்ததாகக் கூறுகின்றனவே தவிர ராமர் அவதரித்த திருத்தலமாக குறிப்பிடவில்லை.

எனவே ராமர் அவதாரம் பற்றிய கதைகள் 11ம் நூற்றாண்டுக்குப் பின்னரே உருவாகியிருக்க வேண்டும். ராமநந்திகள் எனப்படும் பழங்குடி இனத்தின் சாதுக்கள் மூலம் அது கதைப் பாடலாக வட இந்தியாவில் பரவியிருக்கலாம். இந்த ராமநந்திகள் கூட 15, 16ம் நூற்றாண்டுவரை அயோத்தியில் குடியேறியதாக ஆதாரம் ஏதுமில்லை. ஏனெனில் அப்போது சைவ மதம்தான் அயோத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தது. 17ம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் அவர்கள் அயோத்தியில் பெருமளவு குடியேறியதாக ஆதாரங்கள் வலுவாக உள்ளன. அதன் பிறகே அவர்கள் ராமர் கோயிலைக் கட்டி வழிபட்டிருக்க வாய்ப்புள்ளது.

எனவே வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாக வைத்து ராமர் கி.மு. 4ம் நூற்றாண்டில் அவதரித்தார் என்பதும், இன்றைய அயோத்தியும் ராமாயணத்தில் குறிப்பிடப்படும் அயோத்தியும் ஒன்றுதான் என்பதும் குருட்டு நம்பிக்கையில் உருவான ஆதாரமற்ற வாதங்களே ஆகும்.



பிரச்சினைக்குரிய வழிபாட்டுத் தலத்தினுள் 'ராமர் அவதரித்த இடம்' என்று திமிராக அறிவிக்கும் இந்து வெறியர்களின் விளம்பரம்.

### ராமர் கோயில் இடிப்பு: ஆதாரமற்ற புளுகுமூட்டை!

இதேபோல, ராமர் கோயிலை இடித்துவிட்டு அந்த இடத்தில் மொகலாய மன்னரான பாபர் மசூதியைக் கட்டினார் என்று இந்து வெறியர்கள் கூச்சலிடுவது ஆதாரமற்ற வரலாற்றுப் புரட்டு ஆகும்.

''பாபர் நாமா'' என்ற பாபரின் புகழ்பாடும் பாசுரத்தில் ''சொர்க்கம் வரை பெருமை மிகுந்த மாமன்னர் பாபரின் ஆட்சியில், நல்லிதயம் கொண்ட பீர்பாஹி என்பவர் தேவதூதர்கள் வந்திறங்கும் மசூதியைக் கட்டினார்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாபரின் வீர பராக்கிரமங்களையும் அறநெறிகளையும் பற்றி புகழ்பாடும் இந்நூலில் இந்துக்களை வென்றடக்கி, ராமர் கோயிலை இடித்து மசூதியைக் கட்டியதாக எங்குமே குறிப்பிடப்படவில்லை. உண்மையில் அவ்வாறு நடந்திருந்தால் மாமன்னரின் புகழ்பாடும் இந்நூலில் அது நிச்சயம் இடம் பெற்றிருக்கும்.

மொகாலாய காலத்தைச் சேர்ந்த 'அயினி அக்பரி' என்ற நூல் ராமர் என்ற இந்துக் கடவுளைப் பற்றி குறிப்பிடுகிறதே தவிர, அக்பரின் பாட்டனரான பாபர், ராமர் கோயிலை இடித்து விட்டு மசூதியைக் கட்டியதாக எங்குமே குறிப்பிடப்படவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக அக்பர் காலத்தில் அவரது ஆட்சிக்குப்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்த, ராமபக்தரும் புதியதொரு ராமாயணத்தை எழுதியவருமான துளசிதாசர் கூட, தமது நூலில் ராமர் கோயிலை இடித்துவிட்டு மொகலாயர்கள் மசூதியைக் கட்டியதாக எங்குமே குறிப்பிடவில்லை.

### காலனியவாதிகளின் கயமைத்தனம்

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான், ராமர் கோயிலை இடித்துவிட்டு மசூதி கட்டப்பட்டதாக கட்டுக்கதை பரவி அது இந்து - முஸ்லிம் கலவரமாகியது. காலனிய ஆட்சியாளர்கள் சர்ச்சைக்குரிய இந்த வழிபாட்டுத் தலத்தைப் பற்றி அரசு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளனர். ஆயினும் தமது பிரித்தாளும் கொள்கைக்கேற்ப அதில் சில பித்தலாட்டங்களைச் செய்துள்ளனர். ''முஸ்லிம்கள் பிற மதத்தினருடன் சகிப்புத் தன்மை அற்றவர்கள். எனவே இந்துக்கள் வாதிடுவது போல ராமர் கோயிலை இடித்துவிட்டு மசூதி கட்டப்பட்டிருக்கக்கூடும்'' என்று அந்த ஆவணத்தில் அடிக்குறிப்பாக எழுதியுள்ளனர். இன்று இந்து வெறியர்கள் இதைத்தான் வரலாற்று ஆவணமாகக் காட்டுகின்றனர்.

## இந்துவெறியர்களின் சூழ்ச்சியும் ஆக்கிரமிப்பும்

ஐதராபாத்திலுள்ள சார்மினார் கோபுரம் உலகப் புகழ்பெற்ற புராதன சின்னங்களில் ஒன்றாகும். முஸ்லிம் அரசர் குதுப் ஷா கட்டிய இக்கோபுரம் தட்சிண கட்டிடக் கலையின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாக மதிக்கப்படுகிறது. இன்று தேசிய நினைவுச் சின்னமாக உள்ள சார்மினார் கோபுரத்துக்கு இந்து வெறியர்களால் இப்போது ஆபத்து சூழ்ந்துள்ளது.

சந்தடி மிகுந்த சார்மினார் அருகே 1972-ல் திடீரென ஒருநாள் இரவில் இந்து வெறியர்கள் ஒரு சிறிய கோயிலைக் கட்டினர். அக்கோயில் தொன்மைக் காலம் தொட்டு அங்கே இருந்ததாகவும், ஆண்டவன் திடீரென அவதாரம் எடுத்து பூமிக்கு வெளியே வந்ததாகவும் கயிறு திரித்தனர்.

வரலாற்றாசிரியர்களும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சித்துறை அறிஞர்களும் இதை மறுத்து அறிக்கைகள் வெளியிட்டனர். ஆந்திர உயர்நீதி மன்றமும் இக்கோயில் சட்ட விரோதமானது; உடனடியாக நீக்கப்பட்ட வேண்டுமென தீர்ப்பளித்தது. இந்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகமும் வரலாற்று நினைவுச் சின்னம் உள்ள நிலப்பகுதியில் திடீரென முளைத்த இக்கோயிலை உடனடியாக அகற்றுமாறு அரசிடம் கோரியது. ஆனால், 'மதச்சார்பற்ற' அரசோ இதனால் மதக் கலவரங்கள் பெருகும் என்று கூறி அக்கோயிலை அகற்ற மறுத்துவிட்டது.

சிறியதாக இருந்த அக்கோயில் இப்போது பெரிய கோயிலாக திட்டமிட்டே இந்து வெறியர்களால் வளர்க்கப்பட்டு வருகிறது. படிப்படியாக பெரிய கோபுரம், பெரிய ஆலய மணி, ஆறுகால பூசை, முழுநேரப் பூசாரிகள், தர்மகர்த்தா குழு முதலானவற்றைக் கொண்டதாக அக்கோயில் இன்று வளர்ந்துவிட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் அக்கோயில் பூசாரியாக இருப்பவன் ஒரு முன்னாள் ரௌடி. இன்று அவன் சார்மினார் அருகே அரச மரங்களை நட்டு மொத்த நிலத்தையும் ஆக்கிரமிக்கும் சூழ்ச்சியில் இறங்கிய போது போலீசாரால் கைது செய்யப்பட்டான். ஆனாலும் பிணையில் விடுதலையாகி எதிர் வழக்காடி வருகிறான்.

இதே போல மதுராவிலுள்ள ஒரு மசூதி அருகே இந்து வெறியர்கள் திடீரென ஒரு கோயிலைக் கட்டி அங்குதான் இந்துக் கடவுளான கிருஷ்ணர் அவதரித்தார் என்று இப்போது உரிமை கோரி வருகின்றனர். இதுபோல இந்தியாவெங்கும் 64 மசூதிகள் மீது உரிமை கோருகின்றனர்.

மதவெறிக் கலவரம் எட்டிப் பார்க்காமல் இருந்த மே. வங்கத்திலுள்ள மூர்ஷிதாபாத்தில் ஒரு மசூதி அருகே இந்து வெறியர்கள் கோயில் கட்டியதால்தான் ஈராண்டுகளுக்கு முன்னர் கலவரம் மூண்டது. இந்து வெறியர்களின் நோக்கம் என்ன என்பதற்கும், மதச்சார்பற்ற அரசின் யோக்கியதைக்கும் இச்சம்பவங்களே சாட்சியாக உள்ளன.

படிப்பகம்

www.padippakam.com

ஆனால் காலனிய ஆட்சியாளர்கள் தமது ஆவணக் குறிப்புக்கு ஆதாரம் எதையும் காட்டவில்லை. இதிலிருந்தே பிரிட்டிஷாரின் சூழ்ச்சி தெளிவாகிறது. பல முஸ்லிம் அரசர்கள் காலனியாதிக்கத்தை எதிர்த்து வீரத்துடன் போரிட்டதால் முஸ்லிம் சமூகத்தை இழிவுபடுத்தி பழிவாங்கும் வெறியின் காரணமாக அவ்வாறு செய்தனர். மேலும் வதந்தியை அரசு ஆவணமாக்குவதன் மூலம் இந்து - முஸ்லிம் மோதல் தொடர்ந்து நீடித்து அதன் மூலம் மக்களைப் பிரித்தாள தமக்குச் சாதகமாக அமையும் என்ற ஆதிக்க வெறியும் கொண்டு காலனியவாதிகள் இவ்வாறு செய்துள்ளனர். ஆனால் முஸ்லிம் அரசர்கள் இந்துமதத்தினருடன் சகிப்புத் தன்மையோடு வாழ்ந்ததற்கும், இந்துக் கோயில்களைப் புனரமைக்க உதவியதற்கும் ஏராளமான சான்றுகள் உள்ளன.

மொகலாயப் படைகளில் இந்து சைவ மதத்தைச் சேர்ந்த நாகர்கள் படைவீரர்களாக இருந்துள்ளனர். இந்து கோயில்களுக்குத் தருமம் செய்வதும், இந்து சனாதனிகள், மதப் பிரச்சாரகர்களுக்கு வெகுமதிகள் கொடுத்து ஆதரிப்பதும் முஸ்லிம் அரசாட்சியின் வழமையாக விதியாக இருந்துள்ளது. நவாப் சப்தர்ஜங்கின் திவான் பல இந்து கோயில்களைப் புனரமைக்க உதவி செய்ததோடு, அயோத்தி அருகிலுள்ள ஒரு குன்றில் அனுமார் கோயில் கட்டவும் பொருளுதவி செய்துள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக அயோத்தி அருகே உள்ள அனுமார் கோயில் மீது உரிமை கோரி 1855ல் நாகா சாதுக்களுக்கும் சன்னி பிரிவு முஸ்லிம்களுக்கும் மோதல் ஏற்பட்டபோது மொகலாய அரசரான வாஜித் அலி ஷா தாமே தலையிட்டு சன்னி பிரிவு முஸ்லிம்களை அடக்கினார். அமீர் அலி என்பவர் தலைமையிலான முஸ்லிம் மதவெறிக் கும்பலின் மீது ராணுவத்தை ஏவி, 300க்கும் மேற்பட்ட முஸ்லிம்களைக் கொன்று இந்துக்களுக்குச் சாதகமாக நியாயமாகத் தீர்ப்பளித்தார்.



இந்து வெறியூட்டி மக்களை ஏய்க்கும் அயோக்கியத்தனம்: விசுவ ஹிந்து பரிஷத் தலைமையில் பண்டாரங்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

இதன்மூலம் முஸ்லிம் அரசர்கள் எப்போதுமே இந்துக்களுக்கு இசைவாகவும், ஆதரவாகவும் ஆட்சி செய்தனர் என்று நாம் நியாயப்படுத்தி விட முடியாது. ஆதிக்க வெறிபிடித்த போர், வென்றடக்குதலின் போது பரஸ்பரம் இரு சமூகத்தினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்து வெறியர்கள் கூச்சலிடுவது போல முஸ்லிம் அரசர்கள் எப்போதும் இந்துக்களுக்கு எதிராகவும், சகிப்புத்தன்மையற்று கொடுமை செய்ததாகவும் எங்குமே வரலாறில்லை.

### ஆதாரமற்ற வாதங்களும் அகழ்வாராய்ச்சி சான்றுகளும்

எல்லாவற்றுக்கும் மேலாக, அயோத்தியிலுள்ள வழிபாட்டுத் தலத்தின் மீது உரிமை கோரி இந்து - முஸ்லிம் கலவரம் வெடித்த பிறகு, அயோத்தியில் பல இடங்களிலும், அந்த வழிபாட்டுத் தலத்தைச் சுற்றியும் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்து மதத்தவரான சர்மா என்பவர் அந்த அகழ்வாராய்ச்சிக் குழுவின் தலைவராக இருந்தார். ராமாயண அயோத்திக்கும் இன்றைய அயோத்திக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்று அவர் அறிவித்துள்ளார். இதேபோல இந்தியாவெங்கும் 16 இடங்களிலுள்ள மசூதிகள் மீது இந்து வெறியர்கள் உரிமை கோருவதும் ஆதாரமற்றது என அகழ்வாராய்ச்சிக் குழுவினர் ஆய்வு நடத்தி அறிவித்துள்ளனர். இவையனைத்தும் இந்து வெறியர்களின் வரலாற்றுப் புரட்டு - மோசடிகளைத் தோலுரித்துக் காட்டுகின்றன.

அதேசமயம் பிரச்சினைக்குரிய வழிபாட்டுத்தலம் வரலாற்று ரீதியாகவும் பாரம்பரிய கலாச்சார அடிப்படையிலும், மசூதிதான் என்பதற்கே ஆதாரங்கள் வலுவாக உள்ளன. முஸ்லிம்களது மரபுப்படி இந்த வழிபாட்டுத் தலத்தின் மேற்கூரை கவிழ்ந்த கிண்ணம் போல் அமைந்துள்ளது. பக்தர்கள் கால்களைக் கழுவுவதற்கான தடாகம் காலப் போக்கில் சிதிலமடைந்திருக்கலாமே தவிர, இன்று அவ்வாறு இல்லை என்பதைக் காட்டி மசூதி அல்ல என்று வாதிட முடியாது. மேலும் 4 கோபுரங்களைக் கொண்டதாக எல்லா மசூதிகளும் இருப்பதில்லை. ஒற்றைக் கோபுர மசூதிகள் இந்தியாவெங்கும் விரவியுள்ளன. எனவே இதைக் காட்டி அது ராமர் கோயில்தான் என்று நியாயப்படுத்த முடியாது. ஆனாலும், எந்த வகையிலும் ஆதாரமில்லாத நிலையில், இந்து வெறியூட்டி, தாம் பெரும்பான்மை சமூகத்தினர் என்ற தைரியத்தில் கலவரங்களைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் தமது நோக்கத்தை ஈடேற்றிக் கொள்ள இந்து வெறியர்கள் கீழ்த்தரமாக முயற்சிக்கின்றனர்.

இந்நிலையில், பிரச்சினைக்குரிய அந்த வழிபாட்டுத் தலத்தை எம் மதத்தவரும் உரிமை கோர முடியாதபடி தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்க வேண்டுமென்று போலிக் கம்யூனிஸ்டுகளும் சில அறிவு ஜீவிகளும் பாமரத்தனமான தீர்வை முன் வைக்கின்றனர். முதலாவதாக, இது சிறுபான்மை முஸ்லிம்களுக்குச் சொந்தமான மசூதியில் அவர்கள் வழிபாடு நடத்தும் உரிமையை மறுக்கும் அயோக்கியத்தனமாகும். இரண்டாவதாக, எவ்வித ஆதாரமுமின்றி, மதவெறியூட்டி உரிமை கோரும் இந்து வெறியர்களுக்கு இணங்கிப் போகும் சமரச சரணடைவுத் தீர்வாகும். இன்று இம்மசூதியை தேசிய நினைவுச் சின்னமாக்கிவிட்டால், நாளை இதேபோல் வேறு சில மசூதிகளிலும் இந்து வெறியர்கள் வழிபாட்டு உரிமை கோரி போராடும் போது, அனைத்தையும் தேசிய நினைவுச் சின்னமாக்கிவிட வழியமைத்துக் கொடுப்பதாகும்.

இத்தகைய நோக்கத்தோடு தான் இந்து வெறியர்கள் இன்று பல்வேறு மசூதிகளின் அருகே திடீர் கோயில்களைக் கட்டி, மசூதியையும் சேர்த்து உரிமைகோரி வருகின்றனர். மேலும், இவ்வாறு தேசிய நினைவு மண்டபமாக்குவதைக் கண்டு இதர மசூதிகளும் பறிபோய்விடுமோ என்ற பீதியில் முஸ்லிம்கள் இயல்பாகவே போராடக்கூடும். அது மேலும் மதக் கலவரங்களை விசிறிவிடும். இந்து - முஸ்லிம் மத வெறியர்கள் இதற்காகவே காத்திருக்கிறார்கள்.

குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றி ஆழமாகப் பரிசீலித்து முடிவுக்கு வருவதற்குப் பதில் மேலோட்டமாகவும் குருட்டு நம்பிக்கையின் அடிப்படையிலும் கோமாளித்தனமான முடிவுக்கு வருவது இந்து வெறியர்களின் ஆதிக்கத்திற்கே வழிவகுக்கும். எனவே வரலாற்று ரீதியாகவும் பாரம்பரிய மரபு ரீதியாகவும் ஆதாரபூர்வமாக உள்ள இம்மசூதி முஸ்லிம்களுக்கே வழிபாட்டு உரிமையுடையது என்பதை நிலைநாட்டுவதும், இந்து வெறியர்களின் வரலாற்றுப் புரட்டு மோசடிகளை அம்பலப்படுத்தி முறியடிப்பதும் பகுத்தறிவுள்ள அனைவரது உடனடிக் கடமையாகும்.

■ மனோகரன்

படிப்பகம்

www.padippakam.com



# பேரெழுச்சித்திருநாள்

மார்ச் 18- இந்தியப் புரட்சிக்கு மட்டுமல்ல, சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கும் மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த நாள்.

1871-ஆம் ஆண்டு, இதே நாளில்தான் பிரான்சு நாட்டு பாரிஸ் நகரத் தொழிலாளர்கள் முதலாளிகளின் அரசைத் தூக்கி எறிந்துவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றினர். மார்ச் 28-ம் நாள் உலகின் முதல் உழைக்கும் மக்கள் அரசு அமைப்பாகிய பாரிஸ் கம்யூனை நிறுவினர்.

பிரான்சு, ஜெர்மன் முதலாளிகள் தமது பிற்போக்கு இராணுவங்களைத் திரட்டி தொழிலாளர் அரசு மீது தாக்குதல் தொடுத்தனர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 30,000 உழைக்கும் மக்களைக் கொன்று குவித்தனர். மேலும் 45,000 பேரைக் கைது செய்து பலரைத் தூக்கிலிட்டனர். 72 நாட்களுக்கு மட்டுமே நீடித்திருந்த மாபெரும் பாரிஸ் கம்யூனை ஒடுக்கினர்.

''கம்யூன் நசுக்கப்பட்டு விட்டாலும் அன்று தொடங்கிய போர் முடிந்துவிடவில்லை; தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கம்யூனின் படிப்பினைகள் என்றென்றும் அழியாதவை; அழிக்க முடியாதவை. உழைக்கும் மக்களது விடுதலை உலகில் சாதிக்கப்படும் வரை கம்யூன்கள் நிறுவப்படுவது தொடரும்'' என்று சொன்னார் மார்க்ஸ்.

பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்கிற கோட்பாடு மாபெரும் பாரிஸ் கம்யூனின் அனுபவங்களால் தொகுக்கப்பட்டது. அதன் ஒளியில் ருசிய, சீனப் புரட்சிகளை லெனினும், மாவோவும் வெற்றிகரமாகச் சாதித்தனர். அவர்கள் நிறுவிய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ருஷிய, சீன திருத்தல்வாதிகள் சீரழித்து, முதலாளித்துவத்தை நிறுவிய போதிலும் அவற்றின் படிப்பினைகள் அழியாதவை. உலகப் புரட்சி இயக்கத்துக்கு என்றென்றும் அவை வழிகாட்டியாக அமையும்.

1967-ஆம் ஆண்டு, இதே நாளில் தான் மாபெரும் பாரிஸ் கம்யூனைப் பலவகைகளிலும் ஒத்திருக்கும் மாபெரும் நக்சல்பாரி உழவர் பேரெழுச்சி துவங்கியது.

அன்றுதான், மேற்கு வங்கம், டார்ஜிலிங் மாவட்டம், சிலிகுரி வட்டத்தில் உள்ள நக்சல்பாரி கிராமத்தில் கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் இருந்த விவசாய சங்கங்களைச் சேர்ந்த 40,000 விவசாயிகள் எழுச்சிமிகு மாநாடு, கூட்டினர். ''இன்று முதல், ● எல்லா கிராமங்களின் விவகாரங்களிலும் விவசாயிகள் சமிதிகளின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். ● மிட்டா மிராசுதார்களின் எதிர்ப்பை ஒடுக்குவதற்கு அனைவரும் ஆயுதபாணியாக வேண்டும் ● நிலத்தின் மீதான மிட்டாமிராசுகளின் ஏகபோகத்தைத் தகர்த்து, எல்லா நிலங்களையும் கைப்பற்றி விவசாயிகளுக்கு மறுபங்கீடு செய்ய வேண்டும்'' என்று பிரகடனம் செய்தார்கள். விவசாயிகளின் இந்தப் பேரெழுச்சியினால் குலைநடுக்கம் கண்ட மிட்டாமிராசுதார்களும், பெரிய தனக்காரர்களும் கிராமங்களை விட்டுத் தலைதெறிக்க ஓடினர். விவசாயிகள் அவர்களுடைய நிலங்களைக் கைப்பற்றினர். கிராமங்களில் விவசாயிகளின் ஆதிக்கம் நிறுவப்பட்டது. அப்போது மேற்கு வங்க 'இடதுசாரி' முன்னணி அரசின் துணை முதல்வராகவும், போலீசு மந்திரியாகவும் இருந்த ஜோதிபாசு பாசிச இந்திராவுடன் கூட்டுச் சேர்ந்து நக்சல்பாரி உழவர் பேரெழுச்சியை ஒடுக்குவதற்கு போலீசுப் படையை ஏவினார். 10 பெண்கள், குழந்தைகள் உட்பட பலரைக் கொன்று குவித்தது, போலிக் கம்யூனிஸ்டுகளின் அரசு.

1967, மே 25-ம் நாள், அதாவது 75 நாட்களுக்குப் பிறகு நக்சல்பாரி உழவர் பேரெழுச்சி நசுக்கப்பட்டது. ஆனால் நாடெங்கும் மாபெரும் புரட்சிப் பேரலை தோன்றுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் இருந்து வெளியேறிய கம்யூனிஸ்டுப் புரட்சியாளர்கள், இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)யை நிறுவினர்.

தரகு அதிகார முதலாளி, நிலப்பிரபுத்துவ இந்திய அரசின் பயங்கர ஒடுக்குமுறையினாலும், தலைமையின் இடது தீவிரவாத தவறுகளாலும் இ.பொ.க. (மா-லெ) தற்காலிகமான பின்னடைவு, பிளவுக்குள்ளானது. இருந்தபோதும் நக்சல்பாரி உழவர் பேரெழுச்சி மற்றும் இ.பொ.க. (மா-லெ) யின் காரணமாகத் தோன்றிய புரட்சித் தீயை அவர்களால் அணைக்க முடியவில்லை. இந்தியப் புரட்சியின் நம்பிக்கைச் சின்னமான அத்தீ நாடு முழுவதும் பற்றிப் படர்ந்து வருகிறது.

# புரட்சியின் நாயகர்களுக்கு நினைவுநாள்



பகத்சிங்,
சுக்தேவ்,
ராஜகுரு,

- இந்தப் பெயர்களைக் கேட்டு, உலகையே கட்டி ஆண்டு கொண்டிருந்த ஆங்கிலேய ஏகாதிபத்திய வல்லரசு நடுநடுங்கியது.
- இந்த இளைஞர்களை உடனடியாக - தாமதியாது தூக்கிலிட்டுக் கொன்று விடும்படி வேண்டிக் கொண்டார்கள், காந்தியும் பிற துரோகிகளும்.
- இந்த இளைஞர்களின் பெயரால் நாடு முழுவதும் புரட்சித் தீ பற்றிப் பரவுவது கண்டு அஞ்சிக் குலை பதறிப்போனார்கள், எதிரிகள்.
- 1931-ஆம் ஆண்டு மார்ச்சு 23-ம் நாள் இந்தப் புரட்சி வீரர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றது, ஏகாதிபத்திய காலனிய அரசு.

தூக்குமரத்தின் நிழலில் நின்றபடி பகத்சிங் சொன்னான், ''ஏ! வெள்ளைக்கார அதிகாரிகளே! நீங்கள் பாக்கியசாலிகள். இந்திய மண்ணின் வீரர்கள் தங்கள் நாட்டின் விடுதலைக்காக புன்னகையோடு சாவைத் தழுவும் காட்சியை நேரில் பார்க்கும் புண்ணியம் உங்களுக்கு வாய்த்திருக்கிறது!''

இவர்கள் சாவைக் கண்டு அஞ்சவில்லை. மகிழ்வோடும் துணிவோடும் எதிர்கொண்டார்கள். ஏனெனில் இவர்கள் சாவை வென்றவர்கள். பகத்சிங் தனது சகோதரனுக்கு எழுதிய கடைசிக் கடிதத்தின் கடைசி வரிகளை இப்படித்தான் முடித்தான்.

''நாளைக்காலையில் மெழுகுவர்த்தியின் ஒளி மங்குவதைப் போல, நானும் காலை ஒளியில் கரைந்து மறைந்து விடுவேன். ஆனால் நம்முடைய நம்பிக்கைகள், குறிக்கோள்கள் உலகத்தைப் பிரகாசிக்கச் செய்யும். இன்று போய் நாளை நாங்கள் மீண்டும் பிறப்போம் - எண்ணற்ற இந்நாட்டு வீரர்கள் உருவத்தில்''

எவ்வளவு துணிவு! எவ்வளவு வீரம்! எவ்வளவு நம்பிக்கை!

அவ்வளவு தூரம் இந்த நாட்டையும் இந்த மக்களையும் உன்னத இலட்சியத்தையும் நேசித்தார்கள்.

போலிக் கம்யூனிஸ்டுகள் காந்தீய காங்கிரசு துரோகிகளுக்கு வால் பிடித்துக் கொண்டிருக்கும்போது, பகத்சிங்கும், அவனது தோழர்களும் வெள்ளையர் 'நீதி'மன்றத்திலேயே பிரகடனம் செய்தனர்:

உலகத்தின் சட்டம் புரட்சி! மனித முன்னேற்றத்தின் ரகசியம் புரட்சி!

புரட்சி - மனிதனை, மனிதன் சுரண்டுவதற்கும், ஒரு நாட்டை மற்றொரு நாடு சுரண்டுவதற்கும் மரண அடி கொடுக்கும். வெளிநாட்டுச் சுரண்டல் கூட்டம், உள்நாட்டுச் சுரண்டல் கூட்டம் இந்த இரண்டு கொள்ளையர்களின் கோரப்பிடியில் சிக்கி அவலப்படும் மக்களை மீட்டெடுக்கும். அவர்களுக்கு மகிழ்ச்சி கலந்த நல்வாழ்க்கையை மலரச் செய்யும். இந்த நாடு மக்களுக்கே சொந்தம் என்ற நிலையை உருவாக்கும். உருவாக்கியே தீரும்.

புரட்சிக்காக லட்சோபலட்சம் இளைஞர்களை அறைகூவி அழைத்தார்கள்.

நாட்டுக்காகவும், மக்களுக்காகவும், உயரிய இலட்சியத்துக்காகவும், உயிர்நீத்த இந்தப் புரட்சிவீரர்களின் தியாகத்தை மதிப்போம். இவர்களது இலட்சியத்தை ஏற்றுப் புரட்சிப் பாதையிலே நடப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

# வேர்விட்டுப்பரவும் கிரிமினல் அரசியல்

இந்திய மக்கள், பெருமைப்படத்தக்க அரசாங்கத்தை வழங்கப் போவதாக கூறினார். ராஜா வி.பி.சிங். குறிப்பாக, காங்கிரசின் கிரிமினல், பொறுக்கி அரசியலுக்கு எதிராக 'ஜனநாயக' அரசு நிறுவனங்களுக்குப் புத்துயிர் ஊட்டப்படும் என்றார்.

சுயேட்சையான ஜனநாயகப் பூர்வமான தேர்தல் உத்திரவாதம் இதை கண்காணிக்க முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய குழு. வானொலி, வானொளி பத்திரிக்கைகளுக்கு செய்தி சேகரிக்கவும், விமர்சனம் செய்யவும் முழுச்சுதந்திரம் என்றார். தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுபவர்களை கண்டதும் சுடவும், தேர்தல் மோசடிகளில் இறங்குபவர்களுக்கு அதிகபட்ச தண்டனையும் வழங்க போலீசுக்கு அதிகாரத்தை விரிவுபடுத்தினார். தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது 'கிரிமினல்கள் எங்கள் கட்சியில் நின்றாலும் அவர்களுக்கு ஓட்டுப் போடாதீர்கள்' என்று முழங்கினார்.

ஆக, இனி ஓட்டுச் சாவடிகளை குறையாடுதல், கைப்பற்றுதல், தேர்தல் வன்முறை, படுகொலைகள். ஓட்டுச் சாவடிகளுக்குத் தீ வைத்தல், தாழ்த்தப்பட்டவர்களை ஓட்டுச் சாவடிக்களுக்குள் விடாமல் அடித்து விரட்டுதல், ஆயிரக்கணக்கில் குண்டர்களை இறக்கி கள்ள ஓட்டு போடுதல் போன்ற கிரிமினல் அரசியலின் அட்டகாசம் தணியும். குறைந்தபட்சம் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று சாதாரண அரசியல் பார்வையாளர்கள் நம்பினார்கள்!

ஆனால் நடந்ததோ வேறுவிதமாக இருந்தது. நடந்து முடிந்த மாநிலங்களவை தேர்தலில் துப்பாக்கிகளின் எண்ணிக்கையே வெற்றி தோல்விகளைத் தீர்மானித்தது. துப்பாக்கிகளின் வேட்டுச் சத்தம் முன்னைவிட அதிகமாக காதை பிளந்தது. இத் தேர்தலில் காங்கிரசு, காங்கிரசு அல்லாத கட்சிகள் பெற்ற அபரிமிதமான வெற்றிகள் துப்பாக்கி முனையில் தான் சாதிக்கப்பட்டது.

இடைத்தேர்தல் அரியானா - மேகம் தொகுதியில் போட்டியிட்ட துணை பிரதமர் தேவிலாலின் மகன் ஓம்பிரகாஷ் செளதாலா கட்டவிழ்த்துவிட்ட "தேர்தல் படுகொலைகள்" "தொழில்முறை கிரிமினல்களின் நடவடிக்கைகளுக்கு சமமானவை" என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை எழுதுகிறது.

இத்தொகுதியில் 20-க்கும் மேற்பட்டோரை செளதாலாவின் ஆட்கள் படுகொலை செய்தனர். பீகாரில், 60-க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர். பீகார் - முசாப்பர்பூர் தொகுதியை காங்கிரசு கிரிமினல்களின் காலடியில் கிழித்தெறியப்பட்டது. மகாராஷ்ட்ரா மாநிலத்தில் தென்பகுதி முழுவதும், சிவசேனா, பாரதீய ஜனதா இந்து மதவெறியர்களால் வேட்டையாடப்பட்டது.

### அரியானா முதல்வர் ஒரு தொழில்முறை கிரிமினல்.

துணைப் பிரதமராக பதவியேற்ற தேவிலால், தன்னுடைய அரியானா முதல்வர் பதவியை தம் மகன் ஓம்பிரகாஷ் செளதாலாவுக்குச் சூட்டினார். சட்டமன்ற உறுப்பினர் என்ற தகுதிகூட இல்லாமல், முதல்வர் பதவியைப் பெற்ற செளதாலா, உண்மையில் ஒரு தொழில் முறை கிரிமினல்! '78-ஆம் ஆண்டில் கடத்தலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டவர். '80, '84-ஆம் ஆண்டுகளில், மீண்டும் தான் அங்கம் வகித்த கிசான் சங்கத்தின், மாநாட்டிற்காக திரட்டிய நிதியை கையாடல் செய்தது. சட்ட விரோதமாக ஆயுதங்கள் வைத்திருந்தது என்ற குற்றங்கள் இவர் மீது பதிவு செய்யப்பட்டது. அப்போது 'ஓம்பிரகாஷ் செளதாலா இனிமேலும் என் மகன் அல்ல!' என்று தேவிலால் கண்ணிய மனிதராக அறிக்கை விட்டு நாடகமாடினார். ஊரறிந்த அந்த திருடன்தான் இப்போது அரியானா முதல்வர்.

இவர் வரலாறு காணாத தேர்தல் தில்லுமுல்லுகளை எல்லாம் தவிடுபொடியாக்கினார்! மேகம் தொகுதியில் தன்னை எதிர்த்த தம் கட்சியின் போட்டி வேட்பாளரை கொள்ளைக்கூட்ட எதிரி போல் பழி வாங்கினார். ஆனந்தசிங் டங்கி என்கிற போட்டி வேட்பாளர், தொகுதியில் செல்வாக்கு மிக்கவர். மேலும், முதன்மந்திரி பதவி போட்டியில் தோற்கடிக்கப்பட்ட ஓம் பிரகாஷ் செளதாலாவுடன் தம்பி ரஞ்சித் சிங்கின் பினாமி! ஜனநாயக தேர்தல் திரைக்குப் பின்னே தேவிலால் குடும்ப குறுநில மன்னர்களின் வாரிசுரிமைப் போர் அரங்கேறியது.

செளதாலா, அரசு எந்திரத்தை மொத்தமாக மேகம் தொகுதியில் நிறுத்தினார். ஏறக்குறைய 30 கிராமங்களை உள்ளடக்கிய சிறு தொகுதி மேகம்! 4 வாக்காளருக்கு ஒரு போலீசு என்ற ரீதியில் சுமார் 20,200 அரியானா போலீசும், 2,000க்கும் மேற்பட்ட மத்திய ரிசர்வ் போலீசு படையும் நிறுத்தப்பட்டது. செளதாலாவுக்கு விசுவாசிகளான 70-க்கும் மேற்பட்ட உயர் போலீசு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். 'பச்சை சட்டை பாதுகாவலர்கள்' என்ற பெயரில் 5000-க்கும் மேற்பட்ட அரியானா ஜனதா தள கட்சியின் குண்டர்கள் , மேகம் தொகுதியில் குவிக்கப்பட்டனர்.

செளதாலாவின் மகனான அபய்சிங் சிவில் போலீசு கும்பலுக்கும் கூலிக்கு அமர்த்தப்பட்ட குண்டர்களுக்கும் தலைமை தாங்கினார். 1 டஜனுக்கும் மேற்பட்ட துப்பாக்கி ஏந்திய குண்டர்களின் பாதுகாப்போடு, அபய்சிங் தொகுதியை வலம்வந்து கட்டளையிட்டார். மேகம் தொகுதியின் போக்குவரத்து தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டது. மரங்களை வெட்டிப் போட்டும், சாலைகளைப் பிளந்தும், கற்களை குவித்தும், சாலை தடைகளை எழுப்பியது செளதாலாவின் குண்டர்படை! இவையாவும் போலீசு அதிகாரிகளின் கண்ணெதிரில் நடந்தது!

வாகனங்களின் 'நெம்பர் பிளேட்டை' சேறு பூசி மறைத்து அதில் செளதாலாவின் குண்டர்கள் ஆயுதங்களுடன் அணிவகுத்தனர். போலீசு செளதாலாவின் குண்டர்கள் அல்லாத எந்த நபரையும் வாகனத்தையும் தொகுதிக்கு வெளியிலேயே தடுத்து நிறுத்தி மிரட்டியது. பத்திரிக்கையாளர்கள் கண்ணில் பட்டாலே, குண்டர்களை ஏவி அடித்து விரட்டியது போலீசு.

'சண்டே மெயில்' என்ற பத்திரிக்கையின் நிருபர், ரகுநாத் ராவ், புகைப்பட



தேவிலாலின் மூத்தமகன், அரியானா முதல்வர்; கிரிமினல் அரசியலின் கதாநாயகன்


படிப்பகம்

www.padippakam.com

நிருபர் பிரவீன் ஜெயின், மற்றும் 'நேஷனல் ஹெரால்டு', 'இந்தியா டுடே' 'நியூஸ் ட்ரேக்' என்ற வீடியோ பத்திரிக்கை நிருபர்கள், அனைவரும் மிரட்டப்பட்டு தொகுதிக்கு வெளியே விரட்டப்பட்டனர். அவர்களுடைய வாகனங்கள் புகைப்படக் கருவிகள் நாசமாக்கப்பட்டது. புகைப்பட சுருள்கள் குப்பையாக்கப்பட்டது. சாலையோரங்களில் வாகனங்கள் எரிந்து கிடப்பது, ஆயுதங்களை வைத்துக் கொண்டு பல கும்பல்கள் சுட்டுக் கொள்வது, விரட்டிச் செல்வது, யுத்தகளம் போல் காட்சியளித்தது மேகம் தொகுதி. அரசுக் கணக்குப்படி, அத்தொகுதியில் 12 பேர் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

பெரும்பாலான ஓட்டுச்சாவடிகளில் 1மணி நேரத்தில், காலை 10 மணிக்கு முன்பே, 50 சதவிகித ஓட்டுகள் போடப்பட்டது! அவ்வளவும் கள்ள ஓட்டுகள்! சௌதாலாவின் ஆயுதம் தரித்த குண்டர்கள், கும்பல் கும்பலாக, ஓட்டு சாவடிக்குள் சென்று, அதிகாரிகளிடமிருந்து வாக்கு சீட்டுகளை பிடுங்கி, 'பண்டல் பண்டலாக' முத்திரை குத்தி ஓட்டுப் பெட்டிக்குள் திணித்தனர். வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு, பொதுமக்களை எச்சரித்துவிட்டு குண்டர்கள், அடுத்த ஓட்டுச்சாவடிக்கு செல்வது சர்வசாதாரணமாக நடந்தது. போலீசு இவற்றையெல்லாம் சிரித்துக் கொண்டே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என்று பத்திரிக்கையாளர்கள் எழுதுகின்றனர்.

வரலாறு காணாத கிரிமினல் அரசியல் நடவடிக்கைகளுக்காக சௌதாலாவை பதவி விலகக் கோரி, சௌதாலாவின் தம்பி ரஞ்சித் சிங் உட்பட மந்திரிசபையில் சக மந்திரிகள் நான்கு பேர் பதவி விலகினர். மத்திய மந்திரி சபையில், தேவிலாலின் சக அரசியல் எதிரிகள் போர்க்கொடி உயர்த்தினர்.

சௌதாலாவுக்கு எதிராக நடவடிக்கையெடுக்க தவறினால் தான் தனிமைப்பட்டு போகும் அபாயத்தை உணர்ந்த வி.பி.சிங் தன் பங்குக்கு ஒரு நாடகமாடினார். ஜனதா தள கட்சி தலைவர் பதவியிலிருந்து தான் விலகப் போவதாக திடீர் அறிவிப்பு செய்து, தேவிலாலை மிரட்டி மேகம் தொகுதியில் மறுதேர்தலுக்கு பணிய வைத்தார். தேசிய முன்னணி அரசில் தனிப்பட்ட முறையில் தான் நேர்மையாளன் என்பதாக மக்களிடம் பிரமை ஏற்படுத்த இதை வெற்றிகரமாக பயன்படுத்திக் கொண்டார் வி.பி.சிங்.

**பீகார், பகிரங்க படுகொலைகள், ஓட்டுச் சாவடிகள் சூறையாடல்.**

அரசுக் கணக்கின்படி இங்கு தேர்தல் வன்முறையில் 60 பேர் படுகொலை செய்யப்பட்டனர். 200 பேர் காயமடைந்தனர். வடக்கு பீகாரில் பெரும்பாலான மாவட்டங்களில் 90 சதவிகிதத்திற்கு மேல் ஓட்டுப் பதிவு நடந்தது! அதாவது, கிரிமினல்களின் கட்டுப்பாட்டில் ஓட்டுச்சாவடிகள் இயங்கியது. பொதுமக்கள் விரட்டியடிக்கப்பட்டு, கட்டு கட்டாக கள்ள ஓட்டுகள் திணிக்கப்பட்டது



மேகம் தொகுதியில் குண்டர்களால் தாக்கப்பட்ட வாக்காளர்

காங்கிரசு கிரிமினல்கள் தோல்வி ஜன்னியில் ஓட்டுச்சாவடிகளை வெடிகுண்டுகள் வீசி அழித்தனர். ஓட்டுச் சாவடிகளுக்குள் இருந்த தேர்தல் அதிகாரிகளை குண்டுகட்டாக தூக்கி வெளியில் வீசியெறிந்தனர். முசாப்பர்பூர் என்ற நகரத்தின் மொத்த ஓட்டுச்சாவடிகளையும், காங்கிரசு குண்டர்கள் கைப்பற்றி கள்ள ஓட்டுக்களை திணித்தனர். ஓட்டுச் சாவடிகளில் வரிசையில் நின்றிருந்த வாக்காளர்களை துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்து பீதியூட்டினர்.

12-க்கும் மேற்பட்ட 'பட்டாலி'யன்களைக் கொண்ட எல்லை பாதுகாப்புப் படை, மத்திய ரிசர்வ் போலீசும் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. பீகார் மாநில போலீசு, ஜனதாதள் கட்சி குண்டர்களுக்கு எடுப்பு வேலைகளை பகிரங்கமாக செய்தது. இவற்றையெல்லாம் படம் பிடித்த பத்திரிக்கையாளர்களை துப்பாக்கி 'பயனெட்'டாலும், துப்பாக்கி கட்டையாலும் குத்தி கிழித்தது. அன்ரூத் குமார் என்ற பத்திரிக்கையாளர், ரத்தம் ஒழுக போலீசின் அடியிலிருந்து தப்பி பிழைத்தார்.

முசாப்பர்பூர் நகரின் பல ஓட்டுச் சாவடிகளை வெளியில் பூட்டிவிட்டு, உள்ளிருந்து காங்கிரசு குண்டர்கள், கள்ள ஓட்டுக்



அரியானா மேகம் தொகுதி: ஓம்பிரகாஷ் சௌதாலா குண்டர்களின் வன்முறை.

படிப்பகம்

www.padippakam.com

களை திணித்தனர். உள்ளூர் பத்திரிக்கையாளர்கள், வாக்கு சாவடிகளில் சிதறி கிடந்த ஓட்டுச் சீட்டுகளை வாரி வந்து அலுவலகங்களில் பார்வைக்கு வைத்தனர். பல அதிகாரிகள், உயிருக்கு பயந்து ஓட்டுச் சாவடிகளை விட்டு ஓடிவிட்டனர். பல ஓட்டுச்சாவடிகள் கேட்பாரற்றும், கொளுந்தப்பட்டும். நாசமாகி கிடந்தன.

மறுபுறம் காங்கிரசுக்கு எதிராக தேர்தல் கமிஷன் செயல்பட்டதாக காங்கிரசு குற்றம்சாட்டியது. சரா ரஞ்சன் தொகுதியில் 10,000 காங்கிரசு ஓட்டுக்களை எண்ணிக்கையில் சேர்க்காமல், முடிவை அறிவித்துவிட்டனர் என்றும், 182 தொகுதிகளில், 1,200 ஓட்டுச் சாவடிகளில் புகார் ஏதுமில்லாமல் மறுதேர்தலுக்கு தேர்தல் கமிஷன் உத்திரவிட்டது' என்றது. இதன் மூலம் 45 தொகுதிகளை, சிறு ஓட்டு வித்தியாசத்தில், காங்கிரசு தோற்றுவிட்டதாக ஒப்பாரி வைத்தது. தொகுதியில் 90 சதவிகிதத்திற்கு ஓட்டுக்கள் கணக்கில் வராது அல்லது மறுதேர்தலுக்கு உத்திரவிடப்படும் என்ற தன்னுடைய விதிமுறையை காங்கிரசு வெற்றி பெற்ற தொகுதியில், தேர்தல் கமிஷன் அமுல்படுத்தவில்லை என்றது.

பாசிச ராஜீவ் கும்பலின் ஆட்சியின் போது, துப்பாக்கி முனையில் தேர்தல் வெற்றிகள் நிர்ணியிக்கப்பட்டது போலவே, ராஜா வி.பி.சிங்கின் 'ஜனநாயக' ஆட்சியிலும் அச்சாக தொடர்ந்தது. கிரிமினல்களை புறக்கணித்து அல்ல. அவர்கள் காலிடுக்கில் பாதுகாப்பாக பயணம் செய்துதான், காங்கிரசிடமிருந்து அதிகாரத்தை பறித்தது வி.பி.சிங் கட்சி.

இன்னொருபுறம் மகாராஷ்ட்ரம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில், மதவெறியை முன்தள்ளி, பாரதீய ஜனதாவும், காங்கிரசும் வெறியோடு ஓட்டு வேட்டையாடின. முஸ்லீம்களையும், இந்துக்களையும் நேராக பிளந்து வெறுப்பை தூண்டி விட்டன. குறிப்பாக, மகாராஷ்ட்ராவில், சிவசேனாவுடன், பாரதீய ஜனதா சேர்ந்து முஸ்லீம் குடும்பங்களை ஓட்டு போட விடாமல் பீதியூட்டியது.

முஸ்லீம்கள் சிறுபான்மையாக உள்ள இடங்களில் வதந்திகளையும், மோதல்களையும் திட்டமிட்டு நடத்தின. பல பத்தாயிரக்கணக்கில் முஸ்லீம்கள் ஓட்டுப் போடவில்லை என்று புள்ளி விவரங்கள் சொல்கின்றன. காங்கிரசு, முஸ்லீம், தாழ்த்தப்பட்டவர்களின் பாதுகாவலனாக நடித்தது. பெரும்பான்மையாக அவர்கள் உள்ள இடங்களில் கள்ள ஓட்டுகள் போட குண்டர்களை இறக்கியது. இரண்டு கட்சிகளும் இந்தி சினிமா நடிகர்களை மேடையேற்றி மக்களை மயக்கின.

பொறுக்கி அரசியல் - கிரிமினல் அரசியல் மூலம் பாசிச ராஜீவ் கும்பல், இந்திய ஜனநாயகத்தையே கேலி கூத்தாக்கிவிட்டது என்று முதலை கண்ணீர் வடித்து ஆட்சியை பிடித்தன வி.பி.சிங் தலைமையிலான கூட்டணி கட்சிகள். நாட்டை இருண்ட சக்திகளின் பிடியில் தள்ளும் பொறுக்கி, கிரிமினல் அரசியலை புறந்தள்ளி, நாட்டுக்கும் மக்களுக்குமே, புது சுவாசத்தை - ஆரோக்கியமான ஜனநாயகத்தை - இந்திய மக்கள் பெருமைப்படத்தக்க அரசாங்கத்தை வழங்கப் போவதாக வாக்குறுதிகள் அளித்தன. இக்கட்சிகள் பசப்பியது போல் நாடாளுமன்ற ஜனநாயகம் பொறுக்கி - கிரிமினல் அரசியலுக்கு எதிரான ஒரு உன்னத ஆட்சி வடிவம் அல்ல. அனைவருக்கும் வாக்குரிமை என்ற அதன் வேசித்தனமான 'ஜனநாயகம்' பொறுக்கிகளையும், கிரிமினல்களையும் மட்டுமல்ல; தேச துரோகிகளைக் கூட குடிமக்களாக அங்கீகரிக்கிறது. மக்களுக்கு அல்ல; உண்மையில் பொறுக்கிகள், கிரிமினல்கள், தேசத் துரோகிகளுக்கு மட்டுமே அது முழுச் சுதந்திரமும், ஜனநாயகமும் அளிக்கிறது.

எனவே, இதற்கு எதிராக தேசபக்தர்களுக்கும் மக்களுக்கும் மட்டுமே குடியுரிமையும், ஜனநாயகமும்; மக்கள் விரோதிகளுக்கும், தேசவிரோதிகளுக்கும் குடியுரிமையையும் மறுக்கும், ஓட்டுரிமையையும் பறிக்கும் புதிய ஜனநாயக அரசு மட்டுமே, மக்கள் பெருமைப்படத்தக்க அரசாங்கத்தை வழங்கும்.

● பச்சையப்பன்.



**பீகார் முசாபர்பூர்: எதிர்கோஷ்டி நபரை வன்முறை கும்பல் நாயைப் போல் அடிக்கும் கொடூரம்!**



**வன்முறைக்கு பலியான மேகம் தொகுதி உழைப்பாளி.**

அமெரிக்க ஓநாய்களால் ஊட்டி வளர்க்கப்படும் எதிர்ப் புரட்சி குண்டர்களுடன் போரிட்டுக் கொண்டு ஒரு சின்னஞ்சிறு நாடு எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்க முடியும்? அதிலும், அமெரிக்காவின் நவகாலனிய பொம்மை ஆட்சி நாடுகள் சூழ்ந்துள்ள மத்திய அமெரிக்காவில் ஒரு சுதந்திர அரசு எவ்வளவு காலம் நீடிக்க முடியும்? இதோ, விழுந்துவிடும் என்று நாக்கில் எச்சில் ஒழுகக் காத்திருந்தனர் ஏகாதிபத்தியவாதிகள். அவர்களின் முகத்தில் அறைந்துவிட்டு, பத்தாண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சியை நடத்திய நிகரகுவா நாட்டின் சான்டினிஸ்டா புரட்சியாளர்களின் அரசு, கடைசியில், சமீபத்தில் நடந்த தேர்தலில் தோல்வி அடைந்துவிட்டது.

கிழக்கு ஐரோப்பா மற்றும் ரஷ்யாவில் அரங்கேறிவரும் அம்மணமான முதலாளித்துவ மீட்சியும், அண்மையில் ஜப்பான் தேர்தலில் மீண்டும் வலதுசாரி - ஊழல் பெருச்சாளிகள் வெற்றி பெற்றிருப்பதும் உலகெங்கும் பிற்போக்கு சக்திகள் தற்காலிகமாக மேலாண்மை பெற்றிருப்பதைக் காட்டுகின்றன. அதன் தாக்கத்தின் எதிரொலியாக இப்போது நிகரகுவாவிலும் சான்டினிஸ்டா புரட்சியாளர்கள் தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர். அமெரிக்க அடிவருடிகளும் வலதுசாரி பிற்போக்காளர்களும் தற்காலிகமாக வெற்றி பெற்றுள்ளனர்.

மத்திய அமெரிக்காவிலுள்ள சின்னஞ்சிறு நாடு நிகரகுவா. 1934 முதலாக அந்நாட்டை ஆண்ட அமெரிக்க அடிவருடியும் சர்வாதிகாரியுமான சமோசாவின் குடும்ப ஆட்சியை, சான்டினிஸ்டாக்கள் எனப்படும் புரட்சியாளர்கள் ஆயுதப் போராட்டத்தின் மூலம் தூக்கியெறிந்தனர். ஒரு சிறிய நாடுகூட பெரிய அமெரிக்க வல்லரசை வெல்ல முடியும் என்பதை 1979ல் நிரூபித்துக்காட்டி, அமெரிக்காவின் நுழைவாயிலேயே ஒரு சுதந்திர அரசை நிறுவினர்.

நிகரகுவாவைக் கொத்திக் குதறி அம்மக்களின் கடைசி சொட்டு இரத்தத்தையும் உறிஞ்சிக் கொழுத்து வந்த அமெரிக்க கோட்டான்கள் இதைக் கண்டு பேரதிர்ச்சி அடைந்தன. தமது கைக்கூலிகள் மூலம் எதிர்த் தாக்குதல் நடத்தி நிகரகுவா புரட்சி அரசைக் கவிழ்க்க கணக்கற்ற சதிகளை மேற்கொண்டன. நிகரகுவாவின் அண்டை நாடான ஹோண்டுராசில் தஞ்சமடைந்துள்ள சமோசாவின் விசுவாசிகளைக் கொண்ட 'காண்ட்ராஸ்' எனப்படும் எதிர்ப் புரட்சி பாசிச குண்டர் படைக்குத் தனது கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. மூலம் பயிற்சியும் ஆயுத உதவியும் அளித்து தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டது, அமெரிக்கா. அப்பாவி சிவிலியன்களைக் கொன்றும், பயிர் நிலங்களைப் பாழாக்கியும் அட்டூழியங்களைப் புரிந்தது காண்ட்ரா கூலிப் படை.

ஈரானுக்கு ரகசியமாக ஆயுதங்களை விற்று அந்தத் தொகையை காண்ட்ரா குண்டர்களுக்குக் கொடுத்து ரீகன் செய்த சதிகள் ஈரான் - காண்ட்ரா ஊழலாக நாறியது. நிகரகுவாவின் 'பயங்கரவாத கம்யூனிச ஆட்சியை வீழ்த்தி ஜனநாயகத்தை மீட்க' இது அவசியமானது என்று கொக்கரித்து



படிப்பகம்

www.padippakam.com

## நிகரகுவாவில் சான்டினிஸ்டா அரசின் தோல்வி:

# வேதனைப்படுவதா? விமர்சிப்பதா?

தனது ஈனத்தனமான செயலை நியாயப்படுத்தினார் ரீகன். நிகரகுவா புரட்சி அரசின் அதிபர் ஓர்டேகாவை ''ராணுவச் சீருடை அணிந்த சின்னப்பயல்; அனாவசியமான மிருகம்'' என்று வெளிப்படையாக கேலி செய்து, காண்ட்ரா குண்டர்களுக்கான உதவியை அதிகப்படுத்தினார் இன்றைய அமெரிக்க அதிபர் புஷ்.

இத்தகைய பிணந்தின்னிகளுடன் ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டு தேசியப் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதிலும், சுயாதிபத்தியத்தைக் கட்டிக் காப்பதிலும் தொடர்ந்து பாடுபட்டது நிகரகுவா புரட்சி அரசு. ஆனாலும் பாட்டாளி வர்க்கத் தலைமையில்லாத இப்புரட்சி அரசினால் நிலைமைகளைச் சமாளித்து முன்னேற முடியவில்லை. கூட்டணி அரசின் அதிபராக இருந்த ஓர்டேகா தன்னை ஒரு மார்க்சியவாதி என் பிரகடனப்படுத்திக் கொண்டாலும், அவர் குட்டி முதலாளித்துவப் புரட்சியாளராகவே இருந்தார். அதே நேரத்தில் 'உதவி' என்ற பெயரில் உள்ளே நுழைந்த ரஷிய வல்லரசையும், அதன் அடிவருடியாக செயல்பட்ட கியூபாவையும் ஓர்டேகா வரவேற்றார். அதைத் தொடர்ந்து கியூபாவின் ராணுவ ஆலோசகர்களும், ரஷியாவின் ஆயுதங்களும் நிகரகுவாவில் குவியத் தொடங்கின.

ஓர்டேகாவின் ரஷிய சார்பை எதிர்த்து கூட்டணி அரசிலேயே முரண்பாடுகள் எழுந்தன. சில நடுநிலைவாதிகளும், முதலாளித்துவ அறிவுஜீவுகளும் அரசிலிருந்து விலகினர். அமெரிக்காவை எதிர்த்து சவடால் அடித்த பனாமாவின் போதைமருந்து சர்வாதிகாரி நோரிகாவை ரஷியாவும், கியூபாவும் ஆதரித்ததால், ஓர்டேகாவும் அவனுக்குத் துதிபாடினார். ஓர்டேகாவின் இத்தகைய தடுமாற்றங்களாலும், பாட்டாளி வர்க்கத் தலைமையில்லாத பல்வேறு புரட்சிகர வர்க்கங்களின் கூட்டணி அரசாக இருப்பதாலும் முரண்பாடுகளும் குழப்பங்களும் தொடர்ந்தன.

இதைச் சாதகமாக்கிக் கொண்டு ஏகாதிபத்திய அடிவருடிகளும், எதிர்ப்புரட்சி குண்டர்களும் தாக்குதலைத் தீவிரப்படுத்தினர். மறுபுறம் அமெரிக்காவின் பொருளாதாரப் புறக்கணிப்பு, தடைகள் மற்றும் சதிச் செயல்களால் நிகரகுவாவின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. நாட்டின் வருவாயில் பெரும் பகுதியை ராணுவத்துக்கே செலவிட நேர்ந்ததால் பொருளாதார நெருக்கடி முற்றத் தொடங்கியது. 30,000 நிகரகுவாவின் புதல்வர்கள் பலியான பிறகும் எதிர்ப்புரட்சி குண்டர்களுடனான போர் ஒரு முடிவுக்கு வரவில்லை. பணவீக்கம் 2000% உயர்ந்தது. விலைவாசி விண்ணை முட்டியது. 30% மக்கள் வேலையின்மையால் தவித்தனர்.

இந்நெருக்கடியான சூழ்நிலையில், கடந்த ஆண்டில் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற கோஸ்டாரிகா நாட்டின் அதிபர் அரியாஸ் முன்வைத்த சமாதானத் திட்டப்படி, காண்ட்ரா கும்பலுடன் போர் ஓய்வையும், தேர்தல் சட்டத்தைத் திருத்தி ஜனநாயகபூர்வமான தேர்தலையும் நடத்த நிகரகுவா அரசு முன்வந்தது. அதன்படி வலதுசாரி கூட்டணியின் சார்பில் அமெரிக்க அடிவருடியான 60 வயதான மூதாட்டி வயலெட்டா அதிபர் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டார். சிறையிடப்பட்ட எதிர்ப் புரட்சி அரசியல் கைதிகளும், நாடு கடத்தப்பட்ட அரசியல் குற்றவாளிகளும் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு தேர்தலில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். இத்தேர்தலை முன்னாள் அமெரிக்க அதிபர் கார்ட்டர், அமெரிக்க அட்டர்னி ஜெனரல், ஐ.நா. சபையின் பார்வையாளர் ஆகியோர் மேற்பார்வையிட்டனர். பிப்.25 அன்று நடைபெற்ற இத்தேர்தலை உலகிலேயே மிக உன்னதமான, ஜனநாயகபூர்வமான தேர்தல் என்று அவர்கள் பாராட்டினர்.

ஆனால் அதிபர் தேர்தலில் ஓர்டேகா 45% வாக்குகள் பெற்று தோல்வி அடைந்தார். 14 கட்சி கூட்டணியின் சார்பில் நிறுத்தப்பட்ட வயலெட்டா அம்மையார் வெற்றி பெற்றார். இவர், சர்வாதிகாரி சமோசாவின் ஆட்களால் சுட்டுக் கொல்லப்பட்ட 'லாப்ரென்சா' என்ற செய்தித்தாள் உரிமையாளரான சமாராவின் மனைவி ஆவார். இவரது தேர்தல் வெற்றிக்காக அமெரிக்கா 33 லட்சம் டாலரை செலவிட்டது.

அமெரிக்க மாமா புஷ் எதிர்பார்த்தபடியே, நிகர குவாவில் 'ஜனநாயகம்' மீட்கப்பட்டுவிட்டது. ஆனால் வயலெட்டா அம்மையாரால் நிலைகுலைந்த நிகரகுவாவின் பொருளாதாரத்தை ஒருக்காலும் தூக்கி நிறுத்த முடியாது. பதவியேற்கும் முன்னரே அவர் அமெரிக்காவிடம் உதவி கேட்டு திருவோட்டைத் தூக்கிவிட்டார். ஏற்கனவே பனாமாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் 'ஜனநாயக'த்தை மீட்கும் திருப்பணிக்கு அமெரிக்க தருமகர்த்தாக்கள் உதவ வேண்டியிருக்கிறது. இதோடு நிகரகுவாவுக்கும் உதவி செய்தால் கஜானா காலியாகிவிடும் என்று அமெரிக்க செனட் உறுப்பினர்களே புஷ்ஷை எச்சரிக்கின்றனர். இந்நிலையில் அதிக விலை கொடுத்து நிகரகுவாவில் எவ்வளவு காலம் 'ஜனநாயக'த்தைக் காப்பார்கள் என்பது சந்தேகம் தான். மேலும், பாசிச முறையில் பயிற்றுவிக்கப்பட்ட எதிர்ப்புரட்சி போதைமருந்து மாஃபியா கும்பலான காண்ட்ரா படைகள் ஓர்டேகாவின் தோல்வியை அடுத்து 'ஜனநாயக'ப் பாதைக்கு ஒருக்காலும் திரும்பிவிடாது. அதோடு இன்றைய வயலெட்டா அம்மையாரின் ஆட்சியைத் தூக்கியெறிந்துவிட்டு, தனது நம்பகமான விசுவாசியின் ஆட்சியை நிறுவ இதே காண்ட்ரா குண்டர் படையை அமெரிக்கா பயன்படுத்தவும் கூடும்.

அமெரிக்காவின் அச்சுறுத்தல், தடைகள், கூலிப் படையினரின் தாக்குதல், துரோகிகளின் கழுத்தறுப்பு முதலான எண்ணற்ற இடர்ப்பாடுகளை சமாளித்து பத்தாண்டு காலம் தாக்குப்பிடித்த சான்டினிஸ்டா புரட்சி அரசின் வீழ்ச்சி வேதனைக்குரியதுதான். ஆனால் அதன் வீழ்ச்சிக்கு எதிரிகளின் தாக்குதலைவிட அதன் சொந்த பலவீனங்களும் குறைகளுமே பிரதான காரணமாக உள்ளது. கூட்டணி அரசில் பாட்டாளி வர்க்கத் தலைமையின்மை, மார்க்சிய - லெனினியக் கண்ணோட்டமின்மை, சுய சார்பில் உறுதியாக நிற்காமல் ரஷ்ய ஏகாதிபத்திய சார்பு நிலை எடுத்தது, துரோகிகள் - ஊசலாட்டக்காரர்களிடம் காட்டிய் தாராளவாதம் முதலான பாரதூர "..ா தவறுகளால் சான்டினிஸ்டா அரசு பலவீனப்பட்டு தோல்வியடைந்துள்ளது. ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒரு சின்னஞ்சிறு நாட்டில் சுதந்திர அரசை நிறுவிக் கட்டிக்காத்த சான்டினிஸ்டாக்களின் தோல்வி வேதனை தரும் செய்திதான். ஆனால் வெறுமனே அனுதாபப்படுவதைவிட, தவறுகளை நேர்மறையில் விமர்சித்து எதிர்மறையில் படிப்பினை பெறுவது நூறு மடங்கு வலிமை மிக்கது. ஏனெனில் அது ஒன்றுதான் சான்டினிஸ்டாக்களுக்கு மட்டுமின்றி உலகப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கும் வழியமைத்துக் கொடுக்கும்.

■ குமார்

தேர்தலில் வென்ற வயலெட்டா அம்மையாருக்கு வாழ்த்து கூறும் ஓர்டேகா.



படிப்பகம்

www.padippakam.com




● *சோசலிச சமுதாயத்தில் சிறுவீத உற்பத்தி என்றால் என்ன? அதன் குறிப்பான தன்மை என்ன? சிறுவீத உற்பத்தி உள்ளவரை பொதுவுடமைச் சமுதாயம் மலராதா?*

**— சு.தமிழ்ச்செல்வன்**

○ ஒரு நாட்டில் சோசலிசப் புரட்சி வெற்றி பெற்றதும், அங்கே பாட்டாளிவர்க்க சர்வாதிகார அரசின் ஏகபோகமாக, அனைத்து மக்களின் உடமையாக மாற்றப்படுகின்றன. விவசாயம் கூட்டு டமை முறையில் அமைக்கப்படுகின்றன. இருந்தபோதும் தனிநபர், குடும்பம், கிராமம், ஆலை என்கிற அளவுகளில் சுயதேவைக்கு, சொந்த உபயோகத்துக்கு என்பதாகத் தொடங்கி ஆயிரக்கணக் கான சிறுவீத உற்பத்தி தொடர்ந்து நீடிக்கவே செய்யும். வீட்டுத் தோட்டங்கள் - துண்டு நிலங்களில் காய்கறிகள், பழ வகைகள், பூக்கள் பயிரிடுவது; கோழி, ஆடு பன்றி வளர்ப்பது; நூல் நூற்பது, கம்பளி ஆடைகள் பின்னுவது, ஆடைகள் தைப்பது, அஞ்சனப் பெட்டி, முக்காலி போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் செய்வது; விளையாட்டு, பொழுதுபோக்கு, கலை - அழகுசாதனப் பொருட்கள் செய்வது; இவை போன்றே ஆலைகளிலும் பல சிறு வீத பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். இப்படிப்பட்ட சிறு வீத உற்பத்தி மக்களின் சிந்தனை, வாழ்க்கை, சமூக, பொருளாதார முறைகளில் முழுமையான மாற்றங்கள் - கம்யூனிசத் தன்மைகள் ஏற்படும்வரை நீடிக்கவே செய்யும்.

அதோடு சோசலிச சமுதாயத்திலும் சமனற்ற ஊதிய, விநியோக முறையும், பரிமாற்றத்திற்கான வடிவமாக பணமும் நீடிப்பதால் மேற்படி சிறுவீத உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனைப் பண்டமாக, வியாபாரச் சரக்காக மாறுவது தவிர்க்க முடியாது. சோசலிச சமுதாயத்திலும் உழைப்புக்கேற்ற ஊதியமே விதியாக இருக்கும். எனவே, தனி நபர் உடல் - மூளை உழைப்பிலும், குடும்ப உறுப்பினர்களின் பங்கேற்பிலும் தேவையிலும் நிலவும் வேறுபாடுகள் காரணமாக அவர்களின் ஊதிய - விநியோக அளவுகள் ஏற்றதாழ்வாகவே இருக்கும். அதாவது பல குடும்பங்களும், தனி நபர்களும் அடிப்படைத் தேவைக்கான வருமானம் மட்டுமே அடையும் அதே சமயம் வேறு பல குடும்பங்களும், தனி நபர்களும் தேவைக்கு அதிகமான வருமானத்தை அடைய முடியும். பொருட்களையும் உழைப்பையும் மதிப்பீடு செய்யும் அளவுகோலாகவும், பற்று - வரவு மற்றும் பரிவர்த்தனைக்கான ஊடகமாகவும் பணமே புழக்கத்தில் இருப்பதால் மேற்படி உபரி வருமானத்தைக் கொண்டு அதிகாரபூர்வமற்ற முறையில் சேமிக்கவும், பற்று - வரவு, கடன் வழங்குதல், வர்த்தகத்திலும் ஈடுபட முடியும். இவற்றினால் சிறுவீத உற்பத்திப் பொருட்களை வைத்து அதிகாரபூர்வமற்ற, பெரும்பாலும் இரகசியமான ஒரு பொருளாதாரம் சோசலிச சமுதாயத்திலும் நீடிக்கிறது.

ஆகவே, சோசலிசப் புரட்சியினால் தூக்கியெறியப்பட்ட முதலாளி வர்க்கத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கான ஊற்றுமூலமாகவும் மீண்டும் முதலாளித்துவத்தை நிலைநாட்டுவதற்கான அபாயகரமான அடிப்படையாக சிறுவீத உற்பத்தி அமைகிறது. முதலாளி வர்க்கத்தின் சக்தி அதன் சர்வதேசத் தொடர்பிலும், சர்வதேச மூலதனத்திலும் மட்டுமல்ல பழக்கவழக்கங்களின் சக்திவாய்ந்த பிடிப்பிலும் சிறு உற்பத்தியின் பலத்திலும் கூட இருக்கிறது; சோசலிச சமுதாயத்துடன் தொடர்புடைய சர்வதேச அளவில் மிகமிகப் பரந்ததாக நிலவும் சிறுஉற்பத்தி இடையறாதும், தினந்தோறும், மணிதோறும், தன்னியல்பாகவும் ஒரு திரளான அளவிலும் முதலாளித்துவம் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்துக்கான தோற்றுவாயாக இருக்கிறது. எனவே சிறுவீத உற்பத்தி உள்ளவரை பொதுவுடமைச் சமுதாயத்தைப் படைக்க முடியாது.

நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் தூக்கியெறியும் ஜனநாயக, சோசலிப் புரட்சியைவிடப் பன்மடங்கு கடினமானது சிறு உற்பத்தியாளர்களை ஒழித்துக் கட்டுவது. இவர்களை விரட்டியடிக்கவோ, நசுக்கவோ முடியாது; இணக்கமாக வாழ வேண்டும்; மிகவும் நீண்ட, நெடிய, மெதுவான எச்சரிக்கையான அமைப்பு வேலையால் மட்டுமே மறுவார்ப்பும் மறுபோதனையும் செய்ய முடியும்; செய்ய வேண்டும் என்கிறார் லெனின்.

● *தங்கள் கட்சியின் கொள்கை சரியானது; ஆனால் நடைமுறை சரியானது என்று எனக்குத் தோன்றவில்லை.*

**— ஜோசப், மத்திய சிறை, கடலூர்.**

○ எமது கொள்கைக்குப் பொருத்தமான நடைமுறையை மேற்கொள்வதாகவே கருதுகிறோம். குறிப்பான சான்றுகளுடன் சுட்டிக்காட்டினால் பரிசீலிக்கவும், தவறென்றால் திருத்திக் கொள்ளவும் தயாராக உள்ளோம்.

● *'புதிய ஜனநாயகம்' பத்திரிக்கை ஆசிரியர் பட்டியலில் இனம் என்ற இடத்தில் 'தமிழன்' என்று ஏன் போடவில்லை?*

**— சு.தமிழ்ச்செல்வன்**

○ இதுகுறித்து, ''தேசிய இனப்பிரச்சினையில் இவர்கள் அணுகுமுறை தவறானது என்பதற்கு இதுவே ஆதாரம்'' என்றும், ''தமிழ் இன உணர்வற்றவர்கள், சட்டத்தைக் கண்டு அஞ்சுகிறார்கள்'' என்றும் இன்னும் பலவாறும் பு.ஜ.வுக்கு எதிராக சிலர் அவதூறுகள் செய்வதாக அறிந்தோம். அவற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் கேள்வி அனுப்பிய தோழருக்கு முதலில் நன்றி கூறுவோம்!

பத்திரிக்கை பதிவுக்கான படிவத்தில் தேசிய இனம் என்ற இடத்தில் 'இந்தியன்' என்று குறிப்பிடுவது சட்டபூர்வமான அவசியம் - நிர்ப்பந்தம். அதிலே 'தமிழன்' என்று எழுதி யாராவது பதிவு பெற்றிருந்தால் அலுவலகக் கவனக்குறைவினால் அனுமதிக்கப்பட்டதுதான். இதற்கு மட்டுமல்ல. பள்ளி - கல்லூரிச் சான்றிதழ்கள், அரசு வேலைகள், 'விசா'க்கள் போன்ற சட்டபூர்வ வாய்ப்புகளைப் பயன்படுத்தப் போகிறபோது இந்த நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதன்படி பத்திரிக்கைப் பதிவு படிவத்தில் எழுதினோம். ஆரம்பத்தில் பெயர் ஒதுக்கீடு மட்டுமே கிடைத்திருந்தது. பிறகு பதிவுக்காக அனுப்பும்போது படிவத்தில் உள்ளவாறே பத்திரிக்கையிலும் அச்சிடவேண்டி இருந்தது. தமிழ் இன விடுதலையை இலட்சியமாக அறிவித்துள்ள சாலை இளந்திரையனின் 'வீரநடைய் அறிவியக்கம்' ஏடு கூட இன்னமும் 'இனம்: இந்தியன்' என்றுதான் அச்சிடுகிறது.

இரண்டாம் ஆண்டு புதிய ஜனநாயகம் பத்திரிக்கையில் பதிவுப்படிவத்தை அச்சிட வேண்டியபோது வேறொரு வாய்ப்பு இருப்பதை அறிந்தோம். தேசிய இனம் என்னும் இடத்தில் அதற்குப் பதிலாக ''இந்தியரா?''/ ''இந்தியக் குடிமகனா? (வெளிநாட்டவர் என்றால் எந்த நாட்டவர் என்று குறிப்பிடவும்)'' என்று எழுதிவிட்டு ''ஆம்''/ ''இந்தியர்'' என்று எழுத முடியும். இப்படிப் பல பத்திரிக்கைகள் பின்பற்றுகின்றன. இது, தேசிய இனத்தைக் குறிப்பதாக இல்லை. நாட்டையும், குடியுரிமையையும் தான் குறிக்கிறது. எனவே இரண்டாம் ஆண்டில் இருந்து இதையே பின்பற்றி வருகிறோம். இதிலே எந்தவகையிலும் தவறு இருப்பதாக நாம் கருதவில்லை. இப்படிச் செய்வதால் நாம் 'தமிழ் இனத்தவர்' என்பதை மறுப்பதோ, தமிழ் இன உணர்வற்றவர்கள், சட்டத்துக்கு அஞ்சுபவர்கள் என்றோ, தேசிய இனப்பிரச்சினையைத் தவறாக அணுகுவதோ ஆகாது. நமக்கு எதிராக இப்படி அவதூறு செய்பவர்கள் தமது அமைப்புக்கு ஆள் சேர்க்கும் வேறு நோக்கங்களுக்கு தான் தமிழ் தேசிய இனப்பிரச்சினையைப் பயன்படுத்துகிறார்கள். அதே சமயம், 'இந்திய தேசியம்' என்ற கண்ணோட்டத்துக்கு எதிராகவும், தமிழின உரிமைக்காக புதிய ஜனநாயகமும் அதன் தோழமை அமைப்புகளும் தொடர்ந்து போராடி வருவதற்கான சான்றுகள் பலவும் கூற முடியும். இருந்தாலும் நமக்கு எதிராக அவதூறுகள் செய்வதற்கு இந்த சட்டபூர்வ சடங்கைக் கூட ஒரு ஆயுதமாக

படிப்பகம்

www.padippakam.com

# ஈழம்: கொலைகளுக்கு யார் பொறுப்பு?

# இந்தியனா? தமிழனா?

# சோசலிசத்தில் சிறுஉற்பத்தியின் விளைவு?

எதிராளிகள் பயன்படுத்தி வருகிறார்கள். 'புதிய கலாச்சாரம்' செய்ததைப் போல அதற்கான வாய்ப்பையும் அவர்களுக்கு மறுப்பது தான் இந்த அவதூறுகளுக்கு ஆப்பறையும். அதையே செய்வோம்.

தமிழின விடுதலையை இலட்சியமாக அறிவித்துள்ள சாலை இளந்திரயனின் 'வீரநடைப் அறிவியக்கம்' (1990 வரை), கேடயம் - மனஓசை ஏடுகள் (1986 வரை), சமரன் (1989 வரை) ஆகியவை 'தேசிய இனம்: இந்தியன்' என்று அச்சிட்டுள்ளன. ஆனால் புதிய ஜனநாயகத்துக்கு எதிராக மட்டும் இப்படித் தாக்குதல் நடக்கிறது.

● *தோழர் ஒருவர் அ.இ.அ.தி.மு.க.வில் இருந்து பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்துள்ளார். அதன் பிறகு அவர் கூலிப் பிரச்சினை போன்ற சமூகப் பிரச்சினையில் முதலாளிகளிடத்தில் நியாயத்தைக் கேட்டதால் தோழருக்கு யாரும் வேலை கொடுப்பதில்லை. அவர் அன்றாடக் கூலி வேலை செய்தால்தான் வயிறு வளர்க்க இயலும். இதற்கு என்ன செய்யலாம்? மறைமுக ஆதரவு தெரிவிப்பதா? அல்லது முதலாளித்துவத்தில் ஒத்துப் போவதா? என்ன செய்வது?*

**— நவீன் சந்திரன், திருச்சி.**

○ முதலாளித்துவத்தை முழுமையாக ஒழித்துக் கட்டும் வரை அவர்களின் அநியாயங்கள் வெவ்வேறு அளவுகளில் நீடிக்கவே செய்யும். ஒவ்வொரு பிரச்சினையிலும் உடனடியாகவும், தனிப்பட்ட முறையிலும் நியாயத்துக்கான போராட்டத்தைத் துவங்கி வெற்றி பெற்றுவிட முடியாது. கூலிப் பிரச்சினையில் நியாயத்தைக் கேட்பது கூட நம்முடைய பலத்தையும் எதிரியின் பலவீனத்தையும் பொருத்தே இருக்கும். எனவே தனி ஒருவராக மோதுவதைத் தவிர்த்து இரகசியமான முறையில் சக தொழிலாளர்களின் ஆதரவைத் திரட்டி, அதன் வளர்ச்சிக்கேற்ப நியாயத்துக்கான போராட்டத்தைப் படிப்படியாக உயர்த்திட வேண்டும். குறிப்பிட்ட முதலாளியிடம் வேலை செய்யவே முடியாது. அவனது அட்டூழியங்களை இனிமேலும் சகித்துக் கொள்ளக் கூடாது என்கிற நிலை உருவாகாத வரை தற்காலிக சமரசங்கள் செய்து கொள்வதும் தவிர்க்க முடியாது. அப்படிச் செய்வது ஒட்டு மொத்தமாக முதலாளித்துவத்தோடு ஒத்துப் போவதாகாது.

● *மார்க்ஸ், லெனின், எங்கெல்ஸ், கார்க்கி, மாவோ ஆகியோரின் நூல்களைப் படிக்க விரும்புகிறோம். ஆனால் 'ஆறு ரூபாய்' சம்பளத்தில்... மேற்படி நூல்களை வாங்கிப் படிக்க இயலவில்லை. நூலகங்களிலும் கிடைப்பதில்லை. அதனால், புதிய ஜனநாயகத்தில் முக்கியமான நூல்களை தொடராக வெளியிட முடியுமா? அல்லது சலுகை விலையில் எங்கு கிடைக்கும் என்பதைக் கூறவும்.*

**— அன்பன் அறிவழகன், சென்னை.**

○ உழைக்கும் வர்க்கத் தோழர்களுக்கு இது கடினமான பிரச்சினைதான். போலிக் கம்யூனிஸ்டுகள் சார்புடைய பதிப்பகங்கள் புரட்சியாளர்களின் ஆர்வத்தையும்கூட லாபம் ஈட்டுவதற்கான வாய்ப்பாகக் கருதுகின்றன. அடக்கவிலையை விட 5, 6 மடங்கு லாபம் வைத்து விற்கின்றன. இருந்தாலும் ருசிய, சீன வெளியீடுகளுக்காக அவற்றையே பயன்படுத்த வேண்டியுள்ளது. போதிய மூலதனமும் வாய்ப்பு வசதிகளும் இல்லாததால் புரட்சிகர அமைப்புகள் எல்லா நூல்களையும் வெளியிட இயலவில்லை. இயக்கத்துக்கு உடனடி அவசியமான நூல்களை மட்டுமே, கூடியவரை குறைவான விலையில் வெளியிட முயன்று வருகிறோம். நடப்பு அரசியலுக்கு முக்கியத்துவமளிக்கும் குறைந்த பக்கங்களையே கொண்ட புதிய ஜனநாயகத்தில் அவற்றை வெளியிட இயலாது. பரவலான மக்கள் திரள் வாசகர்களை அடைய விரும்பும் ஏட்டின் பரிமாணத்துக்கும் அது பொருத்தமான பணியாகாது. அதைவிட முக்கியமாக பின்வரும் வழியை நாம் வலியுறுத்துகிறோம். ''ஒருத்தனுக்குத் தலைச்சுமை பத்துப் பேருக்குப் பல்லுக்குச்சி'' என்பார்கள். தனியொருவராக முயலுவதைவிட மற்ற சிலரோடு சேர்ந்து சாத்தியமான சிறு தொகையைக் கொண்டு நூல்கள் வாங்கிப் படிப்பது, பகிர்ந்து கொள்வது எளிதானது. தனி மனிதப் போக்கைக் கைவிட்டு அமைப்பு சார்ந்து சிந்திப்பதும் செயல்படுவதும் இன்னமும் சிறப்பானது. இது போன்ற பல பிரச்சினைகளையும் அது தீர்க்கும்.

● *தமிழரசன் இயக்கம் அழிந்துவிட்டதா அல்லது இயங்குகின்றதா? அவருடைய கொள்கை சரியானதா?*

**— ஜோசப், மத்திய சிறை, கடலூர்.**

○ அழிந்துவிடவில்லை. இன்னும் சிலர் அந்த இயக்கத்தை நடத்துகிறார்கள். தமிழ்த் தேசிய இனம் ஒடுக்கப்படும் வரை, தமிழ்த் தேசிய இனத்துக்கு சுயநிர்ணய உரிமை கிட்டும் வரை அதற்கான அடிப்படையை யாரும் அழித்துவிட முடியாது. தமது இயக்கத்தின் நண்பர்களையும் எதிரிகளையும் வரையறுப்பதிலும், இயக்கத்தின் பாதையை வகுத்துக் கொள்வதிலும் செயல்படுத்தியதிலும் தமிழரசன் பின்பற்றிய கொள்கை தவறானது.

● *பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா அல்லது இறந்துவிட்டாரா? புலிகளின் போக்கை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?*

**— ஜோசப், மத்திய சிறை, கடலூர்.**

○ பிரபாகரன் உயிருடன்தான் இருக்கிறார். அவர் இறந்துவிட்டார் என்கிற வதந்தியை 'ரா'வும், காங்கிரசும், ஈழத் துரோகிகளும், போலிக் கம்யூனிஸ்டுகளும், இந்தியக் 'கிசுகிசு' ஏடுகளும், கூலிப் பிரச்சாரகர்களும் தான் பரப்பி வருகிறார்கள்.

சிங்கள இன ஒடுக்குமுறையையும், இந்திய ஆக்கிரமிப்பையும் எதிர்த்துப் போரிடும் தன்மைகளில் மட்டும் தான் புலிகளை ஆதரிக்க முடியும். மற்றபடி அதன் இனவெறி, பாசிசப் போக்குகளை ஆதரிக்க முடியாது.

● *அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், உமா மகேஸ்வரன் ஆகியோரை சுட்டுக் கொன்றது யார்?*

**— ஜோசப், மத்திய சிறை, கடலூர்.**

○ முகுந்தன் என்ற உமா மகேஸ்வரனை அவருடைய குழுவைச் சேர்ந்த அதிருப்தியுற்ற சிலரே, அவருடைய 'தோழமைக் கொலைகள்' கண்டு ஆத்திரமுற்று சுட்டுக் கொன்று பழிதீர்த்தனர்.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொலைகளுக்கும், தமக்கும் சம்பந்தமில்லை, கொலையாளிகள் தமது அமைப்பிலிருந்து ஏற்கனவே வெளியேறியவர்கள் என்று அப்போது புலிகள் கூறினர். ஆனால் அக்கொலைகளுக்காக கடந்த மாதம் புலிகள் தாமே உரிமை பாராட்டிக் கொண்டனர். துரோகிகளின் சாவு இறகைவிட லேசானதாகவே கருதமுடியும்; ஆனால் அதற்குரிய உரிமை பாராட்டுவதில் புலிகளுக்கு என்ன தடுமாற்றம், தயக்கம்?

எதிரிகள் - துரோகிகள் அல்லாதவர்கள், பகைமையற்ற முரண்பாடுகளும், கருத்து வேறுபாடுகளும் கொண்டவர்களைக் கூட பாசிச முறையில் கொல்வதை புலிகள் வழக்கமாக்கி விட்டார்கள். குறிப்பாக கடந்த செப்டம்பரில் யாழ் பல்கலைக்கழக உடற்கூற்றியல் பேராசிரியை டாக்டர் இராஜினி திரணகமவைச் சுட்டுக் கொன்றுவிட்டு ஈழத் துரோக குழுக்கள் மீது பழிபோட்டு புலிகள் தாமே முதலைக் கண்ணீர் வடித்தனர். இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு, மனித உரிமை மீறல்களில் புலிகளின் பங்குபற்றி விமர்சித்து இராஜினி நூல் எழுதியதுதான் காரணம். இப்படிப்பட்ட பாசிசக் கொலைகள் புலிகளின் வழமையான செயல் என்று தெரிந்துவிட்டதால் அவர்கள் ஈழத் துரோகிகளைத் தண்டிப்பதைக்கூட நியாயப்படுத்த முடியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com

# பாமரர்களின் அவலம் பணக்காரர்களின் கும்மாளம்

தேன், பேரீச்சம்பழம், ரோஜா இதழ்கள், குங்குமப்பூ - இவற்றை ஓர் அபூர்வ கலவையாகச் சேர்த்து 'காரட் ஹல்வா' தயாரித்தால் எப்படியிருக்கும்...?

அரண்மனை பங்களாவின் விசால மான தோட்டத்தில் காற்றடித்த நவீன ரப்பர் குளத்தில் நீந்திவிட்டு 'ஹேர்டிரைய'ரின் இளஞ்சூட்டு காற்றில் தலைமுடியை கோதி னால் எப்படியிருக்கும்...?

கண்ணுக்கு இதமான வண்ணம் பூசிய குளுகுளு பெரிய ஹாலில், வண்ண வானொளியில் பிடித்தமான சினிமாவை குடும்பத்தோடு பார்த்தால் எப்படியிருக் கும்...? கொரிக்க வறுத்த முந்திரி, குடிக்க குளிர்பானம், உடல்வலியை போக்க வெது வெதுப்பான நீரடைத்த நவீன மெத்தையில் படுத்துக் கொண்டு, 'ஜோக்'குகளை பறி மாறி நண்பர்களுடன் பொழுதை கழித்தால் எப்படியிருக்கும்...?

'சோடியக்', 'ஸ்ஸுனோஓயிட்', 'ரெமண்டஸ்' நிறுவனங்கள் நேற்று அறிமு கப்படுத்திய ஆடைகளை அணிந்துக் கொண்டு, 'பிலிப்ஸ் ஹெட்போனி'ல் அந்த ரங்கமாக தவழ்ந்து வரும் இசையை ரசித்த படியே, 'இந்த் சுசிகி', 'ஹீரோ ஹோண்டா' வில் காற்றை கிழித்துக் கொண்டு சாலை யில் பறந்தால்... ஆ... ஆஹா எப்படியிருக் கும்...?!

'வெந்ததை தின்று விதிவந்தால் சாவோம்' என்று வாழ்ந்து மடியும் ஏழை உழைப்பாளி குடும்பங்களுக்கு இப்படி ஒரு கும்பல் பூமியில் கால்படாமல் வாழ் வது தெரியுமா?

விவசாய குடும்பப் பெண்கள் தமது குடும்பப் பாரத்தை சுமக்கப்படும் வேதனை யையும், நகர்புறத்து மேட்டுக் குடி சீமாட்டி கள் நகத்தில் அழுக்குபடாமல் அனுபவிக் கும் சுகத்தையும் நீங்கள் எப்போதாவது ஒப்பிட்டு பார்த்தது உண்டா?

அதற்கெல்லாம் நேரமேது? இடுப் பொடிய வேலை செய்து இரவு படுப்ப தற்கே நேரம் சரியாகிவிடுகிறது. கழனிக் காட்டிலும், களத்து மேட்டிலும், கட்டிட வேலையின் ஊடேயும், பொறுக்கிவந்த சுள்ளியை, மரப்பட்டையை, உடைந்த சட் டங்களை வைத்து அடுப்பு ஊதி சோறு சமைத்து சாப்பிடுவதற்குள் பாதி உயிர் போய்விட்டது.


விடிவதற்கு முன்பே குடிசையில் விட் டுபோன கடைக்குட்டி பையனை வந்ததும் தூக்கிவைத்து கொஞ்சுவதற்குக்கூட நேர மில்லை. மாமியாரை உரித்துவைத்து இடுப் பிலேயே ஒட்டிக் கொண்டிருக்கும் மகளை தரையில் கிடத்தவும் முடியவில்லை. அவள் உடம்பெல்லாம் சுட்டி, வயிற்றுப் போக்கு வேறு! ஆதரவாக மடியிலும், இடுப்பிலும் மாற்றிமாற்றி வைத்திருக்கும் போதுதான் கொஞ்சம் கண்மூடி தூங்குகி றாள்.

இவளை சுமந்துக் கொண்டு, அடுப் பூதி சமைப்பதற்குள் கண் அவிந்துவிடுகி றது. ஒன்று இருந்தால் ஒன்று இல்லை. கடைக்குட்டி பையனுக்கும், ஆசை கணவ னுக்கும் வாய்க்கு ருசியாக குழம்பு வைத்து எவ்வளவோ நாளாகிவிட்டது. வீடுதேடி வந்த நாத்தநாருக்கு ஒரு நூல் சேலை வாங் கிக் கொடுத்த கடனை இன்னும் அடைக்க முடியவில்லை. நாளைக்காவது குழந் தையை டவுன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போக வேண்டும்.

மழைக்காலம் வருவதற்குள் இந்த வருடமாவது வீட்டுக் கூரையை கண்டிப் பாக மாற்ற வேண்டும். எவ்வளவுதான் வேலை செய்தாலும், கண்ணாடி வளைய லுக்குக் கூட வழியில்லாமல் கை மூளியாக இருக்கிறது. மனுஷன் கிழிந்த மேல் துண்டை மேலுக்கு போர்த்திக் கொண்டு போவதை பார்ப்பதற்கே மனசுக்கு கஷ்ட மாக இருக்கிறது.

நெருப்பு ஜுவாலையாக, சுற்றி விரிந் திருக்கும் இந்த வாழ்க்கை பாதையுடனாகத் தான் அவள் தனது குடும்ப பாரத்தை இழுத் துச் செல்ல வேண்டும் என்னதான் கவன மாக அடியெடுத்து வைத்தாலும் ஒரு அடி நகர்ந்தால் இரண்டடி சறுக்கும்.

குளிர்சாதன பெட்டி




இடுப்பில் சுற்றிய சேலை கிழிந்துப் போன பிறகும் மாற்று சேலை வாங்குவதை தள்ளிப்போட்டு, அரிசி சோறுக்கு பதில் கம்மங்கஞ்சி குடித்து, உடம்பு சுகம் இல்லா தபோதும் வேலைக்கு போய்... மாடாக உழைத்தாலும் கரை சேர முடியாது.

இந்த ஏழை உழைப்பாளிகளின், விவ சாயிகளின் வாழ்க்கைக்கு எந்த ஒட்டு உற வும் இல்லாத ஏணி வைத்தாலும் எட்டாத வாழ்க்கையில் சுகமாக மிதக்கிறது மேட்டுக் குடி கும்பல்.

விருந்து உபச்சாரம், நண்பர்களுடன் பொழுதுபோக்கு என்று இரவு விடுதிகளில் முகம் தெரியாத வெளிச்சத்தில் கூத்தடித்து விட்டு போதையில் வீட்டுக்கு வந்து நுரை மெத்தையில் விழும்போது நேரம் நடுநி சியை எட்டிவிடுகிறது.

இப்போது நுரைமெத்தைக் கூட பழைய பாணியாகிவிட்டது. படுக்கும் போது இலவம் பஞ்சு காற்றில் பறப்பது மாதிரி சுகம் தெரிய வேண்டும். அதற்காக இப்போது வெதுவெதுப்பான, குளிர்ந்த நீர் பரப்பிய மெத்தைகள் (Water bed) வந்து விட்டது.



இன்பெராமெட்டிக் குசினெட், கைதேர்ந்த சமையல்காரன்!

குழந்தைகள் முதல் தம்பதிகள் 'சைஸ்' வரை தனித்தனியாக இருக்கிறது. விலை ரூ.3000-லிருந்து 12,000 வரை! இப்படி பல மெத்தைகளை ஆளுக்கு தனிதனியாக வாங்கிப் போட்டு புரள்கிறார்கள்.

இன்னும் குறிப்பாக, மேகக் கூட்டத் தின் நடுவே படுத்துறங்குவது போன்று படுக்கை அறையைத் தேர்ந்த உள் அலங் கார நிபுணர்களை வைத்து அலங்கரிக்கி றார்கள். படுக்கை அறைக்கு என்று பிரத் யேகமான நீல வண்ண பூச்சு 15 சாயல்க ளில் இருக்கிறது. காலை வானம், மாலை வானம், கடற்கரை வானம், குளிர்கால வானம், கோடைகால வானம், இரவு வானம், இப்படி....

உழைப்பாளிகளின் குடிசைகளில் அடுப்பங்கரையும் அதுவே படுக்கை அறையும் அதுவே. அதிகம் போனால் 10 அடிக்கு 10 அடி அறை ஒன்று அடுப்பங்க ரையை ஒட்டியிருக்கும். கல்யாணமான மகள் வீட்டுக்கு வந்தால், பெற்றோர்கள் வாசலுக்கு (வீதி) வந்துவிடுகிறார்கள். சாதாரண பாய்கூட எல்லோருக்கும் இருக் காது. துணி அடைத்த தலையணையும், சாதாரண போர்வையும் கூட அவர்களுக்கு ஆடம்பர பொருட்கள்!

கட்டிய வேட்டியையும் முந்தானை யையும் போர்த்திக் கொண்டு முடங்கிக்

படிப்பகம்

www.padippakam.com

கொள்கிறார்கள். குழந்தைகள் கொசுவுக்கும், குளிருக்கும் சிணுங்கி, அடி வாங்கி உறங்கிப் போவதும், காதில் புகுந்த எறும்பை தண்ணீர் ஊற்றி எடுப்பதும் இரவு நேர வேதனைகள். சமயத்தில் தேள் கடித்து, பாம்பு கடித்து உயிருக்கு ஊசலாடுவதும், உயிர் போவதும் கூட நடக்கிறது.

காலை 8 மணிக்கு மேல் நுரை மெத்தையிலிருந்து வெளிவரும் மேட்டுக்குடி கும்பல் நுரைபொங்கும் காபி அல்லது ஊட்டம் தரும் பானத்தில் (ஹார்லிக்ஸ், விவா, பூஸ்ட்...) கண்ணை திறக்கிறது. காலை பத்திரிக்கையை மேய்வது, தியானத்தில் மூழ்குவது, உடற்பயிற்சியில் இறங்குவது, உடற்பயிற்சிக்கு நாயையும் உடன் அழைத்துக் கொண்டு ஓடுவது என்று காலைக் கடமைகளை முடிக்கிறது.

அதன்பிறகு கழிப்பறை, பூஜை அறை, குளியல் அறையைத் தாண்டி ஆளுயரக் கண்ணாடிமுன் தம் உடம்பை பார்ப்பதற்குள் முழு நாளில் கால்வாசி நாள் கடந்திருக்கும். பிறகு உணவு மேஜைக்கு வருகிறார்கள். ஓட்டல்களில் காலை உணவுக்கு தயாரிக்கப்படும் விலைஉயர்ந்த சிற்றுண்டிகள் அனைத்தையும் வீட்டிலேயே தயாரிக்கிறார்கள். சைவம், அசைவம் இரண்டும் தயாராகி இருக்கிறது.

இதற்காக அவர்கள் வீடுகளில் சமையல் அறை என்ற பெயரில் ஒரு நவீன சமையல் ஆலையே நிர்மானிக்கப்பட்டு இயங்குகிறது. 'கேஸ்' அடுப்பு, குக்கர், பான் குக்கர், மில்க் குக்கர், கிரைண்டர், மிக்ஸி, பிரிட்ஜ், 'வாஷிங்மெஷின்', 'வேக்கம் கிளினர்', 'வாட்டர் பில்டர்', 'டிஷ் வாஸர்' 'வாட்டர் ஹீட்டர்', 'ஹேர் டிரையர்', 'சோடா மேக்கர்', 'மைக்ரோவின் மேக்ரோவேவ் ஓவன் குக்கர்', 'இன்பெராமெட்டிக் குசினெட்', 'தர்மோவேர் ஹாட்பாட்', 'மொபைல் கிச்சன்', 'கிச்சன் பிளாட்பார்ம்' இப்படி ஏராளமான சமையல் சாதனங்கள், வீட்டு வேலை இயந்திரங்கள், இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அரிசி சாதம் முதல் மாட்டுக்கறி வரை குக்கரில் சமைக்கலாம். 6 நிமிடத்திலிருந்து 20 நிமிடத்திற்குள், அனைத்தையும் வேக வைத்துக் கொடுத்துவிடும்.

வறுக்க, பொறிக்க, குழம்பு வைக்க பான் குக்கர். பால் காய்ச்ச 'மில்க் குக்கர்'. மாவு அரைக்க கிரைண்டர். பருப்பு பொடி, மிளகாய் பொடி, துவையல், மாவு பிசைய, காய்கறி நறுக்க, பழரசம் தயாரிக்க மிக்ஸி. அழுகும் பொருட்களை பச்சைப்பசேல் என்று பாதுகாக்க, தயிர், பால், முட்டை, இறைச்சி, பழரசம் கெடாமல் இருக்க, குளிர்பானம் தயாரிக்க, 'பிரிட்ஜ்'.

குடிநீரை சுத்திகரிக்க, சூடுபடுத்த, வாட்டர் பில்டர், வாட்டர் ஹிட்டர். ஈரக் கூந்தலை உலர வைக்க ஹேர் டிரையர், பாட்டிலில் அடைத்த சோடா, குளிர் பானங்கள் தயாரிக்க 'சோடா மேக்கர்'.


தயாரித்த உணவு பண்டங்களை பல மணிநேரங்கள் அனல் பறக்கும் சூடில் வைத்திருக்க ருசி குறையாமல் அழகான பல அளவு பாத்திரங்கள், 'தர்மோவோ ஹாட்பாட்'. கை அலம்பும் குழாயிலிருந்து,



'சமையல் ஆலை' இயக்குநர், டாம்பீகமான பொறுப்பு!

காய் நறுக்கும் கத்திவரை பாத்திரங்கள், தட்டுகள், மளிகை சாமான் டப்பிகள், கரண்டிகள் வரை 'சில்'வரில் அடுக்கிவைத்திருக்கும் நகரும் சமையல் மேடை, 'மொபைல் கிச்சன்', 'கிச்சன் பிளாட்பார்ம்'. பத்து பாத்திரங்களை தேய்த்து, அலம்பி உலர வைத்து கொடுக்கும் 'டிஷ்வாஷர்.

**வாஷிங் மெஷின்:** 10 ஜோடி அழுக்குத் துணிகளை துவைத்து, அலசி, உலர வைத்து கொடுக்கும். நுண்கணிப்பொறி அமைப்பின் மூலம் தானே இயங்கும். ஒரே நேரத்தில் 4 கிலோ எடையுள்ள அழுக்குத் துணிகளை வெளுத்து உலர வைக்கும். பட்டு, கம்பளி, பருத்தி, பாலியெஸ்டர் துணிகளுக்கு ஏற்ப துவைக்கும். அலசும்



வெந்நீர், தண்ணீர் இரண்டையும் கொட்டும் குளியல் தொட்டி; காலால் இயக்கலாம்.

நீரையும், கழிவு நீரையும் தேவைக்கேற்ப இணைப்பிலிருந்து உறிஞ்சும், வெளியேற்றும். கடினமான, தரைவிரிப்புகளையும் வெளுக்கும். இத்தனைக்கும் உத்தரவு கொடுத்து விட்டால் போதும். ஒரு வேலையும் செய்ய வேண்டியதில்லை.

**மைக்ரோவின் மைக்ரோவேவ் ஓவன் குக்கர்:** வானொளிப் பெட்டிப் போன்ற அமைப்பு கொண்ட கண்ணடி திரைக்கு பின்னே அடுப்பு மேடை. அதன்மேல் வைக்கும் உணவுப் பொருட்கள் மின்காந்த அலைகள் மூலம் வெப்பம் பரவி நம் கண்ணெதெரில் அணுஅணுவாக வேகும். 9 நிமிடத்தில், பைன் ஆப்பிள் கேக், கேரட் அல்வா, சிக்கன் 65 மணக்க மணக்கத் தயாரித்து கொடுக்கும்.

பருப்பு டால், சோறு போன்ற 101 உணவு வகைகளை 6 நிமிடத்தில் தயாரிக்கும். வறுக்கவும், பொறிக்கவும், வேக வைக்கவும், வதக்கவும் என்று கட்டளையிட்டு விட்டால், குறித்த நேரத்தில் அவ்வேலையை முடித்துவிடும்.

வரிசையாக இருக்கும் பொத்தான்களை சரியாக அழுத்தி கட்டளையிட்டால் தான் அது தன் பணியை செய்யும். தவறாக பொத்தான்களை அழுத்தினாலோ, அரைகுறையாக கட்டளையிட்டாலோ, அது இயங்காது. அவ்வளவு சமத்து! 10 டிகிரியிலிருந்து 100 டிகிரி வெப்பம் வரை தேவையான அளவுக்குக் கூட்டலாம், குறைக்கலாம். இதை குழந்தையும் இயக்கலாம்! திரையை திறந்து உணவை வைத்து பொத்தானை அழுத்தினால் தேவையான உணவு தயார்! அதற்குமுன் இதை இந்தியாவிற்கு ஜப்பானிலிருந்து கடத்தி வந்தார்கள். இப்போது இந்தியாவிலேயே தயாராகிறது. விலை ரூ.9000.

**இன்பெராமெட்டிக் குசினெட்:** பப்ஸ், ரொட்டி, சமுசா, கொழுகட்டை, கேக்

படிப்பகம்

www.padippakam.com

போன்றவற்றை 6 நிமிடத்தில் தயாரிக்கும் மின்சாரத்தில் இயங்கும். 'சூட்கேஸ்' போன்று திறந்து பொருளை வைத்து மூடி, 'ஒயரை' மின் இணைப்பில் செருகிவிட்டால்... எல்லாம் தயார்!

இப்படி விதம்விதமாக தயாரித்து வக்களையாக விழுங்கிவிட்டு, ஆளுக்கு ஒரு பக்கம் ஊர்மேய கிளம்பிவிடுவார்கள் மகனோ, மகளோ 2 சக்கரவண்டியிலோ, அல்லது 4 சக்கர வண்டியிலோ கிளம்பி படிக்க போய் விடுவார்கள். 'லேடீஸ் கிளப்பு'களுக்கு, நண்பர்களின் வீடுகளுக்கு அரட்டையடிக்க தலைவி கிளம்பிவிடுவார். ஊரை அடித்து உலையில் போடும் திட்டத்தை வகுத்துக் கொண்டு வீட்டைவிட்டு தந்தை கிளம்ப வீடே வெறிச்சோடி போகும். திரும்பவும் இரவு அதே போதையில் வீடு திரும்பும் மேட்டுக்குடி சோம்பேறி கும்பல்.



நுரை மெத்தை; சுகம் தரும் துணைவன்

விரயம், ஊதாரித்தனம், சோம்பேறிதனம், ஒட்டுண்ணிதனம் இவைதான் மேட்டுக்குடி வர்க்கத்தின் சாரம்சம்.

உழைப்பாளி வர்க்கமோ எதிலும் சேமிப்பு, சிக்கனம், சுறுசுறுப்பு சுயமாக நிற்பது என்று வாழ்க்கையை சவாலாக ஏற்கிறது. சொல்ல முடியாத வறுமையில் உழன்றுக் கொண்டு துன்பத்தில் வாடுகிறது. கடுமையாக உழைக்கிறது.

உழைப்பாளி மக்கள் தனிநபராக அல்ல குடும்பத்தோடு உழைத்தாலும் கட்டிக் கொள்ள மாற்று உடை இல்லை. எவ்வளவோ நவீனங்கள் வந்தபிறகும் இன்றளவும், பெரும்பாலான ஏழை விவசாயக் குடும்பங்களில் மண் சட்டிக்கு மேல் எதுவும் இல்லை. 3 வேளை அரிசி சோறே அவர்களுக்குக் கிடைத்தற்கரிய பலகாரமாக இருக்கிறது.

கம்மங்கூழில் மோர் ஊற்றிக் குடித்தால் அது ஆடம்பரம், அவர்களுக்கு! உழைப்பில் கரையேறிய ஆடையை ஒரு ரூபாய் சோப்புக்கட்டியில் துவைப்பதுதான் அவர்களது அதிகப்பட்ச சலவை.

இன்றளவும் நகர்ப்புறங்களில் கூலி தொழிலாளர்களின் குடும்பப் பெண்கள், தலையில் சுள்ளிக் கத்தையுடனும், மடியில் உப்பு மிளகாய் சாமான் அரிசியையும் சுமந்து செல்வதைப் பார்க்கலாம்! என்ன கொடுமை! எறும்புகூட பலநாள் உணவை புற்றில் சேர்த்து வைத்திருக்கிறதே! எறும்பைவிட கேவலமாக அல்லவா உழைக்கும் மக்களின் வாழ்க்கை இருக்கிறது!

உழைக்கும் மக்களில் எவ்வளவோ பேர், குறிப்பாக சென்னை மண்ணடியில், சிறுநீர் கழிக்கும் சாலையோரத்தில், சாணம் பூசி இடம் பிடித்து குழந்தைகளை படுக்க வைக்கிறார்கள். இப்படிக் கோடிக்கணக்கான மக்கள் நகரக் குடிசைகளிலும் சாக்கடை ஓரங்களிலும் ஒண்டிக் கொண்டிருக்கிறார்கள். கிராமத்துக் குடிசைகளிலே சாணம் மொழுகிய மண் குடிசைகளிலேவாழ்கிறார்கள்.

ஆனால், வண்ண வண்ண வழுவழுப்பான 'டைல்ஸ்'கள் பதித்த மேட்டுக்குடியின் மாளிகைகளை பெருக்கி சுத்தம் செய்வதற்குக் கூட 'வாக்குவம் கிளீனர்' என்ற மின்சாரத் துடைப்பம் அதாவது சக்கரம் பொருத்தப்பட்ட இயந்திரப் பெட்டியுடன் நீண்ட, பெருத்த குழாய் இருக்கும். தரையின் மீது அந்தக் குழாயின் தலையை நகர்த்திக் கொண்டே போனால், தரையில் உள்ள சிறு சிறு தூசுகளான குப்பைகளைக் கூட அது உறிஞ்சி சுத்தப்படுத்திவிடும்.

நாட்டின் வளர்ச்சியிலும் நிர்மாணத்திலும் பெரும்பங்கு வகிக்கும் உழைப்பாளி மக்களையும், அவர்களின் குழந்தைகளின் வாழ்க்கை தேவைகளையும் திட்டமிட்டு புறக்கணிக்கிறது அரசு. மாறாக மேட்டுக்குடி சோம்பேறிகளின் ஊதாரித்தனத்திற்கு தீனி போடவும், அக்கும்பலின் வக்கிர உல்லாசத்திற்கு தேவையானதை தயாரிக்கவும் உற்பத்தி செய்யவும் நாட்டின் அரிய செல்வாதாரங்களை திருப்பி விடுகிறது.



சலவை இயந்திரம்; அபூர்வமான வேலையாள்!

நாட்டின் 10 சதவிகிதத்திற்கும் குறைவான இந்த கும்பலுக்காக மட்டுமே நாட்டின் அரசியல் பொருளாதாரம் இயங்குகிறது. இந்த ஆடம்பர நுகர்பொருள் மோகத்தை நடுத்தர வர்க்கத்தின் மேல் தட்டு மக்களிடமும் வலிந்து திணிக்கிறது. மேட்டுக்குடி சோம்பேறிகளின் அரசு. தவணை முறையில் சகலத்தையும் அவர்களின் வீடு தேடி வந்து கொட்டுகிறார்கள்.

உழைக்கும் மக்களோ என்றும் போல, இந்திய பொருளாதாரத்திற்கோ, அதன் நுகர் பொருள் சந்தைக்கோ அறிமுகம் இல்லாதவர்களாக வாழ்ந்து மடிகிறார்கள்.

■ குணசேகரன்

தனியார் மருத்துவர்கள், மருந்துக் கடைகள் சந்துக்கு சந்து வந்து பெருகிப் போய்விட்டன. ஒரு நோய்க்கு பல நூறு மாத்திரைகள் உருவாகி லட்சக்கணக்கில் வகைவகையான விளம்பரங்களும் - மருந்து கம்பெனிகளின் வியாபாரப் போட்டியும் அதிகரித்து வருகின்றன. மொத்தத்தில் மருந்து - மாத்திரைகளை உற்பத்தி செய்வதோ, வியாபாரம் செய்வதோ மற்ற தொழில்களைவிட லாபகரமாகிவிட்டது

சுற்றுப்புறச் சுகாதாரக் கேடு, அடிப்படை வசதியின்மை, சத்தில்லாத உணவுகள் - இவைகள் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு பல நோய்களை உருவாக்குகின்றன. இவர்கள் அரசு மருத்துவமனையின் இழிந்த நிலையுடன் போராடி உயிரைப் பாதுகாக்க முடியாததினால் தனியார் மருத்துவத்தையும் - மருந்து கடைகளையும் நோக்கித் தள்ளப்படுகிறார்கள். கடன் உடன் பட்டாவது - தலையை அடகு வைத்தாவது சிகிச்சை பெற முயலும். தனியார் மருந்துகளை தேடிவரும் இவர்கள் மருந்து விலையேற்றத்தால் திண்டாடுகிறார்கள். ஏன், ஓரளவு வசதியும் மருத்துவப் படியும் கிடைக்கும் நடுத்தர வர்க்கப் பிரிவினரையே கூட இந்த மருந்து விலையேற்றம் திணறவைத்து கடன் குழியில் தள்ளிவிடுகிறது. மருந்துக் கம்பெனிகள் அடிக்கும் கொள்ளைக்கு அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் உடந்தையாக இருப்பதால் மருந்துகளின் விலை மேலும் பல மடங்கு உயரப் போகிற அபாயம் உருவாகிவிட்டது.

பாசிச ராஜீவ், புதிய மருந்து கொள்கை கொண்டுவந்து 320க்கும் மேற்பட்ட மருந்துகளின் மீதுள்ள அரசின் விலை நிர்ணயக் கட்டுப்பாட்டை நீக்கி கடந்த இரண்டு வருடமாக மருந்துகளின் விலையை ஒன்று முதல் இரண்டரை மடங்கு வரை அதிகமாக்கினார். அதாவது, உயிர்காக்கும் - நோய் தடுப்பு மருந்துகளாகிய உயிராதாரணமான மருந்துப் பட்டியலிலுள்ள மருந்துகளின் உற்பத்தி செலவுடன் 22 சதவிகிதத்திற்கு மேல் லாபம் வைக்கக் கூடாது என்பது அரசின் விலை நிர்ணய கட்டுப்பாட்டுச் சட்டம் (DPCO). விலை நிர்ணய கட்டுப்பாட்டில் இல்லாத மருந்துகளுக்கு மருந்து கம்பெனிகளே விலையை தீர்மானித்துக் கொள்ளலாம் என்பதன் மூலம் '84-ஆம் ஆண்டில் 520 மருந்துகளுக்கு மேலுள்ள விலைநிர்ணயக் கட்டுப்பாட்டை நீக்கி பாதை திறந்துவிட்டார் பாசிச ராஜீவ்.

ஆனால், இன்று மேலும் 100 வகையான மருந்துகள் மீதே உள்ள விலை நிர்ணயக் கட்டுப்பாட்டையும் நீக்குவதற்கு மருந்து கம்பெனி முதலாளிகள், அதிகாரிகளின் - அரசியல்வாதிகளின் மூலம் பணத்தை வாரி இறைத்து முயற்சித்து வருகிறார்கள். இதனால் மீண்டும் பல மடங்கு மருந்து - மாத்திரைகளின் விலையேறி நடுத்தர, ஏழை எளிய மக்கள் மருத்துவத்தைப் பற்றி யோசிக்கவே முடியாத நிலை உருவாகி வருகிறது.

இந்தியாவில் உற்பத்தியாகும் அனைத்து வகை மருந்துகளின் உற்பத்தியையும் - விலையைத் தீர்மானிப்பதையும் 5 இந்திய மருந்து கம்பெனி முதலாளிகள்

படிப்பகம்

www.padippakam.com

# மருந்து விலையேற்ற அபாயம்




ஏகபோகமாக்கி வைத்திருக்கிறார்கள். இது வல்லாமல் அந்நிய செலாவணி தடுப்புச் சட்டத்தின் கீழும் சட்டத்திற்கு உட்பட்டாமலும் பல பன்னாட்டு நிறுவனங்கள் பினாமிகள் மூலம் இந்தியாவிலேயே மூலதனமிட்டு மருந்து தயாரித்து வருகின்றன.

இந்திய கம்பெனிகள் மற்றும் அந்நிய கம்பெனிகள் இரண்டுமே, விலை நிர்ணய கட்டுபாடில்லாத மாத்திரைகளில் கொள்ளை லாபமடிப்பதோடு, விலை நிர்ணய கட்டுபாட்டில் உள்ள மாத்திரைகளிலும் லாபமடிக்க... மாத்திரைகளின் உரைகளை வண்ணமாகவும் - பளபளப்பாகவும் மாற்றி விலையை கூட்டுவது, கலவையில் 1 அல்லது 2 சதவீதம் ரசாயனப் பொருட்களை, அளவு கூட்டியோ, குறைத்தோ கலந்து கட்டுப்பாடு பட்டியலில் இல்லாத மாத்திரையாகக் கணக்குகாட்டி விலையைக் கூட்டுவது, அதிகாரிகளை - அரசியல்வாதிகளை ஊழல்படுத்தி, விலை நிர்ணய கட்டுப்பாட்டை மீறி மாத்திரைகளில் லாபத்தை கூட்டுவது போன்றவைகள் மூலமாக குறுக்கு வழியில் கொள்ளை அடிக்கின்றன. இருந்தாலும், பன்னாட்டு நிறுவனங்களோடு இந்திய மருந்து கம்பெனிகளால் போட்டிப் போட முடியவில்லை.

ஏனெனில், மாத்திரைகள் தயாரிப்பதற்கான அடிப்படை மருந்து வகைகளையும் இந்திய கம்பெனிகளே தயாரிக்க வேண்டியுள்ளது. ஆனால், பன்னாட்டு நிறுவனங்கள், அவைகளை வெளியிலிருந்து (அவைகளது தாய் கம்பெனியிலிருந்து) இறக்குமதி செய்து கொள்வதோடு அவற்றை இங்கே இந்திய கம்பெனிகளுக்கு - சிறுதொழில் திட்டத்தில் நடந்துவரும் மருந்து கம்பெனிகளுக்கு - அதிக விலையில் விற்றும் கொள்ளையடித்து வருகின்றன.

இத்தகைய பன்னாட்டு நிறுவனங்களெல்லாம் ஒன்றிணைந்து பம்பாயில் 'இந்திய மருந்து தயாரிப்பாளர்கள் சங்கம்' (OPPI) என்ற அமைப்பை ஏற்படுத்தி 1970 ஆம் ஆண்டு முதலே இவைகள் ஆதிக்கம் செலுத்தி வந்தாலும், 1977ல் உருவாக்கப்பட்டிருந்த அரசின் விலை நிர்ணய கட்டுப்பாடு சட்டத்தின் மூலம் இவைகளின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், புதிய மருந்து கொள்கையின் மூலம், 40 சதவிகிதம் வரை அந்நிய மூலதனம் இருந்தால் இவைகள் இந்திய கம்பெனிகளாகவே அங்கீகரிக்கப்படும் என பன்னாட்டு நிறுவனங்களின் கொள்ளைக்கு பாதை திறந்துவிட்டார், பாசிச ராஜீவ். இதனால், பன்னாட்டு நிறுவனங்களின் கிளைகள், இந்தியாவில் உள்ள சிறுதொழில் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் மருத்துவ பட்டதாரிகளை பயன்படுத்தி உரிமம் பெற்று பினாமி (இந்திய) கம்பெனிகளாக பற்றிப் படர்ந்துள்ளன. இப்படி பம்பாயிலுள்ள ஒரு பன்னாட்டு நிறுவனம் மட்டும் 23 வகை மருந்துகளை தயாரித்து வருகிறது. ஒவ்வொரு பன்னாட்டு நிறுவனத்தின் மாத வருமானமும் அரசு விதித்துள்ள வரம்புகளை மீறி 50 லட்சம் ரூபாய் வரை அதிகரித்துள்ளன என அரசே புள்ளிவிவரம் தருகிறது.

இப்பன்னாட்டு நிறுவனங்கள், இந்திய கம்பெனிகளின் மருந்து உற்பத்தியின் அளவைப் போல 20 மடங்கு அதிகமாக இந்தியாவில் மருந்து உற்பத்தி செய்து நமது உழைப்பையும் - உயிரையும் உறிஞ்சி அளவில்லாத சொத்துக்களை கொள்ளையடித்துச் செல்கின்றன. மருந்துச் சந்தையிலே இப்பன்னாட்டு நிறுவனங்களோடு போட்டியிட முடியாமல் இந்திய ஏகபோக கம்பெனிகள் வீழ்ச்சியுறுகின்றன. எனவே, இதை காரணம் காட்டியே இந்திய ஏகபோக முதலாளிகள், விலைநிர்ணய கட்டுப்பாடுள்ள 100 வகையான மருந்துகளின் மீதுள்ள சட்டத்தை நீக்கும்படி கோரி அரசியல்வாதிகள் மூலம் பல வழிகளில் முயற்சி செய்துவருகிறார்கள். இதுமட்டுமல்லாமல், விலைநிர்ணய மருந்துபட்டியலில் உள்ள உயிராதாரமான மருந்துகளை தயாரிப்பதில் மூலதனமிடுவதை குறைத்து உற்பத்தியில் முடக்கத்தை ஏற்படுத்தியும் அரசுக்கு நெருக்கடி கொடுக்கின்றனர்.

விலைநிர்ணய மருந்து கட்டுப்பாட்டு பட்டியலில் உள்ள உயிராதாரமான அடிப்படை மருந்துகளை இந்திய கம்பெனிகள் 1:75 என்ற விகிதத்திலும், அந்நிய கம்பெனிகள் 1 : 5 என்ற விகிதத்திலும் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது அரசு விதித்துள்ள சட்டம். ஆனால், இது ஏட்டளவில் மட்டுமே உள்ளது. 1989-90 ஆம் ஆண்டு மட்டும், ரூ.808 கோடிக்கு தயாரிக்கப்பட வேண்டிய அடிப்படை மருந்துகள், ரூ.575 கோடிக்கே தயாரிக்கப்பட்டுள்ளன.

அடிபபடை மருந்துகளின் தட்டுப்பாடும், 100 மருந்துகளின் மீதுள்ள விலை நிர்ணய கட்டுப்பாடு சட்டத்தை நீக்கும் அபாயமும் மருந்து - மாத்திரைகளின் விலையேற்றம் பல மடங்காகிவிடும் என நமக்கு எச்சரிக்கின்றன.

இந்திய மருந்து கம்பெனி முதலாளிகளின் உற்பத்தி முடக்கத்தினாலான நெருக்கடியும், மருந்து விலையேற்றத்தால் மக்கள் மத்தியிலிருந்து வரும் எதிர்ப்புணர்வும் இதற்காக எதையாவது செய்யும்படி அரசை நிர்ப்பந்தித்தன. பாசிச ராஜீவ் ஆட்சியில் மருந்துகளின் தரம்பற்றியும், விலையேற்றம் - மருந்து கம்பெனிகளின் நிலைமை பற்றியெல்லாம் ஆய்வு செய்வதற்காக கெல்கர் கமிட்டி நிறுவப்பட்டது. இதில் உள்ள பெரும்பான்மையான அதிகாரிகள் ஏற்கனவே, இந்திய மருந்து கம்பெனிகளுக்க விசுவாசமாக இருந்தவர்கள். மேலும், இவை வெளியிட்ட ஆய்வு முடிவுகளில் உள்ள புள்ளிவிபரங்கள் அனைத்தும் மருந்து கம்பெனி முதலாளிகள் ஏற்கனவே அறிவித்திருந்தவைகள். இறுதியில் இதன் முடிவுகள் இந்திய ஏகபோக மருந்து கம்பெனிகளுக்குச் சாதகமாகவும், வக்காலத்து வாங்குவதாகவுமே அமைந்துள்ளன.

ராஜீவ்காந்தி, தனது ஆட்சியில் பன்னாட்டு மருந்து கம்பெனிகளுக்கு சேவகம் செய்வதிலேயே குறியாக இருந்துவிட்டதால், இன்று வி.பி.சிங் அரசு மீது நம்பிக்கை வைத்து கெல்கர் கமிட்டி முடிவுகளையே ஆதாரமாக காட்டி விலை நிர்ணய கட்டுப்பாட்டை நீக்கக் கோரி தமது நெருக்கடிகளை அதிகமாக்கியிருக்கிறார்கள், இந்திய மருந்து கம்பெனி முதலாளிகள்.

இதுவல்லாமல், சில மருந்து கம்பெனிகள் மீது அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து அதன் மோசடிகளில் சிலவற்றை வெளிக் கொண்டு வருவதுகூட, ஆளுங்கட்சி அரசியல்வாதிகளைப் பயன்படுத்தி போட்டி மருந்து கம்பெனிகள் எதிர் கம்பெனிகளை பழிவாங்க புகார் கொடுத்து எடுக்கப்படும் முயற்சிகளே என ஓர் இரசாயனத் துறை உயர் அதிகாரியே ஒப்புக் கொள்கிறார்.

ஆனால், 2000 வருடத்திற்குள் எல்லோர்க்கும் அடிப்படை மருத்துவ வசதி - கல்வி வசதி - சுகாதார வசதிகள் கொடுக்கப்பட்டு இந்தியாவை சொர்க்க பூமியாக மாற்றப் போவதாக அறிவித்த ராஜீவ் அரசின் மோசடியையே இன்றைக்கும் வேறு வார்த்தையில் பேசி நாடகமாடி வருகிறார்கள், இன்றைய ஆட்சியாளர்கள்.

ஆக... அரசு அமைக்கும் ஆய்வு கமிட்டிகளோ, எடுக்கும் நடவடிக்கைகளோ வெறும் கண் துடைப்புகள் தான் என்பதை படம் பிடித்துக் காட்டி, ஆட்சியாளர்கள் எல்லாம் கையாலாகாதவர்கள் பொறுப்பற்றவர்கள் - மக்கள் விரோதிகள் என்பதையே இவைகள் மேலும் நிரூபிக்கின்றன.

■ ராசு

படிப்பகம்

www.padippakam.com

## சாராயப் படுகொலை

### தடையை மீறி ஊர்வலம்

பண்ருட்டி தட்டாஞ்சாவடியில், கள்ளச்சாராய கடையில் விஷச் சாராயம் விற்கப்பட்டு நூற்றுக்கணக்கான கூலித் தொழிலாளர்கள் உயிர் பறிபோனதாலும் பாதிக்கப்பட்டதாலும் பல குடும்பங்கள் அனாதையாக வீதியில் வீசப்பட்ட கோர சம்பவம் சென்ற மாதம் நடந்ததை அறிவோம். இதில் பலியான குடும்பங்களுக்கு ரூ.2000 கொடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி மாற்றுவழி செய்துவிட்டதாக தம்பட்டமடித்துக் கொண்டது தமிழக அரசு. பிணத்தை அடக்கம் செய்வதற்கும் மற்ற செலவுகளுக்கே தீர்ந்துபோக இன்று வாழ்க்கையே சூன்யமாகி நிற்கிறார்கள். இதை விட கொடுமையாக விஷச் சாராயத்தால் உடல் பலவீனமடைந்து வேலைக்குப் போக முடியாதவர்களுக்கு அரசு எவ்வித நிவாரணமும் கொடுக்கவில்லை; இவர்களது வாழ்க்கையும் கேள்விக்குறியாக உள்ளது.

எனவே, தமிழக அரசிடம் பலியான குடும்பங்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூ.25 ஆயிரமும் வழங்கக் கோரியும், படுகொலைக்கு காரணமான - உடந்தையாக இருந்த போலீஸ் அதிகாரிகளை தூக்கிலிடக் கோரியும், அரசாங்க மதுக்கடைகள், கள்ளச் சாராயக் கடைகள் அனைத்தையும் இழுத்து மூடக் கோரியும், அதே சமயம் உழைக்கும் மக்களிடம் மது அருந்தவதை தவிர்த்து கள்ளச்சாராய ரவுடிகளை அடித்து விரட்டக் கோரியும் ம.க.இ.க., வி.வி.மு., தொ.பி.கு. ஆகிய அமைப்புகள், ஊர்வலமும் - ஆர்ப்பாட்டமும் 5.3.90 அன்று நடத்த திட்டமிட்டு அனுமதி கோரப்பட்டது.

கள்ளச்சாராய வியாபாரிகளுடன் கள்ள உறவு வைத்திருக்கும் கடலூர் டி.எஸ்.பி. சந்தர்ராஜன் மற்றும் இன்ஸ்பெக்டர் ஜியேந்திரன் அனுமதி தர மறுத்து விட்டனர். ஆனால், அதே நாளில் மருத்துவப் பிரதிநிதிகள் ஊர்வலமும், 3.3.90 அன்று தி.க. ஊர்வலமும் அனுமதி தரப்பட்டு நடந்தன.

போலீசின் இத்தகைய சதியை அம்பலப்படுத்தும் முகாமாகவும் தடையை மீறி ஊர்வலம் ஆர்ப்பாட்டம் திட்டமிடப்பட்டு 5.3.90 அன்று மாலை மஞ்சை நகர் மணிக்கூண்டிலிருந்து கலெக்டர் அலுவலகம் வரை குறைந்த சக்திகொண்டு நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்டவர்களை யாரையும் கைது செய்யவில்லை. மேலும் அம்பலப்பட்டு போய்விடக் கூடாது என்பதால் வாலைச் சுருட்டிக் கொண்டது போலீஸ் கும்பல். குறைந்த சக்திகளைக் கொண்டு நடத்தியதால் ஊர்வலம் வீச்சாக பரந்த மக்களை சென்றடையவில்லை. இருந்தாலும், போலீசும், ஓட்டுக் கட்சிகளும் பாதிக்கப்பட்ட மக்களின் நண்பனாக வேஷம் போடுவதையும் அம்பலப்படுத்துவதாக அமைந்தது.

இவண்,

**மக்கள் கலை இலக்கிய கழகம் - கடலூர்**

## சுயநிதிக் கல்வி நிறுவன மோசடிகள்

நல்ல வேலை - வசதியான கார் பங்களா - மாதம் 5000 ரூபாய் வரை வீட்டிற்கு பணம் அனுப்பலாமென ஆசைக் காட்டி இந்தியாவில் வேலையில்லாமல் அவதிப்படும் இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று நட்டாற்றிலே தவிக்க விடுவதற்காக நகரங்களிலே அலைகிறது ஒரு கும்பல். அதுபோல், சுயநிதி தொழிற்கல்வி நிறுவனங்கள், தொழிற் நகரங்களிலே குவிந்து தொழிலாளி - நடுத்தர வர்க்க குடும்பங்களில் உள்ள மாணவர்களை சேர்த்துக் கொண்டு போய் பிறகு அவர்களது வாழ்க்கையை வீணாக்கி கேள்விக்குள்ளாக்குகின்றன.

இதற்கு தகுந்தாற்போல், தொழிலாளர்களும் - நடுத்தர வர்க்க குடும்பத்தினரும் தமது பிள்ளைகளுக்கு தனதுதொழிற்சாலையிலோ - அலுவலகங்களிலோ ஒரு நல்ல வேலை வாங்கித் தர விரும்புகிறார்கள். அதனால் அதற்குதவக்கூடிய தொழிற்கல்விப் படிப்பிற்காக எதையாவது விற்றாவது அல்லது கடன் உடன்பட்டாவது ஆயிரக்கணக்கில் செலவு செய்ய முன்வருகிறார்கள். இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி காசு பண்ணுகிறார்கள் சுயநிதிக் கல்வித்துறை முதலாளிகள். இதற்கு தொழில் நகரமாகிய நெய்வேலி சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது.

சீதையம்மாள் பாலிடெக்னிக் - சிவகெங்கை, தனபாண்டியன் பாலிடெக்னிக் - மதுரை, இராமு சீதை பாலிடெக்னிக் - காரியப்பட்டி, கள்ளழகர் பாலிடெக்னிக் - மேலூர், செந்தில் ஆண்டவர் பாலிடெக்னிக் - செங்கோட்டை, கோமதியம்மாள் பாலிடெக்னிக் - மலையடிக்குறிச்சி, அன்னை வேளாங்கண்ணி பாலிடெக்னிக் - பண்ருட்டி போன்ற பல பாலிடெக்னிக் கல்லூரிகளின் பிரதிநிதிகள் நெய்வேலிக்கு வந்து ஹோட்டலில் அறை எடுத்து தங்கி வருடந்தோறும் மாணவர்களை சேர்க்கிறார்கள். மதிப்பெண்கள் பற்றியோ, வயது வரம்பு பற்றியோ பிரச்சினையில்லை; ஆனால், அதற்குத் தகுந்த 'நன்கொடை' மட்டும் கொடுத்தால் போதுமென மாணவர்களைச் சேர்க்கிறார்கள்.

இப்படி மாணவர்களை சேர்த்ததில், அரசு விதி மீறி அதிகமாக சேர்த்து, தேர்வு எழுத முடியாத நிலைக்கு 31 மாணவர்களை தள்ளியிருக்கிறது சிவகெங்கையிலுள்ள சீதையம்மாள் பாலிடெக்னிக் கல்லூரி. சென்ற ஆண்டு சேர்க்கப்பட்ட மாணவ - மாணவிகளை இரண்டாமாண்டு இயந்திரவியல் பிரிவில் அரசு விதி மீறி பிரித்து ஒதுக்கியது. இதனால், இந்த வருடம் 31 மாணவர்களுக்கு தேர்வு எழுத அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எனவே, அவர்கள் மூன்றாம் பருவத் தேர்வுகள் எழுத முடியாமல் போய்விட்டது.

இத்தகைய நிலையில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களுக்கு பல சமாதான கடிதங்கள் போட்டுள்ளதோடு 4ம் பருவத் தேர்வுக்கான கட்டணத்தை கட்டும்படியும் ஓலையனுப்பி இருக்கிறார் தலைவர் நாகராஜன். இப்படி அதிகபட்சமான மாணவர்களைத் தேர்வு எழுத அனுமதிக்கப்படாத பொழுது, கட்சி செல்வாக்கையும், பண பலத்தையும் பயன்படுத்தி அனுமதி வாங்குவது வழக்கமான நடைமுறை. அதே போல், நளினி சிதம்பரம் (முன்னாள் மத்திய அமைச்சரின் மனைவி) இவர்களுக்கு எப்பொழுதும் உதவி வந்தவர்; இம்முறை எதிர்கட்சியாகி விட்டதால் கையை விரித்து விட்டார். எனவே, நாகராஜன், கல்வி அமைச்சரைப் பார்த்து ஏற்பாடு செய்து விட்டதாகவும், தொழில் நுட்பக் கல்லூரிகளின் இயக்குனரைப் பார்த்து ஏற்பாடு செய்து வருவதாகவும் கூறி தொடர்ந்து ஏய்த்து வருகிறார்.

நிர்வாகத்தின் இத்தகைய தில்லுமுல்லுகளை மோசடிகளைப் புரிந்து கொண்டு மாணவர்கள் குரல் எழுப்பியதால் பல முறை கல்லூரியை இழுத்து மூடி மிரட்டி வருகிறது நிர்வாகம். இருந்தும் பாதிக்கப்பட்ட மாணவர்களும், கல்லூரியில் உள்ள மற்ற பிரிவு மாணவ - மாணவியர்களும் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

இதுபோல், கல்வியை வியாபாரமாக்கி கொள்ளையடிப்பது, மோசடி செய்வது, மாணவர்களின் வாழ்க்கை வீணடித்து கேள்விக்குள்ளாக்குவது போன்ற அநியாயங்களை அரசியல்வாதிகள், அதிகாரிகள் துணையுடன் செய்துவரும் சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் தமிழகமெங்கும் விரவிக் கிடக்கின்றன. சிதறிக் கிடக்கும் தொழிற்கல்லூரி மாணவ - மாணவியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இத்தகைய கொடுமைகளுக்கு முடிவுகட்ட முன்வர வேண்டும்.

தமிழக அரசே! ● சுயநிதிக் கல்வி நிறுவனங்களை தடை செய் ● பாதிக்கப்பட்ட மாணவர்கள் அரசு நிறுவனங்களில் சேருவதற்கு வழி செய்து கொடு ● பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அந்தந்த சுயநிதி நிறுவனங்களிடமிருந்து நஷ்டஈடு வாங்கி கொடு ● மாணவர்களை மோசடி செய்த சுயநிதி கல்வி நிறுவன முதலாளிகளுக்கு தகுந்த தண்டனை கொடு — இது போன்ற கோரிக்கைகளுக்காக இறுதிவரை உறுதியுடன் போராடுவதில்தான் இப்பிரச்சினைக்குரிய தீர்விருக்கிறது. ஏனென்றால், இன்றைக்கு சீதையம்மாள் பாலிடெக்கினிக்கில் மாணவர்களுக்கு நேர்ந்தது நாளை மற்ற கல்லூரிகளில் உள்ள மாணவர்களுக்கு நேராது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

சீதையம்மாள் பாலிடெக்னிக் மாணவ - மாணவிகள் அநியாயத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறார்கள். அதே சமயம் நெய்வேலி தொழிலாளர்கள் நெய்வேலியில் முகாமிட்டிருக்கும் சுயநிதிக் கல்லூரிகளின் தரகுக் கும்பலை அடித்து விரட்டுகிற போராட்டத்தை தொடங்குவதன் மூலம் மாணவர்களின் போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியும்.

இவண்

**தொழிலாளர் பிரச்சாரக்குழு, நெய்வேலி, வடலூர்.**

படிப்பகம்

www.padippakam.com



## ரஷ்ய மாற்றங்கள்

# திணறும் கோர்பி கும்பல்

இனியும் போலிக் கம்யூனிஸ்டுகளால் நியாயப்படுத்தி ஏய்க்க முடியாத அளவுக்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதலாளித்துவ நரகத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுகின்றன. இவை ''சோசலிசத்தின் வேறுபட்ட வடிவங்கள்'', ''புதிய சோசலிச முயற்சிகள்'', ''சில நல்ல அம்சங்களும் கெட்ட அம்சங்களும் இவற்றில் உள்ளன'' என்று அணிகளையும் மக்களையும் ஏய்த்து வந்த போலிக் கம்யூனிஸ்டுகளின் முகத்தில் கரியைப் பூசிவிட்டு, அம்மணமான முதலாளித்துவத்தை நிலைநாட்டும் மாற்றங்கள் அடுத்தடுத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அரங்கேறி வருகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பாத்திரம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகிய லெனினிசக் கோட்பாடுகளைத் தூக்கியெறிந்துவிட்டு கம்யூனிஸ்ட் கட்சியையே இந்நாடுகள் கலைத்துவிட்டன. மேலை நாடுகளைப் போல பல கட்சி ஜனநாயக அரசியல் அமைப்பை நிறுவியுள்ளன. கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்ததே அவமானம் என்று கட்சி உறுப்பினர் அட்டைகளைக் கொளுத்தி, மார்க்சிய ஆசான்களது உருவப்படங்கள் - சிலைகளை அப்புறப்படுத்துகின்றன. அல்பேனியா தவிர இதர கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஏகாதிபத்திய முதலீடுகளை சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்கின்றன. அரசுத்துறை நிறுவனங்களைக் கலைத்து தனியார் முதலாளிகளும் பங்கேற்கும் கூட்டுப் பங்கு நிறுவனங்களாக மாற்றியதோடு, முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தையும் நிறுவி விட்டன. முற்றிய முதலாளித்துவத்தின் நோய்க் குறிகளான லஞ்சம், விபச்சாரம், எயிட்ஸ், சூதாட்டம் முதலான சீரழிவுகள் இப்போதே அந்நாடுகளைக் கவ்வியுள்ளன.

கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களை, சர்வாதிகாரத்துக்கு எதிரான ஜனநாயகத்துக்கான போராட்டம் என்று நியாயப்படுத்தி ஆதரித்து ஊக்குவித்தார் ரஷிய அதிபர் கோர்பசேவ். ஆனால் கிழக்கு ஐரோப்பாவில் நடக்கும் வேகமான மாற்றங்களைப் போல ரஷியாவிலும் ஏற்று செயல்படுத்த முடியாமல் இப்போது நிலை தடுமாறி நிற்கிறார்

சோசலிசம் - கம்யூனிசத்தின் பெயரை உச்சாடனம் செய்து கொண்டே தனது கிளாஸ்நாஸ்ட், பெரஸ்த்ரோய்கா கொள்கைகள் மூலம் முதலாளித்துவ சீர்திருத்தங்களைக் கொண்டுவர முயற்சித்தார். ஆனால் கோர்பியின் கொள்கைகள் கடந்த ஐந்தாண்டுகளில் அற்புதங்கள் எதையும் சாதிக்கவில்லை. ''புதிதாக எதையும் சாதிக்காமல், பழைய நிலைக்குத் திரும்பவும் முடியாமல் நட்டாற்றில் நிறுத்திவிட்டது'' என்று வேகமான முதலாளித்துவ மாற்றங்களை விரும்பும் கோர்பியின் எதிராளிகள் சாடுகின்றனர்.

மறுபுறம், வேகமான சீர்திருத்தங்களைக் கோரும் எதிர்ப்பாளர்களின் செல்வாக்கும் பலமும் ரஷியாவில் வேகமாக கூடி வருகிறது. கோர்பியை விட எதிர்த்தரப்பின் முக்கிய புள்ளியான போரிஸ் யெல்ஸ்டினுக்கு செல்வாக்கு அதிகமாக உள்ளதென ரஷிய பத்திரிக்கைகளே கருத்துக் கணிப்பு நடத்தி செய்தி வெளியிட்டுள்ளன. பிப்ரவரி முதல் வாரத்தில் கூடிய ரஷிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி பிளீனம் பெரஸ்த்ரோய்கா கொள்கையின் தோல்வியை பகிரங்கமாக ஒப்புக் கொண்டு கோர்பியின் கையாலாகா தலைமையைச் சாடியுள்ளது. இதுதவிர, மார்ச் 4ந் தேதியன்று தேசிய இன குடியரசுகளின் பாராளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தலில் கோர்பியின் ஆட்கள் படுதோல்வியடைந்து எதிர்ப்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர். லெனின் கிராடு, மாஸ்கோ நகர கவுன்சில்களில் ''ஜனநாயகத் தேர்தல் குழு'' என்ற எதிர்த்தரப்பினர் ஆகப் பெரும்பான்மையாக வெற்றி பெற்று கோர்பி கும்பலை அச்சுறுத்துகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக, அஜர்பெய்ஜான் தேசிய இனத்தவரின் போராட்டத்தை ஒடுக்க ராணுவத்தை ஏவியும் கூட அடக்க முடியவில்லை.

எனவே, பீதியில் உறைந்து போயுள்ள கோர்பி கும்பல், கட்சியிலும் ஆட்சியிலும் தனது தலைமையைத் தக்க வைத்துக் கொள்ளவும், தனது வீழ்ச்சியைத் தற்காலிகமாகத் தள்ளிப் போடவும் அவசரமாக சில முடிவுகளை அறிவித்துள்ளது.

★ தேசிய இனங்களுக்கு பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படும்.

★ இனி, ரஷியாவில் தனியார் சொத்துக்கும் மூலதனத்துக்கும் சட்டபூர்வ அங்கீகாரம் அளிக்கப்படும்.

★ இனி, ரஷ்யாவில் கம்யூனிஸ்ட் கட்சி தலைமைப் பாத்திரம் வகிக்காது. அது வெறுமனே அரசுக்கு வழிகாட்டுதல் தரும் ஒரு அரசியல் சக்தியாக மட்டுமே செயல்படும் என்று அரசியல் சட்டத்தின் 6-வது விதியைத் திருத்தியுள்ளது கோர்பி கும்பல். இதன் மூலம் 70 ஆண்டு காலமாகப் பின்பற்றி வந்த நடைமுறையைத் தூக்கியெறிந்துவிட்டு முதலாளித்துவ மீட்சிக்கும் பல கட்சி ஜனநாயக ஆட்சிக்கும் கதவை அகலத் திறந்து விட்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் சோசலிசப் பொருளாதாரம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற லெனினிசக் கோட்பாடுகளை குழிதோண்டிப் புதைத்துவிட்டு அம்மணமான முதலாளித்துவ ஆட்சி முறையை நோக்கி ஓடுகிறது கோர்பி கும்பல். இதில் வேடிக்கை என்னவென்றால் இங்குள்ள போலிக் கம்யூனிஸ்டுகள் தமது 'தீக்கதிர்' நாளேட்டில் ரஷியாவில் தனியுடமையே கிடையாது என்று பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டிருக்கும் போதுதான் ரஷிய குருபீடம் தனிச் சொத்துடமையை அங்கீகரித்துச் சட்டமாக்கியது.

கோர்பி கும்பல் கொண்டு வந்துள்ள இந்த மாற்றங்கள், எதிர்த்தரப்பினருக்கு விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்தும் முயற்சிதான். நேற்றுவரை இந்த மாற்றங்களை எதிர்த்துவிட்டு, நிர்ப்பந்தங்கள் காரணமாக இன்று அவற்றையே தனது கொள்ளைகையாக அறிவிக்கும் கோர்பியின் நவீன உத்திதான் இது. ஆனாலும் தனிமைப்பட்டுள்ள கோர்பி கும்பல் தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள அமெரிக்காவைப் போல ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளது. இதற்கான சட்டமும், சுப்ரீம் சோவியத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது.

இதன்படி அதிகாரம் அனைத்தும் குடியரசுத் தலைவரின் கரங்களில் குவிக்கப்படும். அவர் யாரையும் கலந்தாலோசிக்காமல் ராணுவச் சட்டத்தை அறிவிக்க முடியும். பிரதமர், உயரதிகாரிகள், உச்ச நீதிமன்ற நீதிபதி உட்பட அனைவரையும் தமது விருப்பத்திற்கேற்ப நியமிக்க அல்லது நீக்க முடியும். நேரடி சர்வஜன வாக்கெடுப்பு மூலம் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று புதிய ஆட்சிமுறையின் தன்மைகளை கோர்பி கும்பல் சித்தரிக்கிறது. இதன் மூலம் ஆட்சிக்கு வரும் ஒருவர் தனது கொள்கைகளை சிறப்பாகவும், தடையின்றி முழுமையாகவும் செயல்படுத்த முடியும் என்று நம்பச் சொல்கிறது.

'இது கோர்பசேவ் தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள செய்யும் சூழ்ச்சி; சர்வாதிகாரத்தை நோக்கி நாட்டை இழுத்துச் செல்லும் முயற்சி' என்று எதிர்ப்பாளர்கள் அம்பலப்படுத்தி சாடுகின்றனர். 'படிப்படியான சீர்திருத்தங்களை அல்ல; முழுமையான வேகமான மாற்றம்தான் இன்றைய தேவை' என்று கோரும் முதலாளித்துவ வாதிகளின் அலை மீண்டும் ரஷியாவில் வீசத் தொடங்கிவிட்டது. அற்ப சீர்திருத்தங்களாலும் அதிகாரத்தாலும் இதை அடக்கவிடப் பார்க்கிறது கோர்பி கும்பல். ஆனால் ஓங்கி வீசும் பிற்போக்கு அலை அவரையே மூழ்கடித்துவிடும் என்பதைத்தான் நிலைமைகள் தெளிவாகக் காட்டுகின்றன.

● பாலன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை 600 015

படிப்பகம்

www.padippakam.com



கையில் தீவட்டிகள் ஏந்த இப்படி ஆயிரக்கணக்கான பெண்கள் மார்ச் 8ந் தேதி அன்று புதுடில்லியில் ஊர்வலமும் நாடாளுமன்றக் கட்டிடத்தைச் சுற்றி மனித சங்கிலி ஆர்ப்பாட்டமும் நடத்தினர். பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள், குழந்தைகளுக்கு உழைப்பாளர்களுக்கு எதிரான கொடுமைகளை ஒழிக்கக் கோரி இவர்கள் போராடினர். சாதி, மதத்தின் பேரால் பெண்களைக் கற்பழிப்பது, பெண்கள், குழந்தைகளைப் படுகொலை செய்வதை தடுக்கும்படி கோரினர். பெண்கள், குழந்தைகளுக்கு உரிமைகள் மறுத்து ஒடுக்கப்படுவது, சமவேலைக்கு சமஊதியம் அளிக்க மறுப்பது, வேலை வாய்ப்புகளில் பெண்களை ஒதுக்குவது, வரதட்சிணைக் கொலைகள் ஆகியவற்றுக்கு எதிராக முழங்கினர். பெண்கள் - குழந்தைகளது உரிமைகள் நலன்களுக்காகத் தொடர்ந்து போராடுவதாக உறுதி எடுத்துக் கொண்டார்கள். மாணவிகள், குழந்தை உழைப்பாளர்கள், பெண் சமூக சேவகர்கள், குழந்தைகளோடு தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

இதோ இங்கே தின்று கொழுத்தவர்களும் கூலிக்குக் கூட்டி வரப்பட்டவர்களும் எதற்காக முழக்கமிடுகிறார்கள் தெரியுமா? எந்தப் பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகள், நியாயமான உரிமைகளுக்காகவா? இல்லை. 'எங்களுடைய இதயம் ராஜீவுக்காக அடித்துக் கொள்கிறது!' 'ராஜீவுக்கு சிறப்புக் காவல்படையின் பாது
காப்பை திரும்பக் கொடு!' என்றுதான் கூச்
சல் போடுகிறார்கள். சொந்த நாட்டு மக்க
ளையே கொன்று குவித்ததால் பழிவாங்கத்
துடிப்பவர்களிடமிருந்து ஒளிந்து வாழ
வேண்டியவரானார் ராஜீவ் காந்தி. ஆண்
டுக்கு 4 கோடி ரூபாய் பாதுகாப்புச் செலவு
செய்துவந்தார். இப்போதும், 125 பாதுகா
வலர்கள், கூட்டங்களுக்கு என்று 25 சிறப்
புக் காவலர்கள், எண்ணிக்கை அறிவிக்கப்
படாத அதிரடிப்படையினரும், கருப்புப்
பூனைகளும் காவலுண்டு. குண்டு துளைக்
காத 4 கார்கள், குண்டு துளைக்காத 5
மெய்க்காப்பு கார்கள், 18 ஓட்டுநர்கள்,
விமானப் பயணங்களின் போது 5 அதிகாரி
கள் உள்ளனர். இவ்வளவையும் ஒரு
இணை, ஒரு துணைக் கமிஷனர் தகுதிக
ளில் 2 அதிகாரிகள் மேற்பார்வையிடுகின்ற
னர். இப்போது மத்திய அரசில் உள்ள 21
மந்திரிகளுக்கும் சேர்த்து நாளொன்றுக்கு
ஆகும் பாதுகாப்புச் செலவுக்கு சமமாக
அதாவது 30000 ரூபாய் ராஜீவுக்கு மட்டும்
செலவிடப்படுகிறது. இந்த லட்சணத்தில்
ராஜீவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடு போதாத
என்று கூச்சல் போடுகிறது காங்கிரசு கட்சி.

மக்கள் அடிப்படைத் தேவைகள், உரி
மைக்கான கோரிக்கைகள் எவ்வளவோ
இருக்கின்றன. ஆனால் மறைமலைநகர்
ரயில் நிலையத்துக்கு காமராஜ் பெயர்
வைப்பது, ராஜீவுக்குப் பாதுகாப்பு ஏற்
பாட்டை அதிகரிப்பது என்று அற்ப விவகா
ரங்களுக்காக போராட்டக் கூத்தடிக்கிறது
காங்கிரசு. எதைத் தின்றால் பித்தம் தீரும்
என்று அலையும் இந்த ஓட்டுண்ணிக் கும்
பலை எவ்வளவு காலம்தான் சகித்துக்
கொள்வது?




படிப்பகம்